பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=


புதுமை : 01 | 25 பெப்ரவரி 2017 | விதி : 37



**கொல்லப்பட போகிறாரா ட்ரம்ப்?**



**ஆறாவடு**



**சிறைக்குள் சின்னம்மா**



**யா / உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்**



# இது போராடும் காலம்

ஒளிப்படம் : பிரவீன்சிவா

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




# ஆறாவடு

■ சயந்தன்

இந்தியாவிற்குப் படகில் போகிற சனங்களை ஓட்டிகள் மணற்திட்டுக்களில் இறக்கிவிட்டுத் திரும்பி விடுவார்களாம். பின்னர், மீனவர்களோ, இந்தியக் கடற்படையோ வந்து அழைத்துச் செல்வார்கள் என்று இவன் கேள்விப்பட்டிருந்தான். அப்படியொரு நினைப்பு இங்கு யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஓட்டிகள் பதற்றமடைந்திருக்கவில்லை. எப்பொழுதும் போலவே இருந்தார்கள். "கடல் கொந்தளிப்புக்களினால் பயணம் சற்று தாமதமாகலாம்" என்று, அதற்கேற்ப அரிசியைக் குறைத்துச் சமைக்கச் சொல்லியிருந்தார்கள். "சமையல் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை" என்றான் பிறகு எல்லோரும் உடல் சுருண்டு கிடைத்த இடங்களில் படுத்துக் கிடந்தனர். வள்ளத்தை எவரும் துப்புரவாக்குவதில்லை. ஓங்காளித்த இடங்களில் வாந்தி காய்ந்து கிடந்தது. அவ்வப்போது தண்ணீர் அவற்றின் மேல் தெளிக்க மீளவும் ஈரலிப்பானது.

கடற்கொந்தளிப்பினாலும், அச்சத்தினாலும் கடந்த நாட்களில் என்னென்னவோ நடந்து விட்டிருந்தன. சரியாகச் சொன்னால் சோமாலியக் கொள்ளையர்களின் வருகையோடு வள்ளத்தில் ஏழைரைச் சனியன் ஏறியிருக்க வேண்டும்.

அன்றைக்கு கொள்ளையர்களின் படகு கண்ணில் பட்டபோது, "இன்னொரு அகதிப்படகாக இருக்கலாம்" என்றுதான் எல்லோருக்கும் தோன்றியது. சற்றுநேரத்தில் அங்கிருந்து புறப்பட்ட வெடிச்சத்தம் அந்த நினைப்பைத் துடைத்தழித்துப் போட்டது. அதற்குப் பிறகு நடந்தவை எல்லாம் கனவைப் போல இருக்கிறது.

வள்ளத்தின் ஓட்டத்தை முற்றாக நிறுத்தி ஓட்டிகள் தளத்திற்கு வந்தார்கள். வள்ளம் அலைகளில் ஆடியபடியிருந்தது. காற்றின் திசையில் நகர்வது போலவும் தோன்றிற்று.

"பயப்பிட வேண்டாம், இது நோர்மல்தான். அவங்க சொல்ற மாதிரியே செய்யுங்க" என்றான் ஓட்டி. எல்லா முகங்களிலும் பேயறைந்திருந்தது.

பிரதீபன் இவனுக்குப் பின்னாக நின்றிருந்தான். இவனது காதருகில் "இவங்கள் இடி அமீன்ரை ஆக்கள் போல இருக்கு. இடி அமீனை தெரியும்தானே, அவன் மனிதர்களை வெட்டித் துண்டாக்கிச் சாப்பிடுகிற ஆள் என்று தினமுரசில படிச்சிருக்கிறேன்" என்று முணுமுணுத்தான். இவனுக்கு அப்படித் தோன்றவில்லை. "ஆபிரிக்காவில் ஏதேனும் விடுதலை இயக்கப் போராளிகளாக இருக்கலாம்" என்று நினைத்துக் கொண்டான். அவர்களும், இருபது இருபத்தைந்து வயதுக்காரர்களாக, அப்படித்தான் இருந்தார்கள். கைகளில் வைத்திருந்த துப்பாக்கிகள் துருப்பிடித்திருந்தன. அவற்றை நிறைய இடங்களில் கம்பிகளால் கட்டியும், செலோரேப்பால் சுற்றி ஒட்டியும் வைத்திருந்தார்கள். இவன் தன் கைகள் இரண்டையும் மேலே உயர்த்தினான்.

எல்லோரும் வரிசையில் உட்காரப் பணிக்கப்பட்டார்கள். இவன் தனது "ட்ரவலிங்" பையை மடியில் வைத்தபடி கால்களை நீட்டி உட்கார்ந்தான். எல்லோரிடமிருந்தும் பைகளை வாங்கினார்கள். சின்னப்பெடியன் இன்னமும் நினைவு தப்பிய நிலையில் கீழே படுத்திருந்தான். அவனது "ட்ரவலிங்" பையை கொள்ளையர்களில் ஒருவன் காவி வந்தான். பைகளைச் சோதனை செய்து மணிக்கூடுகள், பேர்ஸ்சுகள், பெல்ட்டுகள், புதிய உடைகள் அனைத்தையும் வேறாக்கினார்கள்.

ஒருவன் முழுக்க உடைந்த ஆங்கலத்தில் இவர்களோடு பேசினான். "சிறிலங்காவில் இருந்தா வருகிறீர்கள்?"

"ஓம்"

"தமிழர்களா? சிங்களவர்களா?"

"தமிழர்களும் சிங்களவர்களும்"

அவன் கண்களைச் சுருக்கி கழுத்தை வளைத்து ஆச்சரியமாகப் பார்த்தான்.

"அங்கே இப்பொழுது சண்டை இல்லையே..."

யாரும் இதற்குப் பதில் சொல்லவில்லை. சோமலியர்களிடம் நிறைய மணிக்கூடுகளும், டொலர்களும் சேர்ந்திருந்தன. இவனது பேர்சில் அகிலாவின் படம் இருந்தது.

அதனைக்காட்டி "மனைவியா..." என்று கேட்டவன் சினேகமாகச் சிரித்தான். இவன் சற்று இயல்பு நிலைக்கு வந்திருந்தான். மற்றவர்களிலும் பதற்றம் குறைந்திருந்தது. சோமலிய இளைஞர்கள் தங்களது படகுக்குள் குதித்தார்கள். அவர்கள் புறப்படும்போது "சந்தோசமாகப் போய் வாருங்கள்" என்றொருவன் சொன்னான்.

அன்றைக்கு இரவு கடல் திமிறத் தொடங்கியது. லேசான குளிரும், மழைத் தூறலும் பின்னேரத்தில் இருந்தே தொடர்ந்தன. கவிந்த இருளுக்குள் வள்ளத்தில் டிம் லைட் வெளிச்சமும், கடலுக்குள் தேய்ந்த பிறைநிலவின் வெளிச்சமும் பரவியிருந்தன. நிலவில் பதிந்திருந்த பார்வையை இவன் சட்டென்று தாழ்த்திக் கொண்டான். "இது நாலாம் பிறையாக இருக்கக்கூடும். நாலாம் பிறை நாய்ப் பிறை" என்று அம்மா சொல்லுவாள். "பார்த்தால் கெட்ட காரியங்கள் நடக்கும்" என்று அவள் மேலும் சொல்லியிருந்தாள்.

உடல் குளிர்ந்துகொண்டு வந்தது. கீழறைக்குள் கிடக்கிற சின்னப் பெடியனின் உடல் முழுவதுமாகக் குளிர்ந்திருந்தது அவனது விரல்கள் விறைத்திருந்தன. உள்ளங்கைகளைத் தேய்த்துப் பெரியய்யா இரண்டு, மூன்று நாட்களாகச் சூடேற்றினார். அவனிடம் முன்னர் இருந்த அனுங்கலும் இப்பொழுது இல்லை.

இன்றைக்கு மதியம் நடுங்கும் புறக்கைகளால், இவன் சின்னப் பெடியனின் மூக்கில் விரலை வைத்துப் பார்த்தான். என்னவோ அப்படிப் பார்க்க வேண்டும் போலத் தோன்றியது. கைகள் மூச்சுக்காற்றை உணரவில்லை. இவனுக்குள் பயம் பெரும் அலையைப் போல உருவானது. சின்னப் பெடியனின் கன்னங்கள் கட்டியாக இறுகிப் போயிருந்தன. இவன் "பெரியய்யா" என்று கத்தினான்.

முதலில் ஓட்டிகள் உள்ளே இறங்கினார்கள். பிறகு பிரதீபன் பிறகு பண்டார, பிறகு பெரியய்யா என்று வந்தார்கள். இவனுக்கு வார்த்தைகள் திக்கத் தொடங்கின.

"பெரியய்யா... இவன்ரை மூச்சை ஒருக்காப் பாருங்கோ..." என்றான்.

பெரியய்யா முழங்கால்களில் உட்கார்ந்து தனது கன்னங்களை சின்னப் பெடியனின் மூக்கினருகே கொண்டு போனார்.

பயம் அவரிலும் தொற்றிக் கொண்டது.

'ச்சீ அப்படியொன்றும் நடந்திருக்காது... "நீயொருக்கா உள்ளங்காலைத் தேய்" என்றார். இவன் பெடியனின் உள்ளங்கால்களைத் தனது மடியில் வைத்துத் தேய்க்கத் தொடங்கினான். அவனில் ஒரு சிறு அசைவையும் காணமுடியவில்லை.

ஓட்டிகளில் ஒருவன் பெரியய்யாவின் அருகில் வந்து அவரது தோள்களைப் பற்றினான். பெரியய்யா திரும்பியபோது அவரது கண்கள் நீரை உகுத்தபடியிருந்தன. ஓட்டி சின்னப் பெடியனின் கண் மடல்களைத் திறந்து பார்த்தான். நெஞ்சில் கைவைத்து கொஞ்சநேரம் அமைதியாக இருந்தான். பிறகு தலையைக் குனிந்தபடி "ஆள்முடிஞ்சுது" என்றான். அதற்குப் பிறகான அவனது வார்த்தைகளில் இவனுக்கு நெஞ்சடைப்பது போல இருந்த. "இப்படியே விடமுடியாது. தூக்கி எறிய வேணும்"

பெரியய்யா விசுக் என்று எழுந்தார். "இப்படியெல்லாம் வாய்க்கு வந்தபடி கதைக்க வேண்டாம்" என்றார்.

"இதனால வள்ளத்தில இருக்கிற மற்றவர்களுக்குத்தான் கூடாது. வேறு நோய்கள் தொற்றலாம்"

"அது அவன் செத்துப் போயிருந்தால் தானே.. எனக்கென்னவோ அவன் உயிரோடதான் இருக்கிறான் என்று தோன்றுது. தயவு செய்து கொஞ்சம் பொறுங்கோ..." பெரியய்யா கெஞ்சுவதைப்போல கேட்டார்.

"இங்கே வருகிற அவ்வளவு பேருக்கும் நாங்கள்தான் பொறுப்பு. சில விடயங்களை நீங்களா உணர்ந்து செய்ய வேணும்" என்றபடி ஓட்டிகள் மேலே ஏறிப்போனார்கள். பெரியய்யா இவனைத் தன்னோடு வைத்துக் கொண்டார். "சின்னப் பெடியனை என்ன பாடுபட்டேனும் உயிரோடு எழுப்பிவிடவேண்டும்" என்பதில் அவர் குறியாயிருந்தார்.

(வலிகள் இன்னும்...)



# இது போராடும் காலம்

■ தமிழரசன்

மக்கள் எப்போது தன்னெழுச்சியாகப் போராட ஆரம்பிக்கிறார்களோ அப்போதே அந்த இனத்தின் விடுதலைக்கான வேட்கையும் சுதந்திரத்திற்கான பயணமும் ஆரம்பமாகிறது.

இலங்கை ஐரோப்பிய காலனிக்கவாதிகளிடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலந்தொட்டே தமிழர்களிடத்தே விடுதலைக்கான வேட்கையும் அதிகரித்துவிட்டது. இந்த வேட்கை அகிம்சைப் போராட்டமாக உருவெடுத்து, ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்து முள்ளிவாய்க்காலுடன் முற்றுப்பெற்று, புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு, மீண்டும் ஈழ மக்களிடமே வந்து நிற்கின்றது.

“தமிழர்கள் இதற்கு முன்னரும் தன்னெழுச்சியாகப் போராடினார்களே?” என்ற கேள்வி எழுவது இயல்பே. அகிம்சைப் போராட்டம் எழுந்த போது தந்தை செல்வாவும் ஆயுதப் போராட்டம் எழுச்சி அடைந்த போது தலைவர் வே. பிரபாகரனும் தமிழ் மக்களை வழிநடத்திச் சென்றனர். இவர்களின் வழிகாட்டலிலேயே மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் இடம்பெற்றன. தவிர அந்த நேரங்களில் அரசியல், ஆயுத வழிகளில் தமிழர்கள் அதீத நம்பிக்கை வைத்திருந்தனர்.

ஆனால் இப்போதோ ஆயுதம் மௌனித்து விட்டது - அரசியலில் மக்கள் நம்பகத்தன்மையை இழந்து விட்ட நிலையில் “நமக்காக நாமே போராட வேண்டும்” என்ற மனப்பாடு மக்களிடையே எழுச்சி பெற்றது. கடந்த ஆட்சியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைத்த மக்கள் போராட்டங்கள் வலுக்கட்டாயமாக அடக்கப்பட்டன. மக்களிடத்தே நீறுபூத்த நெருப்பாக இருந்த எழுச்சி இந்த ஆட்சியில் விளாசி எரியத் தொடங்கியுள்ளது.

இம்மாதத் தொடக்கத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் முன்னெடுத்த உணவு ஒறுப்புப் போராட்டம் எழுச்சி கண்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, கொழும்பு என மாவட்டங்கள் தோறும் ஆதரவுப் போராட்டங்கள் எழுச்சியடைந்தன. என்றுமில்லாதவாறு இந்தப் போராட்டங்களில் மக்கள் - குறிப்பாக இளைஞர்கள் தன்னெழுச்சியாகப் பங்கேற்றனர். வழமை போன்று இதிலும் போராட்டகாரர்களுக்கு தீர்வு கிட்டவில்லை - கிடைக்கப் போவதும் சந்தேகம்தான். ஆனால் இந்தப் போராட்டமே ஏனைய இடங்களில் போராட்டங்கள் வெடிக்க வித்திட்டது.

கேப்பாபிலவில் விமானப்படையினர் ஆக்கிரமித்து நிற்கும் தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் போராட்டத்தைத் தொடங்கினர். வழமை போன்று ஓரிரு நாள்களில் அடங்கிவிடும் அல்லது பொறுப்புவாய்ந்த ஒருவர் வாக்குறுதி அளித்தால் கலைந்துவிடுவர் என்று எண்ணிய அதிகார வர்க்கத்துக்கு சம்மட்டி அடி கொடுப்பதாக அமைந்து விட்டது இந்தப் போராட்டம். மூன்று வாரங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்னமும் நீள்கிறது.

ஜெனீவா கூட்டத்தொடர் மார்ச்சில் தொடங்கவுள்ள நிலையில் இந்தப் போராட்டத்தை அடக்க சாம, தான, தண்ட, பேதத்தை அரசு கையாண்டு விட்டது. ஆனால் மக்களோ அடங்கியபாடாக இல்லை. ஒரு பக்கத்தில் அரசாங்கம் விமானப்படை மூலம் தனது மிரட்டலைத் தொடர மறுபக்கத்தில் மக்களின் உரமிக்க போராட்டம் தொடர்ந்துகொண்டேதான் இருக்கிறது. ஆயுதப் போராட்ட காலத்தில் மக்கள் எழுச்சியடைந்த போதெல்லாம் “சமாதானப் பேச்சு” என்ற சமரச ஆயுதத்தை வீசி மக்களை அடங்கச் செய்த அரசு, காலந்தோறும் இந்த வழிவகையையே கையாண்டு வந்தது.

இப்போதும் இந்த வழிமுறையையே பின்பற்ற ஆளும் தரப்பு முயன்றபோதும் அது மக்களிடம் எடுபடவில்லை. கேப்பாபிலவு மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பிலும் பரவிப்பாஞ்சானிலும் போராட்டங்கள் வெடித்தன. இந்நிலையில் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களை கண்டும் காணாமலிருக்க அரசாங்கம் முயன்றது. இந்நிலையில்தான் கேப்பாபிலவு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக மாணவர்களும் களமிறங்கியிருக்கின்றனர். இது மக்களின் போராட்டத்தை மற்றொரு களத்துக்கு பரிணமிக்கச் செய்திருக்கிறது.

தொடர் போராட்டங்களால் வடக்கு மண் அதிர்ந்து கொண்டிருக்கையில் அரசாங்கமோ ஜெனீவா கூட்டத்தொடரை சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. அரசின் மறைமுக பங்காளிகளாக - போராடும் மக்களின் பிரதிநிதிகளாக நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ தனித்தனியாக சென்று அம்மக்களுடன் பேசித் திரும்புகின்றனர். தங்களை சந்திக்கும் மக்கள் பிரதிநிதிகளை அம்மக்கள் இன்முகத்துடன் வரவேற்றுப் பேசுகின்றனர். ஆனால் அவர்களின் ஓர்மம் குறையவில்லை. போராட்டத்தை கைவிடுமாறு தங்களின் பிரதிநிதிகள் முன்வைத்த விடயத்தைக்கூட அவர்கள் அலசிப் பார்க்கத் தயாராகவில்லை.

கேப்பாபிலவில் பற்றிய இந்த போராட்டத் தீ புதுக்குடியிருப்பு, பரவிப்பாஞ்சான் என்று பரவி நிற்கிறது. ஆனாலும் நில மீட்புக்காகப் போராடுபவர்கள் முக்கிய விடயம் ஒன்றில் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர். வடக்கில் மக்களுக்கு சொந்தமான பல ஆயிரம் ஏக்கர் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து நிற்கிறது. இவற்றைத் தொடர்ந்தும் தம் வசம் வைத்திருப்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. எனவே காணி விடுவிப்புக்காக கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு, பரவிப்பாஞ்சான் என வெவ்வேறு இடங்களில் போராடும் மக்கள் ஒன்றிணைந்து முதலில் ஒரே நிலத்துக்காகப் போராட வேண்டும்.

மக்களின் இந்த ஒன்றிணைவு நிச்சயம் வெற்றியைப் பெற்றுத் தரும். அதைத் தொடர்ந்து தமக்கு சார்பாகப் போராடியோருக்கு ஆதரவாகவும் - ஏனைய நிலங்களை விடுவிக்கவும் தொடர்ச்சியாக - உறுதியான - சக்திமிக்க மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். வலுவான போராட்டங்களினாலேயே எமது வெற்றி உறுதிசெய்யப்படும். மக்கள் எப்போது தன்னெழுச்சியாகப் போராடுகிறார்களோ அன்றே விடுதலைக்கான பாதை திறக்கிறது. இப்போது பற்றிய விடுதலைத் தீ பரவட்டும்... சுதந்திரம் பிறக்கட்டும்...! இது போராடும் காலம். புயலாகும் நேரம். பூகம்பம் எழட்டும் எம் தேசத்தில்.



படங்கள் : மயூரப்பிரியன்

# கடந்தவார சமூக இணையத்தர வரிசையிலிருந்து...




## கிழிஞ்சது சட்டை தெறித்தது முகநூல்!

கடந்த 6 மாத காலமாக சமூகவலைத் தளங்களுக்கு தொடர்ச்சியாக தீனி போட்டு வருவது தமிழ்நாடுதான்.

அப்பலோ தொடங்கி எடப்பாடி வரை அடிபட்டது என்னவோ அ.தி.மு.கவினர்தான். அ.தி.மு.க வின் குடுமிப்பிடி சண்டையில் எதிர்க்கட்சியான தி.மு.க. காணாமலே போய்விட்டது.

'கல்யாண வீடு' என்றால் மாப்பிளையாகவும் 'சாவு வீடு' என்றால் பிணமாகவுமே இருந்து பழக்கப்பட்டுப் போன தி.மு.கவுக்கு அ.தி.மு.க வின் ஊடகக் கவனம் பொறுக்க முடியாமல்தான் போனது. இந்நிலையில் எடப்பாடி அரசு பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய கட்டத்தில், தி.மு.கவுக்க அதிர்ஷ்டக் காற்று அடித்தது.

பேரவையில் ஏற்பட்ட குழப்பத்தில் தள்ளுமுள்ளு ஏற்படவே ஸ்டாலினின் சேர்ட் பொக்கெற் கிழிந்து விட்டது. தொடர்ந்து அவரைக் காவலர்களால் தூக்கிச் சென்று அகற்றினர். 'சேர்ட் பட்டன்களை' திறந்து விட்டபடியே ஊடகங்களின் பார்வையை தன்மீது திருப்பிய ஸ்டாலின் போராட்டம், செய்தியாளர் சந்திப்பு என அப்பார்வையை அப்படியே பதியவைத்தார்.

இவை போதாதா? சமூக வலைத்தளப் பதிவர்களும் ஸ்டாலின் தொடர்பான பதிவுகளையும், மீம்ஸ்களையும் தெறிக்க விட்டனர். பிறகென்ன கடந்த வாரம் முழுமைக்கும் சமூக வலைத் தளங்களில் ஸ்டாலின் பற்றிய பேச்சுத்தான்.


## இன்னும் தணியாத கேப்பாபுலவு

மூன்று வாரங்களையும் கடந்து தொடர்கிறது கேப்பாபிலவு மக்களின் நிலத்துக்கான போராட்டம். இந்த மக்களின் போராட்டத்துக்கு ஊடகங்களும் சமூகவலைதளங்களும் தினமும் ஊக்கப்படுத்தி வருகின்றன.

விமானப் படையினர் போராட்டத்துக்கு தினமும் ஏற்படுத்தும் தொல்லைகளும் மக்களுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்படும் போராட்டங்களும் சமூகவலைதளங்களின் கவனிப்பைப் பெறத் தவறவில்லை. இந் நிலையில் தான் விமானப் படையினர் அறிவிப்புப் பலகை ஒன்றை நாட்டி வாங்கிக் கட்டிக்கொண்டனர்.

"தேவையில்லாமல் உட்சென்றால் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகுவார்கள்" என போடப்பட்ட அறிவிப்பு முகநூல் போராளிகள் சீறிப் பாய்ந்தெழ இது ஒரு வாய்ப்பாகப் போனது. இதைத் தொடர்ந்து அந்த அறிவிப்புப் பலகையில் கீழ்ப் பகுதியை விமானப் படையே உடைத்து அகற்றி விட்டிருந்தது.

கேப்பாபிலவின் சூடு சமூகவலைத் தளங்களில் சற்றுத் தணிய ஆரம்பித்த வேளையில் இந்த அறிவிப்புப் பலகை மீண்டும் முன்னுக்கு கொண்டுவந்து விட்டது.







ஏதாவது ஒரு சர்வதேச தினம் கிடைத்துவிட்டால் போதும், அதை வைத்தே லைக், கொமன்ட்ஸ் என்று அள்ளுவதற்கு வழி பார்த்து விடுவார்கள் இணைய வாசிகள். கொஞ்ச நாட்களாக 'லைக்ஸை' அள்ளுவதற்கான உருப்படியான சர்வதேச தினங்கள் வாய்க்காமல், வெறும் வாயை மென்று கொண்டிருந்த இணையப் போராளிகளுக்கு, அவலாக வந்து சேர்ந்தது உலக தாய்மொழி தினம். எல்லோரும் தமிழ் மொழி பற்றிக் கவிதைகளைப் பறக்க விட்டார்கள். அழிந்து கொண்டிருக்கும் தமிழைக் காக்கப்போவதாக சசிகலா மாதிரி பேஸ்புக்கில் மூன்றுமுறை அடித்துச் சத்தியமும் செய்தார்கள். இன்னும் சிலர் இலங்கையில் நடக்கும் தமிழ்க் கொலைகளை படம் பிடித்து போட்டார்கள். எப்படியோ, நீண்ட நாளைக்குப் பிறகு தாய்மொழி தினத்தின் புண்ணியத்தால் லைக்ஸை வாரிக்குவித்த மகிழ்வோடு எல்லோரும் கலைந்து சென்றார்கள். இப்படி எல்லோரும் தாய் மொழியை ஒரு நாளேனும் கொண்டாடியதால் அது மூன்றாமிடத்தை ஒரு நாளில் எட்டிப் பிடித்துவிட்டது.

## இந்தவார மீம்ஸ் (Meme)




## சுவரில் கொய்தவை

**Rajesh Aravind**

கரண்ட் இல்லாட்டித்தான் வீட்டுப்பிள்ளைகள் உலகத்த பாக்க வெளில வாறாங்கள்.

**Sri Thusikaran**

19 வயதில காதல் செய்யாதே எண்டு கண்டிச்சவே

29 வயதில கலியாணம் செய் எண்டு கட்டாயப் படுத்தினம்.

#கண்டிப்பும்_கட்டளையும்😊😊😊

**Nadesapillai Sivendran**

50 வருட திராவிட ஆட்சி அறிஞர் அண்ணாவில் ஆரம்பித்து 10 அடி நிலத்துக்காக மூன்று உறவினர்களைக் குத்திக்கொலை செய்த எடப்பாடியில் வந்து நிற்கின்றது.

**Kana Praba**

## யாழ்ப்பாண உணவுத் திருவிழா



கம்போடியா, தாய்லாந்து, மலேசியா போன்ற ஆசிய நாடுகளுக்கு உலாத்தப் போன போது அவர்களது பண்பாட்டு விழுமியங்கள், இந்திய கலாசாரக் கூறுகளை இணைத்து கலை பண்பாட்டு நிகழ்வுகளை சாதாரண உணவகங்களில் இருந்து பெரும் ஹோட்டல்கள் வரை நிகழ்த்துவதைக் கண்டு இம்மாதிரி நிகழ்வுகள் நம் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட இடங்களிலும் நடந்தால் எப்படியிருக்கும் என்ற ஆதங்கத்தை முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன்.

அதன் ஒரு எடுத்துக்காட்டாய் கொழும்பு (சினமன் கிராண்ட்) Cinnamon Grand 5 நட்சத்திர ஹோட்டலில் யாழ்ப்பாண உணவுத் திருவிழாவைக் கண்ட போது மன நிறைவு ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தின் உணவுக் கலாசாரத்தில் இருந்து கலை, வடிவ நிகழ்வுகளையும் அழகாகத் தயாரித்து வழங்குகிறார்கள்.

கொழும்பில் இருப்பவர்கள் தவறாது சென்று தரிசியுங்கள்.

இணையவாசிகளுக்கு https://www.facebook.com/puthuvithieditorial/

உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும்.

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# புலியாக மாறிய சிங்கம்

யாழ்ப்பாணம் என்றால் எப்படி நல்லூர் நினைவுக்கு வருகின்றதோ அதே போன்று இலங்கை என்றாலே சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவுக்கு வருவது சிகிரியாதான். இலங்கையின் சுற்றுலாத்துறையே சிகிரியாவை மையமாக வைத்தே கட்டமைக்கப்பட்டுள்ளது. தொன்மையான குகை ஓவியங்களையும், கட்டடச் சிதைவுகளையும் கொண்டிருக்கும் சிகிரியாக்குன்று காசியப்பன் என்னும் மன்னனால் உருவாக்கப்பட்டது என்றும், சிங்கள மக்களின் மூதாதையான சிங்கத்தை மலைக் குன்றில் அவன் வடிவமைத்தான் என்றும் கூறப்பட்டது. குன்றின் உச்சியில் இருக்கும் அரச மாளிகையின் நுழைவாயிலில் செதுக்கப்பட்டிருக்கும் சிங்கத்தின் பாதங்களும், தொலைவில் இருந்து பார்க்கும் போது சிங்கம் போன்ற விலங்கு ஒன்று படுத்திருப்பதைப் போல குன்று தென்படுவதையும் அடிப்படையாக வைத்தே சிகிரியா அல்லது சீகிரி என்று பெயரும் வந்தது.

ஆனால் இந்த மலைக்குன்று இராமாயணத்தில் வருகின்ற இராவணனின் கோட்டை என்றும், அதையே பின் வந்த காலத்தில் மறைந்து வாழ்வதற்காக காசியப்பன் பயன்படுத்தினான் எனவும் இன்னொரு கதையாடல் உண்டு.

இப்போது சிகிரியா பற்றிய மகாவம்சக் கதைகளின் அடிப்படைகளையே ஆட்டம் காண வைக்கும் வகையில் ஒரு ஆய்வு முடிவு வெளிவந்திருக்கிறது.


"சிகிரிய மலைக்குன்றின் உச்சியில், ராஜமாளிகைக்கு செல்வதற்கான வாசலில் உள்ள மிருகமொன்றின் இரண்டு பாதங்களும், சிங்கத்தின் பாதங்கள் அல்ல. அவை புலியின் பாதங்கள். உள்ளூர் மக்களை மட்டுமன்றி, வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளையும் ஏமாற்றி, அங்கிருப்பது சிங்கத்தின் பாதமென்று நம்ப வைக்கப்பட்டுள்ளது. அதனை உரிய திணைக்களம் சரி செய்ய வேண்டும். ராஜமாளிகைக்குச் செல்வதற்கான வாயில் உள்ள மிருகத்தின் கால்களில், தலா மூன்று நகங்களை கொண்ட பாதங்களே உள்ளன. எனினும், சிங்கத்தின் பாதத்தில் முடிகளுடன் கூடிய நான்கு விரல்கள் இருக்கும். மூன்று நகங்களைக் கொண்ட பாதங்களை உடைய விலங்கு புலிதான். சிங்கத்தின் பாத அமைப்புக்கும் புலியின் பாத அமைப்புக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன"

இப்படி அதிர்ச்சியான முடிவுகளை அடித்துச் சொல்லியிருக்கிறது அந்த ஆய்வு. இந்த ஆய்வினைச் செய்தது வெளிநாட்டவர்களோ அல்லது தமிழர்களோ அல்லர். ரங்கிரி- தம்புள்ளை விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் இத்தாமலுவே ஸ்ரீ சுமங்கல தேரரே இந்த ஆய்வு முடிவினை அறிக்கை வடிவில் வெளியிட்டுள்ளார்.

வரலாற்றை தம்மிஷ்டப்படி மாற்றுதல் பேரினவாதிகளுக்கு கைவந்த கலை. சிங்கத்தின் பாதங்களையும், சிங்கத்தின் உருவச் சாயலையும் கொண்டிருந்ததை அடிப்படையாக வைத்தே காசியப்பனின் இராசதானியாக சிகிரியா பற்றிபுனைவுகள் எழுந்தன. ஆனால் இப்போது புலியின் பாதங்களே குன்றில் உள்ளன என்று சிங்கம் புலியாக மாறிய பின்னர், மகாவம்சம் தன் புனைவை எப்படி தக்கவைக்கப் போகின்றது என்பது கேள்விக்குறியே. தூரத்தில் பார்க்கும் போது புலியும், சிங்கமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே தென்படும். அப்படியானால் இதுவரை காலமும் புலிக்குன்றைத்தான் சிங்ககிரி என்று பேரினவாதிகள் உலகையும், உள்ளூர் மக்களையும் ஏமாற்றி வந்திருக்கிறார்கள் போலும்.

சிகிரியக் குகை ஓவியங்கள் இந்தியாவின் அஜந்தாக் குகை ஓவியங்களின் பண்புகளைக் கொண்டிருப்பதும், அது புலியின் பாதங்களின் வடிவமைப்பிலான பாதங்களைக் கொண்டிருப்பதும், சிகிரியாவை அண்மித்த பொலநறுவையில் புலிக்கொடியை ஆட்சிக் கொடியாகக் கொண்ட சோழர்களின் ஆட்சி நிலவியமையும், சிகிரியா சிங்கள மன்னனால் உருவாக்கப்பட்டதல்ல என்ற உண்மையைச் சொல்லக்கூடும். அநேகமாக அது தமிழ் மன்னர்களாலேயே உருவாக்கப்பட்டிருப்பதற்கான சான்றுகளே அதிகம். யார் கண்டது காசியப்பன் கூட ஒரு தமிழ் மன்னனாக இருந்திருக்கக் கூடும். நேர்மையான ஆய்வுகளே உண்மைகளை வெளிக்கொண்டு வரும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# ஏமாறப்போகும் ஐ.நா

வர்சி

கடந்த வருடம் ஜெனிவா தொடரில், இலங்கை அரசு நிறைவேற்றுவதாக இணங்கிய விடயங்களை நிறைவேற்றத் தவறிய பட்சத்தில், மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மாநாட்டில் பங்குபற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறது. கடந்த வருடம் ஐ.நாவிடம் இணங்கிய விடயங்களை நடைமுறைப்படுத்த - 2016 இல் கொடுத்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்த 2019 வரை - மேலும் இரண்டு வருட கால அவகாசத்தை இலங்கை கோரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் "பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இரத்து செய்வது. காவலில் உள்ளவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுப்பது. பாதுகாப்புத் துறையில் மாற்றம் செய்வது" என்று ஐ.நாவிற்கு அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளே அந்த நிவைவேற்றப்படாத வாக்குறுதிகள்.

இந்த நிலையிலேயே அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாட்டில் இலங்கை அரசு கலந்துகொண்டு கால அவகாசத்தைக் கோரவுள்ளது. அந்த கால அவகாசத்தைப் பெறுவதன் மூலம், அரசாங்கம் எதைச் சாதிக்கமுயல்கிறது? தன்மீதான வருடாந்த நெருக்கடியைத் தற்காலிகமாக குறைப்பதுதான் இலங்கையின் நோக்கமா? அல்லது திட்டமிட்டு உலக சமூகத்தை ஏமாற்ற நினைக்கிறதா? என்பதுதான் புரியாத விடயமாகத் தென்படுகிறது. அப்படி கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில், அடுத்தவருடம் நடைபெறும் கூட்டத்தில், வேறு எதைச்சொல்லப்போகிறது? அல்லது வேறு எதைக் கேட்கப் போகிறது? இது ஒரு தொடர்கதையாகத் தானிருக்கப்போவது என்று தமிழர்கள் நம்புகின்றனர்.

யுத்தம் முடிந்து எட்டு வருடங்கள் ஆகின்றன. ஆனால் தமிழர் தாயகப்பகுதியில் குறிப்பிடத்தக்க எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இன்றும், தமது சொந்த நிலத்துக்காக போராடும் அவலமே தமிழ் மக்களுக்கு வாடிக்கையாகிவிட்டது. யாழ்ப்பாணம் வலி.வடக்கில், கிளிநொச்சியில், முல்லைத்தீவில், மன்னாரில் என மக்கள் தமது சொந்த நிலத்திற்காக நாளாந்தம் போராடுகிறார்கள். அரசாங்கத்தின் கூற்றுப்படி பார்த்தால் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முடிந்து விட்டதென்றால், அந்த பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான வழி ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டுமல்லவா? எத்தனை காலம்தான் அவர்களை ஏமாற்றப் போகின்றார்கள்.

அரச தலைவர் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது "வலி.வடக்கு மக்களை ஆறுமாதத்திற்குள் மீள் குடியேற்றுவேன்" என உறுதி அளித்திருந்தார். ஆனால் இன்றும் அந்த மக்கள் நலன்புரி நிலையத்தில்தான் வாழ்கின்றார்கள். தம்மால் முடியுமான சாதாரண விடயங்களைக் கூட நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காத அரசு ஐ.நாவில் மேலும் கால அவகாசத்தை கோரி என்னத்தைச் சாதிக்கப்போகிறது.


தனக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம், சர்வதேசத்தின் கால்களில் விழுவதை வழக்கமாகக் கொண்ட அரசினால், உள்நாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. யுத்தம் முடிவடைந்து எட்டுவருடங்கள் கடந்த நிலையிலும், அந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. ஆகக் குறைந்தபட்சம் ஐ.நாவிற்கு உறுதி அளித்த விடயங்களைக்கூட இன்றுவரை செயற்படுத்தாத அரசு, மேலும் கால அவகாசத்தை பெற்று அந்த மக்கள் வேண்டுவதைச் செயல்படுத்துமா? என்பது கேள்விக்குரிய விடயமே.

இதற்கிடையில், காணாமற்போனவர்களை கண்டறிவதற்கான அலுவலகம் அமைக்கப்பட்டு இற்றோடு ஆறு மாதங்களாகின்றன. அதனை செயற்படுத்தக் கூட அரச தலைவரின் அனுமதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. இத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு இவ்வாறு பின்னடிக்குமென்றால் "ஏனைய விடயங்களில் எவ்வாறு முன்னோக்கி நகர முடியுமென" எனத் தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மகிந்த காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எவ்வாறு போராட்டம் நடத்தினரோ, அதேபோன்றுதான் நல்லாட்சி என்று கூறப்படுகின்ற மைத்திரி-ரணில் ஆட்சியிலும் போராட்டத்தை நடத்துகின்றனர். மகிந்த காலத்தில் எவ்வாறு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது காணிகளை விடுவிக்க மக்கள் கோரினரோ, அதுதான் தற்பொழுதும் நடைபெறுகிறது. எனவே எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமது இனம், தமது மதம், தமது மொழி போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பார்களே ஒழிய, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு அல்ல என்பது கடந்த கால வரலாறுகளிலிருந்து நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இதில், ஐ.நாவிடம் கால அவகாசம் கேட்டால் என்ன, அமெரிக்காவிடம் கால அவகாசம் கேட்டால் என்ன தமிழ் மக்களுக்கு ஒன்றுமே நடக்கப் போவதில்லை. இலங்கை அப்படிக் கேட்கும் பட்சத்தில் ஐ.நாவும் கால அவகாசத்தைக் கொடுத்து விட்டு 2019 வரை காத்திருக்கும் என்பதுதான் உண்மை.

# நான் என்ன செய்வது




■ சிக்மலிங்கம் ரெஜினோல்ட்



**2004** இல், நாங்கள் புதுக்குடியிருப்பிலிருந்து கிளிநொச்சிக்குப் பெயர்ந்து வந்திருந்தோம். யுத்தத்தினால் அழிந்து போயிருந்த கிளிநொச்சியில், குடியிருப்பதற்கான வீடுகளே இருக்கவில்லை. இந்த நிலையில் வாடகைக்கு வீடு கிடைக்குமா? என்று தேடிப் பலரையும் விசாரித்துக் கொண்டிருந்த போது, கூட்டுறவு அலுவலகமொன்றில் றஞ்சியைச் சந்தோம். அங்கே எங்களுக்குத் தெரிந்த ஒருவரிடம் "வாடகைக்கு வீடு கிடைக்குமா?" என்று விசாரித்துக் கொண்டிருந்தபோது, இதைக் கவனித்த றஞ்சி, தன்னருகில் இருந்த எங்களுடைய நண்பரிடம் எங்களைப் பற்றி விசாரித்திருக்கிறார். அவர் விவரம் சொன்னதைத் தொடர்ந்து "நாங்கள் விரும்பினால் தங்களுடைய வீட்டில் குடியிருக்க முடியும்!" என்றார் றஞ்சி. அவர் அங்கே தான் அப்பொழுது வேலை செய்து கொண்டிருந்தார்.

றஞ்சி இப்படிச் சொன்னது, எங்களுக்கு ஆச்சரியத்தையும், கூடவே மகிழ்ச்சியையும் தந்தது. முன் பின் அறிமுகமில்லாத ஒருவர், "தான் இருக்கிற ஒரு ஓலைக் குடிசையில் பாதியைத் தருவதற்காகச் சம்மதித்து அழைக்கிறார்" என்றால் யாருக்குத்தான் ஆச்சரியம் வராது. ஆனால், எங்கள் குடும்பத்தில் எண்ணிக்கை அதிகம். அங்கே றஞ்சியும் கணவரும் மட்டுமே. துணைக்காக இரண்டு நாய்க் குட்டிகளை வளர்த்திருந்தார்கள்.

வீடென்றால் பெரிதாக ஒன்றும் இல்லை. ஒரு சிறிய சமையற்பகுதி. இரண்டு சிறிய அறைகள். அவற்றில் ஒன்றிற்கு கதவு இல்லை. முன்பகுதியில் ஒரு கூடம். அவ்வளவுதான்.

நாங்கள் மறுநாளே எங்களுடைய பொருட்களுடன் அங்கே குடியேறினோம். பொருட்கள் எல்லாவற்றையும் வீட்டில் வைப்பதற்கு அங்கே வசதியில்லை. பெரும்பாலான பொருட்கள் வெளியே மரநிழலில் வைக்கப்பட்டன. மழையில் நனைந்தால் பாதிக்கப்படக் கூடியவற்றை மட்டும் உள்ளே வைத்துக் கொண்டோம். அறையில் றஞ்சியும் கணவரும் படுத்துக் கொள்வார்கள். நாங்கள் கூடத்தில் வரிசையாகத் தரையில்.

ஒரே வீட்டில் ஒரே சமையல். இரண்டு சமையல் செய்வதற்கு றஞ்சியோ கணவரோ ஒத்துக் கொள்ளவில்லை. அவர்கள் மிகக் குறைந்த பொருளாதார வளத்தோடு இருந்தாலும், சமாளித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அங்கே போவதற்கு முன் அவர்களுடைய வீட்டுக்கு யாரோ தீ வைத்து அந்த ஓலை வீடு எரிந்து சாம்பராகி விட்டது. பிறகு அமைத்த வீட்டில்தான் நாங்கள் போய்ச்சேர்ந்தது.

றஞ்சி, இலங்கையின் கிழக்கே "அக்கரைப்பற்று - பனங்காடு" என்ற இடத்தைச் சேர்ந்தவர். அவருடைய கணவருக்கும் அதுதான் ஊர். இருவரும் இளவயதிலேயே புலிகள் இயக்கத்தின் போராளிகளாகி விட்டனர். அதனால் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையைக் கூட எழுதியிருக்கவில்லை. ஆனால் இரண்டு பேரும் போர்க்களங்களில் தீரமாகப் போரிட்டார்கள். அதனால் பெருங் காயங்களைச் சந்தித்தார்கள். போர்க்களங்களில் திறமையாகச் சமராடும் திறனுள்ளவர் என்பதால் இயக்கம் றஞ்சியை மகளிர் பிரிவொன்றின் இடைநிலைப் பொறுப்பில் வைத்திருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் இருவருக்கும் திருமணமும் நடந்தது.

பிறகு, நடைமுறைப் பிரச்சினைகளாலும், கருத்து நிலையினாலும் றஞ்சி இயக்கத்தோடு முரண்பட்டு அதிலிருந்து விலகினார். என்றாலும் கணவர் தொடர்ந்தும் இயக்கத்திலேயே இருந்தார். காயத்தின் காரணத்தினால் கணவருக்கு அடிக்கடி வலிப்பு நோய் வரும். அந்த நோய், "எப்ப வரும், எங்கே வரும்" என்று தெரியாது. வீதியில் பயணிக்கும்போது, நித்திரையில், வேலை செய்யுமிடத்தில், குளிக்கையில் என எங்கும் எப்போதும். இதனால், மிக ஆபத்தான பல கட்டத்தையெல்லாம் அவர் சந்தித்தார். கணவரின் இந்த நோயின் காரணமாக, அவருக்கு அதிக பழுவல்லாத ஒரு வேலையை இயக்கம் கொடுத்திருந்தது. போராளிகளுக்கு உணவு வழங்கும் பகுதியொன்றைக் கண்காணிப்புச் செய்யும் பொறுப்பு. கணவர் போராளி என்பதால், இயக்கத்தின் கொடுப்பனவு என்ற குடும்பத்துக்கான ஊதியத்தை இயக்கம் வழங்கியது.

சண்டைக்களங்களில் ஏற்பட்ட காயத்தினாலேயே றஞ்சிக்கு ஒரு கையும் காலும் இயங்காது.

தலை வாரிவிடுவது, சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்வது துணி துவைப்பது எல்லாமே அவருடைய கணவர்தான். சில சந்தர்ப்பங்களில் அயல் வீட்டில் இருக்கும் பெண்கள். நாங்கள் அவர்களுடன் குடியிருக்கச் சென்றபிறகு என் மனைவி அதையெல்லாம் செய்தார்.

றஞ்சியின் கணவர் வலிப்புக் காரணமாக அடிக்கடி மருத்துவமனைக்குப் போய் வந்து கொண்டிருந்தார். யாராலும் அதனைத் தடுக்க முடியவில்லை. அவர்களுக்குக் கிடைக்கின்ற இயக்கக் கொடுப்பனவில் பாதிக்கு மேல் வைத்தியச் செலவுக்குப் போய்விடும். மீதியை வைத்துக் கொண்டு எதையாவது செய்வார்கள். இதற்குள் அவர்களுக்கு விருந்தாளிகளுக்கும் குறைவில்லை. எல்லோரையும் வரவேற்று, சாப்பிடச் சொல்லி அழைத்து உபசரிப்பார்கள். இரண்டு பேரிலும் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. "இப்படியான ஒரு நிலைமைக்குள் எப்படித்தான் அப்படிச் சந்தோசமாக இருக்கிறார்களோ!" என்று யோசித்திருக்கிறேன். எங்களுடைய இளைய மகனில் பெரும்பாசம் றஞ்சிக்கும், கணவருக்கும்.

எங்களைத் தேடி வரும் நண்பர்களோடும், றஞ்சியும் கணவரும் மதிப்பாகவும் அன்பாகவும் இருந்தார்கள்.

மு. திருநாவுக்கரசு, நிலாந்தன், அமரதாஸ், பாலகுமாரன் எனப் பலரோடும் அவர்களுக்கு நட்பு ஏற்பட்டது. நண்பர்கள் கூட றஞ்சி குடும்பத்தின் நிலைமையைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். கூடவே வருத்தமும்.

இப்படி இருக்கையில், நாங்கள் அங்கிருந்து கொண்டே வேறொரு இடத்தைப் பார்த்து வீடொன்றைக் கட்டிக் கொண்டிருந்தோம். அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் கவிஞர் சேரனும் அந்த வீட்டுக்கு வந்திருந்தார். அது ஒரு முன்னிரவு நேரம். முற்றத்திலிருந்து நானும், நிலாந்தனும், சேரனும் பேசினோம். குப்பி விளக்கு வெளிச்சத்தில் அன்று இரவு உணவைச் சேரனுக்குக் கொடுத்தோம். அதற்கு முழுதாக ஏற்பாட்டைச் செய்தது றஞ்சியும் கணவருமே.

பிறகு நாங்கள் அமைத்த வீட்டுக்குப் போய் விட்டோம். என்றாலும், அவர்களுடனான உறவும், தொடர்பும் தொடர்ந்து கொண்டேயிருந்தது. கணவர் மருத்துவமனைக்குச் செல்லாத ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரண்டு பேரும் எங்களின் வீட்டுக்கு வருவார்கள். மதியம் சமைத்துச் சாப்பிட்டுச் செல்வார்கள்.

இப்படியிருக்கும்போது ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகம் என்ற ஒரு அமைப்பு (இதைப் பிறகு மாற்றுத் திறனாளிகள் அமைப்பு என்று மாற்றி விட்டார்கள்) கிளிநொச்சி செல்வா நகரில் உடல் ஊனமுற்றவர்களுக்கு (மாற்றுவலுவுடையோருக்கு) எனப் பெயரிட்டு ஒரு குடியிருப்பை அமைத்தது. அது ஒரு கிறிஸ்தவ அமைப்பு. ஏறக்குறைய இருபத்தி ஐந்து குடும்பங்கள் அங்கே குடியமர்த்தப்பட்டனர். அதில் றஞ்சியின் குடும்பமும் ஒன்று. சின்னஞ்சிறிய வீடுகள். ஆனால் சீமெந்துக் கல்லினால் அமைக்கப்பட்ட வீடுகள். அஸ்பெஸ்ரஸ் அமைந்த கூரை. ஆனால் அங்கே தண்ணீருக்குப் பெருந்தட்டுப்பாடு. ஒரேயொரு பொதுக்கிணறு மட்டும். "இந்த மாதிரி முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்ட ஒரு குடியிருப்பை அமைப்பது பெரும் பிழை" என்று நாங்கள் வாதிட்டபோதும், அதை அமைத்தவர்கள் கேட்டுக் கொள்ளவில்லை.

அங்கே போவதைத் தவிர தங்களுக்கு வேறு வழியில்லை என்று றஞ்சி சொன்னார். முன்னர் இருந்த இடத்தில் அந்தக் குடிசை வீட்டை எடுத்துக் கொண்டு காணியை விடுமாறு காணியை மேற்பார்வை செய்து கொண்டிருந்தவர்கள் நச்சரித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இருந்தபோதே அவர்கள் அப்படி நச்சரித்துக் கொண்டுதானிருந்தனர். உண்மையில் அந்தக் காணியின் உரித்தாளர்கள் கனடாவில் இருந்தார்கள். ஆகவே அதைக் கண்காணித்துக் கொள்வதற்காகக் கனடாக்காரர் கிளிநொச்சியில் இருந்த உறவினர்களிடம் பொறுப்பைக் கொடுத்திருந்தார்கள்.

காணியில் இருப்பது இயக்கக் குடும்பம் என்பதால் "அவர்களை நீண்டகாலம் அனுமதிப்பது ஆபத்தாகி விடும்" என்ற அச்சம் காணி உரித்தாளர்களுக்கும் அதைப் பராமரிக்கிறவர்களுக்கும் இருந்தது. "என்னதான் பெரிய பொறுப்பொன்றும் இல்லாதவர்களாக இருந்தாலும் இயக்கம் இயக்கம்தான்" என்ற எண்ணம் அவர்களுக்கு. எந்த வேளையிலும் தங்களுடைய காணியை அபகரித்து விடுவார்கள் என்ற எண்ணமே அது.

ஆகவே கிளிநொச்சியில் இருந்தவர்கள் எந்த நாளும் அந்தக் காணியை விடுவிப்பதற்காக எதையாவது சொல்லிக் கொண்டேயிருந்தனர். ஆனால் அவர்கள் றஞ்சியோடும் கணவரோடும் முரண்பட்டுக் கொள்ள விரும்பவில்லை. முரண்பட்டால் எல்லாமே இறுகிவிடும் என்ற முன்னெச்சரிக்கையோடு விசயத்தைப் பக்குவமாகக் கையாண்டு கொண்டிருந்தார்கள்.

இந்த நச்சரிப்பைத் தாங்க முடியாத றஞ்சியும் கணவரும் இன்னொரு இரவற் காணிக்குச் செல்ல விரும்பவில்லை. அதேவேளை சொந்தமாகக் காணியை வாங்கி கொள்ளக்கூடிய பொருளாதார வசதியும் அவர்களிடம் இல்லை. எனவே இப்படி வந்த வாய்ப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். குடியிருப்பை அமைப்பதற்குப் பொறுப்பெடுத்த அமைப்போ உரிய முறையில் அந்த வீடுகளை அமைத்துக் கொடுக்கவில்லை. இதனால் றஞ்சி தெரிந்தவர்களிடம், பழகியவர்களிடம் வங்கியில் எனக் கடன்பட்டார். நாங்களும் எங்களால் முடிந்தவரையில் உதவினோம். எங்களுடைய நண்பர்களிற் சிலரும் உதவினார்கள்.

இயக்கத்தை விட்டு விலகிய பிறகு ஒற்றைக் கையினால் தட்டச்சுப் பழகிய றஞ்சி நான் முன்னர் குறிப்பிட்டவாறு கூட்டுறவு அலுவலகமொன்றில் வேலை செய்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# சசிகலா: ஈழத்தமிழர்களுக்கு நல்லவரா? கெட்டவரா?




■ அர்ச்சகன்

**பொது**வாழ்வில் ஈடுபட்டவர்களை விமர்சிக்கும் ஊடகங்கள் மிகவும் கவனத்துடன் தமது கருத்துக்களைப் பதிவு செய்ய வேண்டும். ஒரு கருத்து என்பது இயல்பாக ஒரு மனிதரின் பண்புகளாலும் , ஆளுமையாலும் எழுவதென்பது வேறு, அவ்வாறல்லாமல் ஒரு மனிதரைக் குறித்து அரசுகளாலும், புலனாய்வுத்துறையினராலும் கட்டமைக்கப்பட்ட கருத்தியல்கள் என்பது வேறு.

இவற்றில் தெற்காசிய நாடுகளில், குறிப்பாக இந்தியப் புலனாய்வுத்துறை, அரசின் சார்பாக ஒரு மனிதர் குறித்தான போலிப் புனைவுக் கருத்தியல்களை உருவாக்குவதில் புகழ்பெற்றது. எம்.ஜி.ஆர் அவர்கள் அரசில் நுழைந்த புதிதில், அவரைக் குறித்த பல பிழையான கருத்தியல்கள் உருவாக்கப்பட்டன. சான்றாக "எம்.ஜி.ஆர், அரசிற்கு வருமானவரிக் கணக்குக் காட்டாதவர்" என்பனவாகவும், "அவரது இராமபுரம் தோட்டத்தில் பல எதிரிகளை அடித்துப் புதைத்துள்ளார்" என்பனவாகவும் பரப் பப்பட்டன. ஆனால் இப்பரப்புரைகள் மக்கள் மன்றத்தால் காலவோட்டத்தில் ஒதுக்கப்பட்டன. அவ்வாறாதனதொரு அரசியல் சூழ்நிலையே இன்றைய தமிழக அரசியலிலும் நிகழ்கின்றது.

மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலிலிதாவின் தோழி. வி.கே.சசிகலாவை மையப்படுத்திப் பல பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை பொது மக்களின் பார்வையில் பார்ப்பதற்கும், ஊடகப் பார்வையில் பார்ப்பதற்கும் வேறுபாடு உண்டு. ஆனால் இன்றைய ஊடகப் பார்வை பொதுமக்களின் பார்வையிலும் ஒளி மங்கியதாகவே உள்ளது. ஜெயலலிதா அவர்களின் மரணம் தொட்டுப் பல கட்டமைவுகள் மைய அரசால் உருவாக்கப்பட்டமையை நன்கு ஆய்வோர் உணருவர்.

ஜெயலலிதா உடல் நலம் குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை, அவருக்கு மருத்துவம் பார்த்தவர்களில், மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள 'எய்ம்ஸ்' மருத்துவ மனை மருத்துவர்களும் அடக்கம். தமிழக ஆளுநர் வித்தியாசகர்ராவ் , மைய அமைச்சர்கள், வெங்கைய நாயுடு, பொன் இராதா கிருஷ்ணன், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி முதலானோர் மருத்துவ மனைக்குச் சென்று மருத்துவர்களைச் சந்தித்துப் பேசினர். "அவர்கள் எல்லோரையும் ஏமாற்றும் அளவு ஆற்றல் மிக்கவர் சசிகலா" என்ற கதையை ஊடகங்கள் எப்படித்தான் நம்பினவோ...? அறியோம்.



### பன்னீர் புனிதரல்லர்

அடுத்தபடியாக சசிகலாவை தமிழினத் துரோகி போலவும், ஓ.பன்னீர் செல்வத்தைத் தமிழினப் பாதுகாவலரைப் போன்றும் கட்டமைத்ததைக் குறிப்பிடலாம். ஓ.பன்னீர்செல்வம் எளிமையானவராகவும், லஞ்ச ஊழல் அப்பழுக்கற்றவராகவும் உளவுத்துறையால் சித்திரிக்கப்பட்டு, பரப்புரையும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான காரணத்தை நோக்குவோமாகில், மைய அரசினை ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியினால் தமிழகத்தில் ஒருபோதும் ஆட்சி அமைக்க முடியாது என்பது யாவரும் அறிந்ததே.

இச்சூழ்நிலையில் அ.தி.மு.கவின் 50 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள அக்கட்சி விரும்பியது. இதன் மூலம் நாடாளுமன்றத்தில் எந்தச் சிக்கலுமின்றி தமது மசோதாக்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். அதேபோல தமிழகத்திலும் தமது எண்ணங்களுக்குத் தலையாட்டும் ஒரு ஒரு பொம்மை முதல்வரைக் கொண்டு ஆட்சியமைத்து தமது தமிழின விரோதப்போக்கை நிறைவேற்றிக் கொள்ளலாம், என முடிவு கட்டியது. அதனடிப்படையிலே ஓ.பன்னீர்செல்வம் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தியப் புலனாய்வுத்துறையால் பெரும் மக்கள் தலைவராகவும், புனிதராகவும் கட்டமைக்கப்பட்டார்.

இதற்கான நிகழ்வுகள் ஜெயலலிதா மருத்துவமனையில் இருந்த காலகட்டத்திலேயே தொடங்கியதெனலாம். சான்றாக, ஜெயலலிதாவால் எதிர்க்கப்பட்ட மருத்துவப் பொது நுழைவுத் தேர்வு, நாடு தழுவிய பொது வரிவிதிப்புப் போன்ற மக்கள் விரோதத் திட்டங்களை ஓ.பன்னீர்செல்வம் ஆதரித்தமையைக் குறிப்பிடலாம். ஜல்லிக் கட்டுப் போராட்டத்தின்போது தமிழக மாணவர்கள் மைய அரசின் கபட நாடகத்தைத் தோலுரித்துக் காட்டியமையையும், மோடியை விமர்சித்தமையையும் தாங்கவியலாத பன்னீர்,காவல்துறையைக் கொண்டு நடத்திய கொடூரத் தாக்குதல்களும், தீவைப்புகளும் பா.ஜ.க வில் கொண்ட அவரது பற்றை வெளிப்படுத்தும். ஆர்.எஸ்.எஸ். இயக்கம் சென்னையில் ஊர்வலம் நடத்த அனுமதியும் அளித்தார். இந்நிகழ்வுகள் எல்லாவற்றையும் கொண்டு நோக்கும்போது, "கைப்புண்ணிற்குக் கண்ணாடி தேவையில்லை" என்பது தெளிவாகும்.

### பொம்மை அரசு கனவானது

சட்டமன்றத்தில் பெரும்பான்மை வாய்த்த கட்சி, முதல்வரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள முழு உரிமை பெற்றதாகும். இவ்வாறிருக்க, "அ.தி.மு.க அரசின் முதலமைச்சராக ஓ.பன்னீர் செல்வம்தான் வரவேண்டும்" என பா.ஜ.க முடிவு கட்டுவது எவ்வகையில் பொருந்தும். இதற்கான விடையாக ஓ.பன்னீர்செல்வத்தை சூழ்ந்திருப்போர் யார்? யார்? என நோக்கினால் அறியலாம். அ.தி.மு.கவின் மாநிலங்கள் அவைத் தலைவர் மைத்திரேயன், அ.தி.மு.க வின் அவைத் தலைவர் மதுசூதனன், அ.தி.மு.க மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் நடராஜ் இவர்கள் மூவரும்தான் முதன்மையானவர்கள். இவர்கள், பா.ஜ.கவுடனும், ஆர்.எஸ்.எஸ். உடனும், இந்து முன்னணியுடனும் மிகவும் நெருக்கமாகவும் உள்ள தமிழின விரோதிகள்.

இக்கூட்டணியிடமிருந்து தமிழருக்கான நலத்தினை எப்படி எதிர்பார்க்கவியலும். இக்கும்பல் தமிழகத்தில் பா.ஜ.கவிற்குத் தலையாட்டும் ஓ.பன்னீர்செல்வத்தைக் கொண்டு, ஒரு பொம்மை அரசை நிறுவி, அதன் மூலம் இந்தித் திணிப்புப் போன்ற பல திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள எண்ணங் கொண்டிருந்தது. அதன் ஒரு தொடர்ச்சியாகத்தான், "அ.தி.மு.க அரசால் நிராகரிக்கப்பட்ட தமிழகத்தை பாலைவனமாக்கும் 'மீத்தேன்' திட்டத்தினை தமிழகத்தில், புதுக்கோட்டை மாவட்ட புதுவாசல் பகுதியில் மேற்கொள்ள ஓ.பன்னீர் செல்வம் ஒப்பமிட்டார்" என தற்பொழுது செய்திகள் கசியத்தொடங்கியுள்ளன. 'இதற்கெல்லாம் சசிகலா எதிராக இருப்பார்' என்பதால் அவரைக் கட்சியை விட்டு அப்புறப்படுத்திச் சிறையோடு அவரது அரசியல் வாழ்க்கையை முடிப்பதற்கான திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### கட்டமைக்கப்பட்ட அவதூறு

சசிகலா குறித்த பல அவதூறுகள் கட்டமைக்கப்பட்டன. சசிகலா அ.தி.மு.கவில் பெரும்பொறுப்பில் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அக்கட்சியை வழிநடத்தியதில் பெரும் பங்கு அவருக்கு உண்டு. எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின் அக்கட்சியைச் சிதைக்க நடந்த முயற்சிகளை ஜெயலலிதாவைக் கொண்டு முறியடித்தவர். ஜெயலலிதா, சில சமயங்களில் மனம் சோர்ந்து அரசியலை விட்டு விலக நினைத்தவேளை, அவரது எண்ணத்தை மாற்றி கட்சியை காக்கச் செய்தவர் என்பதில் மாற்றுக்கருத்திருக்கவியலாது.

சசிகலாவை ஊழல்வாதியாகக் காட்டுகின்ற போக்கும், அத்தனை ஏற்புடையதாகாது. ஓ.பன்னீர்செல்வமும் ஊழலுக்கு அப்பாற்பட்டவர் அல்ல. 2016 தேர்தல் நேரத்தில் ஜெயலலிதாவுக்கும் ஓ.பன்னீர்செல்வத்திற்கும் மோதல் வந்தமைக்கான காரணம் பணச்சிக்கல் என்பது யாவரும் அறிந்ததே. பொதுவில் இந்திய அரசியல்வாதிகள் யாவரும் ஊழலுக்கு அப்பாற்பட்டவர் அல்லர்.


இந்திய நீதிமன்றங்களின் தன்மையும், மைய அரசைச் சார்ந்ததே எனலாம். ஜெயலலிதா உயிரோடு இருந்திருந்தால், உச்ச நீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பு வந்திருக்குமா? என்பது ஐயப்பாடானதே. இந்தியா முழுவதும் உள்ள அரசியல் தலைவர்களை அச்சமூட்டவும், தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் மைய அரசு அவர்கள் மீதான வழக்கு களைப் பயன்படுத்துதல் என்பது இயல்பே. ஏற்றதொரு தருணம் சசிகலா இவ்வழக்குகளை உடைத்து வெளி வருதலும் கூடும். அதற்கான சூழல்கள் இந்திய அரசியலில் நிறையவே உண்டு.

### முள்ளிவாய்க்கால் முற்றமும் சசிகலாவும்

சசிகலாவை தமிழின விரோதியாகக் காட்டுவதற்கு அவர் செய்த எச்செயல் காரணம் எனக் காட்டவியலாது. 2009 - 2011 வரையில் கருணாநிதியின் ஆட்சியில் தமிழகத்தில் ஒரு முள்ளி வாய்க்கால் முற்றம் அமைக்க இயல வில்லை. ஆனால் 2011 இற்குப் பிறகு தஞ்சையில் 'முள்ளிவாய்க்கால் முற்றம்' அமைத்தமையில், சசிகலாவிற்குப் பங்குண்டு. அதுபோல தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தமிழர் நலன் சார்ந்த தீர்மானங்களிலும் அவருக்கு இடமுண்டு எனலாம்.

இவை போன்ற பல காரணங்களைப் பற்றியே தமிழ்தேசியச் சிந்தனையுடைய இயக்கங்கள், சில இன்று சசிகலாவை ஆதரிக்கின்றன. பொதுவில் பா.ஜ.க வின் சொற்படி தலையாட்டும் அரசு தமிழகத்திற்குப் பேராபத்தாக முடியும். அம்முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. ஊடகங்கள் உளவுத்துறையின் ஊது குழலாக அல்லாமல், தங்களது கருத் தியல் கண்கொண்டு ஒரு சிக்கலை ஆராய்ந்து மக்களுக்கு அறியத்தரும் கட மையுடையன என்பதினை மறத்தல் ஆகா.

# சிறைக்குள் சின்னம்மா: எப்படி இருக்கிறார் இப்போது?



பெங்களூரில் இருந்து
வா.மணிகண்டன்

பரப்பன அக்ரஹாராவுக்கு நேற்று மாலை சென்றிருந்தேன். தமிழ்நாட்டு பதிவு எண் கொண்ட வண்டியாக இருந்தால் உள்ளேயே விடமாட்டார்கள். என்னிடம் இருப்பது கர்நாடகா வண்டி. நிறுத்தமாட்டார்கள். அப்படியே நிறுத்தி னாலும் “தத்தகப்பித்தக்கா” கன்னடத்தை வைத்து ஒரு காரணத்தைச் சொல்லி உள்ளே நுழைந்துவிடுவேன். என்ன காரணம் என்றெல்லாம் கேட்கக்கூடாது. கம்பெனி ரகசியம். கடந்த முறை ஜெய லலிதா உள்ளே இருந்த போது கூட்டம் நிரம்பிக் கிடந்தது. தள்ளுவண்டிக் கடையெல்லாம் புதிது புதிதாக முளைத் திருந்தன. எம்.எல்.ஏ, எம்.பிக்களும் தள்ளுவண்டிக் கடைகளில் கடலைக் காயும் நெல்லிக்காயும் வாங்கிக் கொறித்துக் கொண்டிருப்பார்கள்.

## நேற்று ஈயாடவில்லை

“உண்மையிலேயே உள்ளேதான் இருக்கிறார்களா?” என்று சந்தேகமாகத் தான் இருந்தது. சிறை வளாகத்துக்குள் குன்ஹா தீர்ப்பளித்த செசன்ஸ் நீதி மன்றம், பரப்பன அக்ரஹாரா காவல் நிலையம் ஆகியவற்றையெல்லாம் தாண்டி ஐநூறு மீட்டர் சென்று இடது பக்கமாகத் திரும்பினால் காவலர் குடியி ருப்பு உண்டு. அதுவரைக்கும் சென்று பார்த்தாலும் கூட ஒரு கரை வேட்டியும் கண்ணில் படவில்லை. ஆச்சரியமாக இருந்தது. வீட்டிற்கு வந்து சொன்னேன்.

“ஞாயிற்றுக்கிழமையன்று பார்வையாளர் களை அனுமதிப்பார்களா?” என்று கேட் டார்கள். தர்க்க ரீதியான கேள்வி. ஆனால் கடந்தமுறை ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூட்டமிருந்தது. மற்ற நாட்களிலாவது வேலைக்குச் செல்ல வேண்டுமே என்கிற எண்ணம் எனக்கு இருக்கும். சனி, ஞாயிறுகளில் அப்படியில்லை.

காலை உணவை முடித்துவிட்டு வளாகத்திற்குள் சென்றால் மாலை வரை அங்கேயேதான் குடியிருப்பேன்.

வீட்டிலிருந்து அழைத்து “சாப்பிட வரலையா?” என்பார்கள். சிறை வளாகத் திற்குள்ளேயே கட்சிக்காரர்களுக்கு உணவு வழங்குவார்கள். “ஜெயில்லையே சாப்பிட்டுட்டேன்” என்று சொல்லி அதிர்ச்சியெல்லாம் கொடுத்திருக்கிறேன். மாலை ஆறு மணிக்கு காவலர்கள் விசிலடித்து எல்லோரையும் துரத்தி விடுவார்கள். அத்தனை வெள்ளையும், சுள்ளையும் வெளியேறிய பிறகு, கடைசியாக வெளியேறுவதுதான் என்னுடைய வழக்கமாக இருந்தது.


நேற்று அப்படியில்லை. சென்ற வேகத்தில் திரும்பிவிடலாம். யாருமில் லாத டீக்கடையில் நமக்கு என்ன வேலை? உடனடியாக வீடு திரும்ப மனமே இல்லை. ஆனால் வேறு வழியில்லை.

இன்று காலையிலும் சென்றிருந்தேன். பத்தரை மணி இருக்கும். நேற்றைய தினமாவது காவலர் குடியிருப்பு குழந்தைகள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இன்று மயான அமைதி. சற்றே ஓங்கிக் கத்தினால் சிறைக்குள் இருப்பவர்களுக்கு காது கேட்டுவிடும். “நிஜமாவே சின்னம்மா உள்ள இருக்காங்களா?” என்று கேட்க லாம் என்றுதான் தோன்றியது. “எதுக்கு? வெட்டி வம்பு” என்று அமைதியாக இருந்து கொண்டேன்.

ஊடக வாசிகளும் யாருமில்லை. தடுப்பரண்களைப் போட்டு பத்து காவலர்கள் நிழலில் அமர்ந்து கதையடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அநேகமாக இன்னமும் சில தினங்களில் அவரை தமிழகச் சிறைச் சாலைக்கு மாற்றிவிடுவார்களாம். அப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள். அப்படி தமிழகச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு ஒருவேளை ஆட்சிக் கலைப்பு என்று ஏதாவது ‘எசகுபிசகாக’ நடந்து திமுக ஆட்சிக்கு வந்துவிட்டால் வம்பாகப் போய்விடக் கூடும்.

“இங்க வந்து சிக்கினதுக்கு பதிலா கர்நாடகவிலேயே இருந்திருக்கலாம்” என்று நினைக்க வைத்துவிடுவார்கள். ஆனால் “இப்போதைக்கு ஆட்சியைக் கலைப்பார்களா” என்று தெரியவில்லை- ஓபிஎஸ்ஸின் பின்னணியில், பாஜக இருந்தது என்று நாம் நம்புவதற்கு நிறைய சாத்தியங்கள் இருக்கின்றன. அவருக்கு அவகாசமும் கொடுத்துப் பார்த்தார்கள். அவரால் இன்னமும் பத்து அல்லது இருபது எம்.எல்.ஏக்களை இழுக்க முடிந்திருந்தால், திமுகவின் ஆதரவுடன் அடுத்த சில மாதங்களுக்கு ஆட்சியை நீட்டி அவரை நாயகனாக்கி அதிமுகவை அவர் வசம் கொண்டு போயிருக்கக் கூடும். அவரால் முடியவில்லை. கைவிட்டு விட்டதாகத்தான் தோன்று கிறது. இப்போதைக்கு ஆட்சியைக் கலைத்து, தேர்தல் நடந்தால் முடிவு என்னவாக இருக்கும்? “திமுகவுக்குத்தான் சாதகமாக இருக்கும்” என்று அவர்களுக்கும் தெரியாதா என்ன? திமுக ஆட்சியமைத் தால், நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவுக்கு தமிழகத்தில் எந்த பலனும் இருக்காது என்பதால் இந்த ஆட்சியே தொடரட்டும் என்றுதான் டெல்லிவாலாக்கள் விரும்புவார்கள். இனி சாம, பேத, தான தண்ட அடிப்படையில் பேரங்கள் நடக்கக் கூடும்.



ஜெயலலிதா சிறையில் இருந்த போது அலைமோதிய கட்சிக் காரர்கள் “ஏன்? பரப்பன அக்ரஹாராவை எட்டிக் கூட பார்க்கவில்லை” என்று புரியவில்லை. வந்து போய்க் கொண்டிருந் தால் தானே என்னை மாதிரியான சில்லுண்டி களுக்கு பொழுது போகும்?

“சசிகலா சரணடைய வந்த போது வாகனங்கள் தாக்கப்பட்டது கூட காரண மாக இருக்கலாம் அல்லது இனி அங்கே சென்று காத்திருப்பது பலனில்லை” என்று நினைத்திருக்கக் கூடும். கடந்த முறை சிறை வளாகத்திற்குள் தமிழக உளவுத் துறை காவலர்கள் சுற்றிக் கொண்டே யிருந்தார்கள். யார் வந்து போகிறார்கள் என்று தீவிரமாகக் கண்காணித்தார்கள். நாம் வந்திருப்பது அம்மாவுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே பலரும் பெங்களூரில் அறை எடுத்துத் தங்கியிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் பக்கத்துல வீடு வாடகைக்கு கிடைக்குமா? என்று கூட சிலர் கேட்டது நினைவில் இருக்கிறது. அப்படி வெறித்தனமாக விசுவாசத்தைக் காட்டியவருக்கு சட்டப்பேரவைத் தேர்தலில் வாய்ப்பளித்தார்கள்.

சசிகலாவுக்கு நான்காண்டுகள் சிறைத் தண்டனை. “விடுமுறை, நன்னடத்தை என்று பல காரணங்களால் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுவிடக் கூடும்” என்று தான் சொல்கிறார்கள். ‘மூன்றாண்டுகள்’ என்று வைத்துக் கொள்வோம். மூன் றாண்டு காலம் என்பது அரசியலில் பெரிய இடைவெளி இல்லை. அவர் வெளியே வரும்போது ஆட்சி அவர்களின் வசமிருக் குமானால் மிகப்பெரிய வரவேற் பைக் கொடுப்பார்கள். அவர் சிங்கம்தான் என்பதை மக்கள் நம்பியே தீர வேண்டும் அல்லது நம்புவது போல நடிக்க வேண்டும்.

இன்றைக்கு சிதறியவர்களில் பலரும் வந்து ஒட்டிக் கொள்ளக் கூடும். ஸ்டாலின் Vs சசிகலா என்ற அரசியல் களம்தான் நமக்கு முன்பாக விரிந்திருக்கும்.

“ஸ்டாலின் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறார்? பாஜக எப்படி காய் நகர்த்தப் போகிறது” என்பதைப் பொறுத்துத்தான் களம் மாறக் கூடும். ஆனால் சசிகலா தரப்பும் லேசுப்பட்ட வர்கள் இல்லை என்று நமக்குக் காட்டி யிருக்கிறார்கள். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

போன வேகத்தில் வெளியே வந்தவுடன் பாதுகாப்புக்கு நின்றிருந்த காவலர் “ஏனாயித்து?” என்றார்.

“இன்ஸ்பெக்டர் மத்தியானம் பரக்கே ஹேலித்ரு” என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன்.

உள்ளே நுழையும் போது பரப்பன அக்ரஹாரா இன்ஸ்பெக்டரைப் பார்க்கச் சொல்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றி ருந்தேன். இன்ஸ்பெக்ட்ரையும் காணோம்; கரைவேட்டியையும் காணோம்.

## வாரப்பலன்

**மேடம்**
கருணை. சாப நிவர்த்தி. வேலைப் பளு. அதிக செல வினம். தனிமை.

**ரிஷபம்**
மக்கள் வித்யா விருத்தி. துணைநலம். புதிய வரவு. பயிர் பலிதம்.

**மிதுனம்**
ஜெயம். துறைசார்ந்த பெருமிதம். மனக் கவலை. பொருள் வரவு.

**கடகம்**
பயிர்பலிதம். வழக்கு வெற்றி. வாய் தர்க்கம். தொழில் சிறப்பு.

**சிம்மம்**
உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை. தோஷ நிவர்த்தி. மனைச் சிறப்பு.

**கன்னி**
பலம். பொருத்தமற்ற வேலை. மக்கள் மேம்பாடு. கலையார்வம்.

**துலாம்**
புதிய சிந்தனை. ஆலய தரிசனம். பொருள் பற்றாக் குறை. பயம்.

**விருச்சிகம்**
சமூக சிந்தனை. உறவால்கேடு. ஊக்கமின்மை. தொழில் விருத்தி.

**தனுசு**
தனிமை. தாக மின்மை. தெய்வ சிந்தனை. தொழி லின்மை. ஜெயம்.

**மகரம்**
தியானம். துயரம். தனித்துவிடப்படல். புதிய முயற்சி. - தேடல்.

**கும்பம்**
மனை விருத்தி. மக்கள் மேம்பாடு. கல்வி விருத்தி. காரிய சித்தி.

**மீனம்**
தூக்கமின்மை. அதிக சிந்தனை. வீண் அலைச்சல். ஆலய தரிசனம். தொழில் சிறப்பு.

## இது எங்கட காலம் கானா பிரபாவின் புத்தக வெளியீட்டு விழா

கடந்த 12 02 2017 அன்று இணுவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில், அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபானத்தின் பகுதி நேர ஒலிபரப்பாளராகக் கடடையாற்றுகின்ற கானா. பிரபாவின் அனுபவப் பத்தி எழுத்துக்களாய் அவரது வலைப் பூவை அலங்கரித் தவைகளை ஒருங்கிணைத்து "இது எங்கடை காலம்" என்ற தலைப்பிலான நூலின் வெளியீட்டு விழா நடைபெற்றது.





கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற கண. மகேஸ்வரனின்"தீர்வு தேடும் நியாயங்கள்" நூல் வெளியீடு 18 .02 .2017 இடம்பெற்றது.

க.நவம் மற்றும் சியாமளா நவம் ஆகியோரின் "நான்காவது பரிமாணம்" வெளியீடாக நான்கு நூல்களின் வெளியீட்டு விழா 19.02.2017 அன்று யாழ். தேவரையாளி இந்து கல்லூரியில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் இடம் பெற்றது.



"வேற்றுமைகளுக்கப்பால் இலக்கியம்: ஓர் உரையாடல் (Dialogues in diversity)" என்ற தமிழ், சிங்கள கலைஞர்கள் சந்திப்பும் அவர்களது ஆக்கங்களில் வாசிப்பும் உரையாடலும் 17.02.2017 மதியம் 1 மணிக்கு கலைத்தூது ஆற்றுகை மண்டபத்தில் நடைபெற்றது.





கவிஞர் சேரன் அவர்கள் ONV FOUNDATION வழங்கிய சர்வதேச கவிதை விருதினை 17.02.2017 ஆம் திகதி, துபாயில் அமைந்துள்ள இந்திய தூது வராலய கேட்போர் கூடத்தில் பெற்றுக் கொண்டார்.

"தூய்மையான யாழ்ப்பாணம்" என்ற வாசகத்தின் கீழ் பொலித்தீன் பாவனை ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு ஊர்வலமொன்று 18 .02 .2017 அன்று இடம் பெற்றது.



# திருட்டுப் பசு!



ஒரு கிராமத்தில் ஒருவன் இருபது பசுக்கள் கொண்ட மந்தையை வைத்திருந்தான். மற்றொருவன் பத்து பசுக்களை கொண்ட மந்தையை வைத்திருந்தான்.

அவர்கள் இருவரையும் பெரிய மந்தைக்காரன், சின்ன மந்தைக்காரன் என்று ஊரார் சொல்வது வழக்கம். பெரிய மந்தைக்காரன் ஒரு சமயம் குடும்பத்தோடு வெளியூர்போக நேரிட்டது. அவன், தனது மந்தையைக் கவனித்துக் கொள்ளும்படி, சின்ன மந்தைக் காரனிடம் சொல்லிவிட்டுச் சென்றான்.

போனவன் திரும்பி வருவதற்குள் தன்னிடமிருந்த மட்டமான மூன்று கன்றுகளையும் அவனுடைய மந்தைக்குள் புக விட்டு, அதற்குப் பதிலாக மூன்று கடாரிக் கன்றுகளைத் திருட்டுத்தனமாகக் கொண்டு வந்து தன்னுடைய மந்தையில் சேர்த்துக் கொண்டான்.

வெளியூர் சென்றிருந்த பெரிய மந்தைக் காரன் திரும்பி வந்தான். கன்றுகள் மாறியிருப்பதை அவன் கவனிக்கவில்லை. சில நாட்களில் நோய் வந்து அவனுடைய மந்தையில் இருந்த பசுக்களும், கன்றுகளும் மாண்டு போயின. தன் குடும்பத் தேவைக்கே பால், நெய், மோர் இல்லாமல் கஷ்டப் பட்டான் பெரிய மந்தைக்காரன்.

சின்ன மந்தைக்காரன் திருட்டுத்தனமாக மாற்றிக் கொண்ட மூன்று கன்றுகளும் பெரியதாகி வளர்ந்து, கன்று போட்டுப் பால் கொடுக்க ஆரம்பித்தன. ஒருநாள் பெரிய மந்தைக்காரன், சின்ன மந்தைக் காரனிடம் பால் வாங்கிக் காய்ச்சிக் குடிக்க நேர்ந்தது. அந்தப் பாலின் ருசியைக் கண்டதும், இந்தப் பாலைக் கறந்த பசு தன்னுடையது என்பதை உணர்ந்து கொண்டான்.

"தான் வெளியூர் சென்றிருந்தபோது சின்ன மந்தைக்காரன் தன்னுடைய கன்றுகளைத் திருடி வளர்த்திருக்கிறான். ஆகையால் அது என்னைச் சேர்ந்தது" என்று நீதிமன்றத்தில் முறையிட்டான் பெரிய மந்தைக்காரன். சின்ன மந்தைக்காரனைக் கூட்டி வரச் சொல்லி விசாரித்தார் மரியாதை ராமன்.

"தகுந்த சாட்சியத்தோடு அதை நிரூபித்தால், நான் நீதிமன்றம் விதிக்கும் தண்டனைக்கு உட்படுகிறேன். இல்லையானால், என் மீது திருட்டுக் குற்றம் சுமத்தியுள்ள அவன் தண்டனைக்கு உள்ளாகட்டும்" என்று எதிர்வாதம் செய்தான் சின்ன மந்தைக்காரன்.

மரியாதை ராமன், அவர்கள் இருவரையும், பதினைந்து நாட்கள் கழித்து வருமாறு உத்தரவிட்டார். அதன்பின், ஆட்டு எரு, மாட்டு எரு, குப்பை எரு ஆகிய மூன்றையும் தனித்தனியாகக் கீரைப் பாத்தியில் போட்டு விதைத்துப் பயிராக்கி, அம்மூன்று வகைக் கீரைகளையும் பறித்து ஒன்றாகக் கலந்து சமையல் செய்யுமாறு சொல்லி, அவற்றோடு பசுவின் தயிர், எருமைத் தயிர், ஆட்டுத் தயிர் மூன்றையும் ஒன்றாகக் கலந்து, பெரிய மந்தைக் காரனுக்கும், சின்ன மந்தைக்காரனுக்கும் விருந்து அளிக்கிற பாவனையில் இருவரையும் சாப்பிடும்படியாக ஏற்பாடு செய்தார் மரியாதை ராமன்.

இருவரும் சுவைத்து நன்றாகச் சாப்பிட்டனர். "விருந்தின் ருசி எப்படி இருந்தது?" என்று கேட்டார் நீதிபதி.

சின்ன மந்தைக்காரன் எதுவும் கூறவில்லை.

"மூவெருவின் கீரையோடு முப்பாலின் நற்றயிரும் நாவாற நான் ருசி கண்டேன்" என்றான் பெரிய மந்தைக்காரன். அதிலிருந்து உண்மையை உணர்ந்து கொண்ட நீதிபதி, அவன் யோக்கியன் என்பதை புரிந்து கொண்டார்.

பிரதிவாதியான சின்ன மந்தைக்காரனைப் பயமுறுத்தி அவன் வாய் மூலமாகவே, அவனுடைய திருட்டுச் செயலை வெளிப்படுத்தி, பசுவைப் பெரிய மந்தைக் காரனிடம் ஒப்படைக்கச் செய்யும்படி உத்தரவிட்டு, திருட்டுக் குற்றத்துக்குத் தண்டனையும் விதித்தார் மரியாதை ராமன்.

## வெண்ணிலா

வானப் பரப்பினிலே - ஒரு
வட்டத் தோசை போலவே
எட்டி நானும் பார்த்திட
எழுந்து, எழுந்து வருகிறாய்

பட்டுப் போன்ற வானிலே
பால் நிறமாய்த் தெரிகிறாய்
எட்டித் தொட்டுப் பாத்திட
எந்தன் உள்ளம் துடிக்குது

இரவில் மட்டும் தெரிகிறாய்
பகலில் எங்கே செல்கிறாய்?
தேய் பிறையாய்த் தேய்கிறாய்
வளர் பிறையாய் வளர்கிறாய்

மாதம் ஒரு நாளிலே
மகிழ்ந்து நானும் பார்த்திட
முழு நிலவாய்த் தெரிகிறாய்
முந்தி முந்திச் செல்கிறாய்

ஏனோ தேய்ந்து செல்கிறாய்
எழுந்து வளர்ந்து வருகிறாய்
அமாவாசை அன்று நீ
மாயமாக மறைகிறாய்

உன்னைக் காண என்றுமே
உள்ளம் மகிழ் நிற்கிறேன்
என்றும் முழு நிலவாக
எங்கும் வரமாட்டாயா?

சி.சிவானுஜா (தரம்- 11)
மிருசுவில் றோ.த.க பாடசாலை



இ.அனற் ஜென்சிகா
தரம் - 08
மிருசுவில் றோ.த.க பாடசாலை

## ஹாய் குட்டீஸ்...!



உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## முரடனை இளக வைத்த சிறுவன்

ஒரு முரடன், சிறுவன் ஒருவனை வீதியில் வைத்து அடித்துக் கொண்டிருந்தான். அவ்வழியே வந்த மற்றொரு சிறுவன் இதைப் பார்த்தான்.

முரடனிடம் அடி வாங்கிக் கொண்டிருந்த உடல் மிகவும் பலவீனமான சிறுவனின் அழுகையைக் கண்ட மற்ற சிறுவனுக்கு அழுபவன் மீது இரக்கம் பிறந்தது.

அவ்விடத்துக்கு நேரே சென்ற சிறுவன் அந்த முரடனைப் பார்த்து "அப்பாவிச் சிறுவனை எதற்காக அடிக்கிறாய்?" என்று கேட்டான்.

இதைக்கேட்ட அந்த முரடனோ கோபத்துடன் "நீ எதற்கடா அதைக் கேட்கிறாய்? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ" என்று சீறிப் பாய்ந்தான்.

உடனே அந்த சிறுவன் கண்கள் கலங்க "அவனுக்கு அடிக்கும் அடிகளில் பாதியை எனக்குத் தந்துவிடு, பாவம் அவன் தாங்கமாட்டான்" என்றான்.

இதைக் கேட்டதும் அந்த முரடனின் கல் மனதும் கரைந்து விட்டது. தனது செய்கைக்காக வெட்கப்பட்ட அவன் அவ்விடத்தை விட்டு சென்று விட்டான்.

பெரியாரின் வாழ்வில்...!



முரடனின் மனதை இளக வைத்த அந்தச் சிறுவன் தான் பின்னாளில் உலகப் புகழ் பெற்ற கவிஞனான். **அவர்தான் பைரன்.**

## பொது அறிவுத் தகவல்கள்...



★ துணியில் பத்திரிகை வெளியிடும் நாடு ஸ்பெய்ன்.
★ மனிதனின் பார்வையை விட பூனையின் பார்வைத்திறன் 8 மடங்கு அதிகமாகும்.
★ திரை அரங்குகளே இல்லாத நாடு பூட்டான்.
★ பாம்பு நாக்கின் மூலம்தான் வாசனையை நுகர்கிறது.
★ வர்ணத் தொலைக்காட்சியில் பச்சை, நீலம், சிவப்பு நிறங்களே அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன.
★ உலகின் மிகப்பெரிய நூலகம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள லெனின் நூலகமாகும்.
★ சுவிற்சர்லாந்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஒரு வருடமாகும்.
★ ஒருநாளில் கறையான் 30 ஆயிரம் முட்டைகளை இடுகிறது.
★ நத்தைகளால் 3 ஆண்டுகள் தொடர்ச்சியாக நித்திரை கொள்ளமுடியும்.
★ ஐக்கிய இராச்சியத்தின் பெயரை அந்நாட்டின் முத்திரைகளில் காண முடியாது.

## குட்டீஸ் பரிசுப் பொதி - 33

★ இலங்கையில் இப்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:
புதுவிதி, 107, இராசவீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்பொதி - 32
முடிவுத்திகதி: 03.03.2017

குட்டீஸ் பரிசுப் பொதி - 31 முடிவுகள்

**விடை: இரா.சம்பந்தன்**

★ யதுஷா பானுராஜா
தரம் - 8C
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கரவெட்டி

★ எம்.எம்.எப்.ஆதிலா
தரம் - 9
அஸ்ஸம்ஸ் மு.வி கெலிஓயா

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம். (தபால் அட்டையில் பாடசாலை தரம் குறிப்பிட வேண்டும்.)

# பண்டைத் தமிழகத்தில் வண்டிகள்

முனைவர் ஜெ.அரங்கராஜ்
(ஆய்வறிஞர், யாழ்ப்பாணம்)



பண்டைத் தமிழக வரலாற்றில், பல் வகைப்பட்ட இனக் குழுக்கள் விளங்கின. அவ்வாறான இனக் குழு சமூக வகைப்பில் ஒவ்வொரு இனக் குழுக்களுக்கும் இடையில் வணிகப் பரிமாற்றமும், மணவினைத் தொடர்புகளும் மோதல்களும், பெரிதும் இருந்து வந்துள்ளன. இவ்வாறான மோதல்களுக்கும், வாழ்வியல் பயணங்களுக்கும் ஏற்புடைய விரைவுக் கருவிகள், தொடக்ககால விலங்குகளை அடுத்து, சக்கரக் கண்டுபிடிப்பினை அடுத்து, உருவான வண்டிகளே ஆகும். இவ்வண்டிகள் இனக்குழு, சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம், தொடக்க நிலையில் ஒரு திணைக்குள்ளாயும், பின்பு ஒரு திணையிலிருந்து இன்னொரு திணைக்குமாகவும் பல்வகைப் பயன்பாட்டிலும் விளங்கின.

வணிகப் பயன்பாட்டில் இன்றியமையாத பொருட்களாக விளங்கியவை உப்பும், நெல்லுமாகும். நெல் மருத நிலத்தில் ஒரு பொதுப்படையான உணவாக உருவம் பெற்றிருந்தது. அதுபோலவே, உப்பு நெய்தலின் வணிக முதன்மைத் தன்மை வாய்ந்த உற்பத்திப் பொருளாக விளங்கியது. குறிஞ்சி, முல்லை நிலத்தில் உணவுக்கும், இறைச்சிகளைப் பதனம் செய்வதற்கும் இன்றியமையாததாக உப்பு விளங்கியது. நெய்தலில் விளையக் கூடிய உப்பினை குறிஞ்சி, முல்லைக்குக் கொண்டு செல்வதற்கென்றே உருவான குழுவையே பண்டைத் தமிழ் இலக்கியங்கள் 'உமணர்கள்' என்று அழைக்கின்றன. இவ் உமணர்கள், யானையிறச்சியுண்ணல், முல்லைத்திணையில் மணவுறவு கொள்ளல் முதலாய வழமைகளைக் கொண்டிருந்தமையால் இவர்கள் நெய்தல் நிலத்தைச் சார்ந்தவர்கள் இல்லை எனலாம். இதனை,

**தம் நாட்டு விளைந்த வெண்ணல் தந்து**
**பிற நாட்டு உப்பின் கொள்ளை சாற்றி**
**நெடுநெறி ஒழுகை நிலவுமணல் நீந்தி**
**அவனுறை முனிந்த ஒழுக் கலொடு புலம்பெயர்ந்து**
**உமணர் போகலும் இன்னாதாகும்**
**நற்றி 183:1-5**

மேற்கண்ட அடிகளில் உமணர்கள் பிறநாட்டில் விளைந்த உப்பினை மாறு செய்வதாக சொல்லப்படுகின்றபடியாலும், அவர்களது நெய்தலுக்குப் பொருந்தாப் பண்புகளாலும் அவர்கள் குறிஞ்சி, முல்லை ஆகிய பகுதிகளில் இருந்து உப்பின் தேவை கருதி வெளிப் போந்து வணிகக் குழுவாக மாறிய கூட்டம் எனக் கொள்ளலாம்.

இவ்வாறு வணிகக் கூட்டத்தினர் தங்களது வணிகப் பயன்பாட்டிற்கு முல்லை சார்ந்த பெருங் காளைகளையும், நெய்தல் சார்ந்த கோவேறு கழுதைகளையும் பெரிதும் பயன்படுத்தினர்.

இவ் விலங்குகளைக் கொண்டு அவர்கள் கட்டமைத்த வண்டிகளே "ஒழுங்கை சாகாடு" என வழங்கப்பட்டன. வண்டி எனும் சொல் வயிற்றையும் குறிக்கும். உணவினை வாங்கிக் கொள்கின்ற, தேக்குகின்ற இடம் 'வண்டி' என வயிறுபட்டதுபோல, பொருட்களை நிறைய தேக்கிக் கொள்கின்ற, நிறைத்துக் கொள்கின்ற அமைப்பாதலால் வண்டி எனப்பட்டதெனலாம். உமணர்கள், உப்பு வணிகத்திற்குப் பயன்படுத்திய வண்டிகள் 'ஒழுங்கை' என்றும், 'சாகாடு' என்றும் அழைக்கப்பட்டன. இவ் வகையான வண்டிகள் மிகவும் திறனுடன் செய்யப்பட்டன. மத்தளம் போன்ற முழு மரத்தால் இணைக்கப்பட்டுச் செய்யப்பட்ட உருளைகள் சக்கரங்களாகப் பயன்படுத்தகப்பட்டன. ஆரங்கள் மிகவும் திருத்தமுடன் கோர்க்கப்பட்டன. ஏற்றக் கூடிய பொருளின் எடையைத் தாங்குதலுக்கேற்ப வலிய 'பார்கள்' அமைக்கப்பட்டன. பொதுவாகவே உப்பு தண்ணீரில் கரையும் இயல்பினையுடையது. உமணர்கள் செல்லும் வழிகளில் பெய்யும் மழையினால், உப்புக் கரைந்துவிடாமல் பாதுகாக்க தாழை மடலாலாகிய பாயால் வண்டியின் மேற்பகுதி வேயப்பட்டிருந்தது. இவ்வாறான வண்டியமைப்பை உமணர்கள் கொண்டிருந்தமையினை,

**கொழுஞ்சுட் டருந்திய**
**திருந்துநலை யாரத்து**
**முழவின் அன்ன**
**முழுமா உருளி**
**எழூஉப் புணர்ந்தன்ன**
**பரூஉக்கை நோன்பார்**
**மாரிக் குன்றம்**
**மழைசுமந் தன்ன**
**ஆரை வேய்ந்த அறை**
**வாய்ச் சகடம்**
**பெரும்பாணாற்றுப்படை 46-50**

மேற்கண்டவாறாக அறியலாம்.

இவ்வாறான ஒரு வண்டியை வடிவமைப்பதற்குத் தேர்ந்த தச்சர்கள் இனக்குழு சமூக அமைப்பிலேயே தோன்றியிருக்க வேண்டும். தச்சர்களின் மிகச் சிறந்த தொழிநுட்ப அறிவின் வெளிப்பாட்டினை ஒட்டியே, பொருளின் எடைக்கேற்ப வண்டி வடிவமைப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் மிகப் பெரிய மரங்களே உருளைகள் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் சமச்சீரான ஆர வடிவமைப்பும், பார்களின் உறுதிப்பாட்டமைப்பும் சிறந்த தொழிநுட்பத் தன்மையை விளக்குவதாக உள்ளன.

பழக்கப்படுத்திய விலங்குகளின் கொம்புகளிலும், கழுத்துகளிலும் வேம்பு முதலாய தழைகளைக் கட்டுதல் தொல் குடிகளின் வழமையாகும். இவற்றின் வழி தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பினைப் பெற இயலும் என்று அம்மக்கள் நம்பினர். இதனைப் பண்டைய இலக்கியங்களிலும் காணலாம்

**கோட்டிணர் வேம்பின் ஏட்டிலை மிடைந்த**
**படலைக் கண்ணிப் பரைரேரெறுழ்த் திணிதோள்**
**முடலை யாக்கை முழுவலி மாக்கள்**
**சிறுதுளைக் கொடுநுகம் நெறிபட நிரைத்த**
**பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்**
**சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்**
**பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி**
**பெரும்பாணாற்றுப்படை 59-65**

வளைந்த நுகத்தடியில் சிய துளைகளையிட்டு மென்மையான தடித்த கயிற்றால் மாடுகளைப் பிணித்தல் இன்றளவும் நடைமுறையிலுள்ள ஒரு பண்பாகும்.

## வண்டி புதைதல்

'சாகாடு' எனும் சரக்குகளை ஏற்றும் வண்டியில் அளவுக்கதிகமாக பொருட்களை ஏற்றும்போதும் மணற் பாதைகளிலும், மழைக்கால சேற்று நிலங்களிலும் வண்டிகள் செல்லும்போதும், அச்சு முறிதலும், குடைசாய்தலும், சேற்றிலும் மணலிலும் சில்லுகள் சிக்கிக் கொள்ளுதலும் நிகழ்ந்துள்ளது.

இதனைத் தவிர்க்கவே வண்டிகளில் ஏற்றக்கூடிய பொருட்களின் அளவை வரையறை செய்யும் தன்மைகள் வளர்ந்துள்ளன எனலாம். சேற்றிலும் மணலிலும் மாட்டிக் கொண்ட வண்டிகளை மீட்கும் தொழில்நுட்பங்களும் பின் பற்றப்பட்டமைக்கான சான்றுகளும் உள்ளன.

**பீலிசெய் சாக்காடும் அச்சிறும் அப்பண்டம்**
**சாலமிகுத்தப் பெயின்**

எனும் வள்ளுவனாரின் குறள் வழியும், வண்டியின் அச்சுமுறிந்தமையினை அறியலாம். மேலும் பண்டைய நாளில் தமிழகத்தின் ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றாக மயிலிறகு விளங்கியமையும், பல இடங்களில் சேகரிக்கப்பட்ட மயிலிறகை அளவுக்கதிகமாக வண்டிகளில் ஏற்றி துறைமுகங்களில் கொண்டு வந்தமையையும் மேற் கண்ட குறளடிகள் உறுதி செய்யும்.

கரிய பழஞ் சேற்றிலே மாட்டிக் கொண்ட வண்டியை மிகுந்த முயற்சி செய்து மேலே இழுத்தமையைப் பின்வரும் அடிகளின்வழி அறியலாம்.

**மாமுழூதள்ளல் அழுந்திய சாகாட்டு**
**எவ்வந்தீர வாங்குந் தந்தை**
**கைபூண் பகட்டின் வருந்தி**
**வெய்ய உயிர்க்கும் நோயாகின்றே (அகம் 140:12-15)**

மிகுந்த அகலமான உருளைகளையுடைய வண்டிகளே கடற்கரை மணலில் செல்வதற்கு ஏற்புடையதாக இருக்கும் மேலும் மழைக்காலத்தில் கடற்கரை மணலின் இளகு தன்மை மேம்பட்டு, வண்டி செல்லுதற்கு ஏற்புடையதாகாது. இக்காலங்களில் உப்பு வணிகர்கள் மிகுந்த இடர் பாட்டுக்குத் தள்ளப்படுவார்கள். உப்பு வண்டி மணலில் மாட்டி அதனால் உப்பு முழுவதும் மழையால் சிதைந்தமையை,

**அருங்கரை நின்ற உப்போய் சகடம்**
**பெரும்பெய றலையவீந் தாங்கிவள் குறுந்தொகை 165:3-4**

எனும் அடிகளால் அறியலாம். மேலும் இந்த வண்டியினது மேற்பகுதியில் தாழைக் குடை அமைக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் உப்பளத்திலிருந்து மணலுக்கு வெளியில் நிறுத்தியுள்ள தங்கள் வண்டியில் உப்பு நிரப்புவதற்குப் பயன்படுத்தும் ஓர் இடைநிலை ஊர்ந்தாக இவ் வண்டியை எண்ணலாம் என்பதற்கும் இடமுண்டு - எனில் ஆழ்ந்த மணற்பரப்பில் முல்லை நிலப்பகுதில் ஓடும் வண்டிகள் செல்ல இயலாது ஆனபடியால் மணலில் இயங்கும் அமைவில் இதுபோன்ற வண்டிகளைப் பயன்படுத்தி இருக்கலாம். பொருளை மாற்றுதற்குரிய 'மாற்றியக்கி' என்பதால் மேற்கூரை அமைக்காது விட்டிருக்கலாம்.

**(அடுத்த வாரமும்...)**




பாபநாசம் படத்தில் கமலின் மகளாக நடித்தவர் மலையாள நடிகை நிவேதா தோமஸ். இப்போது தெலுங்கின் ஜீனியர் என்.டி ராமா ராவ் (என்.டி.ஆர்) உடன் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். அதன் படப்பிடிப்புகள் அடுத்த மாதம் தொடங்க இருக்கையில் நானியுடன் நடிக்கும் படத்தின் படப்பிடிப்புக்காக அமெரிக்கா சென்றுள்ளார்.



பொலிவூட்டில் கங்கனா ரணாவத் நடித்திருக்கும் படம் 'ரங்கூன்'. இதில் சைஃப் அலிகான், ஷாஹித் கபூர் இருவரும் மீசை வைத்திருந்ததால் பிரெஞ்சு முத்தக்காட்சியில் மிகவும் இடைஞ்சலாக இருந்தது என தெரிவித்துள்ளார் கங்கனா.



'உட்தா பஞ்சாப்' படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றியவர் ஷாகித் கபூரின் தம்பி இஷான் காதர். இவர் 'சில்ரன் ஒஃப் ஹெவன்' படத்தை இயக்கிய மஜித் மஜிதியின் 'ஃப்ளோட்டிங் கார்டன்' படத்தின் மூலமாக நடிகராகிறார். முழுக்க முழுக்க புது முகங்களை வைத்து இயக்கும் படத்திற்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார்.







பிரபுதேவா, 'தேவி'க்குப் பிறகு நடிக்கும் படத்தில் குங்ஃபூ பழக்குபவராக நடிக்கிறாராம். இதில் இவருக்கு அப்பாவாக நடிக்கப் போவது இயக்குநர் தங்கர்பச்சான். கிராமத்தில் நடக்கும் பிரச்னை ஒன்றைத் தீர்க்க சீனா சென்று குங்ஃ பூ கற்றுக்கொள்ளும் நாயகன் பற்றிய கதையாம். புதுமுக இயக்குநர் அர்ஜூன் இயக்கும் இப்படத்தின் பெயர் 'எங் மங் சங்'.



அண்மையில் வழங்கிய நேர்காணல் ஒன்றில் ஹன்சிகாவிடம் "வர்த்தக ரீதியான படங்களை தவிர்த்து கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களில் நடிப்பீர்களா?" எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர் 'நான் தமிழ் சினிமாவுல நடிக்க ஆரம்பிச்சு ஐந்து வருடங்கள்தான் ஆகியிருக்கு. நாயகியை மையப்படுத்திய வேடங்களை தேர்ந்தெடுக்க இன்னும் அனுபவம் தேவை' எனப் பதிலளித்துள்ளார்.





ஷாருக்கான் நடித்த 'ரயீஸ்' திரைப்படத்தின் விளம்பரப்படுத்தல் வேலைகளுக்காக மும்பையில் இருந்து டெல்லிக்கு கிராந்தி எக்ஸ்பிரஸ் ரெயிலில் சென்றார். ரெயிலில் இருந்தவாறு ரசிகர்களை பார்த்து கைய சைத்தார். அவரை பார்க்க ரசிகர்கள் ரயில் நிலையங்களில் குவிந்ததால் ரயில் நிலையத்தில் இருந்த கடைகள் மற்றும் பொதுச்சொத்துக்கள் சேதமாகின. அங்கு கடை வைத்திருந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளமையால் பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தியமை , கலவரத்தினை ஏற்படுத்தியதாக ஷாருக் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.






நிவின்பாலி மலையாளத்திலிருந்து தமிழுக்கு வருவது போல தமிழிலிருந்து மலையாளத்துக்கு செல்கிறார் விஷால். மோகன் லால் நடிப்பில் 'கிராண்ட் மாஸ்டர்' படத்தை இயக்கிய பி.உன்னிகிருஷ்ணன் இயக்கும் புதிய படத்தில்தான் நடிக்க இருக்கிறார் விஷால். படத்தில் ஒரு மிக முக்கியமான வேடத்தில் நடிக்கப் போகிறாராம். மோகன் லால் நாயகனாக நடிக்கும் இப்படத்தில் ஹன்சிகாவும் இருக்கிறார்.




சுகுமார் இயக்கத்தில் ராம் சரண் நடிக்கும் படத்தில் கதாநாயகியாக அனுபமா பரமேஷ்வரன் பெயர் முடிவு செய்யப்பட்டிருந்தது. தயாரிப்பு தரப்பில் அவர் பொருத்தமாக இருக்கமாட்டார் எனத் தெரிவித்ததும் சமந்தா நாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அனுபமா இரண்டாவது நாயகியாக மாற்றப் பட்டுள்ளார்.

தனது 25ஆவது பிறந்தநாளை '2.0' படப்பிடிப்பு தளத்தில் கொண்டாடியிருக்கிறார் எமி ஜாக்ஸன். அங்கிருந்து முகநூல் லைவ்வில் வந்தவர் நான்காவது தடவையாகவும் தனது பிறந்தநாள் படப்பிடிப்பு தளத்தில் கொண்டாடப்படுவதாகவும் பெற்றோரைப்பிரிந்திருப்பது வருத்தமாக உள்ளதாகவும் தெரிவிக்க ரசிகர்கள் 'ரியாக்சன்'களிலும் 'கமெண்டு'களிலும் உருகியிருக்கிறார்கள்.



தூம் படத்தில் வரும் பாடலான 'தூம் பஜாலே' பாடல் அனைவருக்கும் நினைவிருக்கும். அப்பாடலுக்கு இசையமைத்தவர் பொலிவூட்டின் முன்னணி இசையமைப்பாளர் ப்ரீத்தம். இவர் தற்போது தெலுங்கில் ரவிதேஜா நடிக்கும் 'ட்ச் சேசி சூடு' படத்திற்கு இசையமைப்பதன் மூலம் தெலுங்கில் அறிமுகமாகவுள்ளார்.



ஜல்லிக்கட்டுக்கான போராட்டங்களை தொடர்ந்து கர்நாடகாவின் பாரம்பரிய விளையாட்டான 'கம்பாளா' வின் தடை நீக்குமாறு பலரும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் கன்னட நடிகரான ஷிவ்ராஜ்குமார் தான் நடிக்கும் படமான 'ஈசூரு டங்கே' வில் காளைக்கென ஒரு முக்கியமான வேடத்தை கொடுத்துள்ளாராம். படத்தில் அதனுடன் விளையாடுவது போன்ற காட்சிகளும் அமைக்கப்படவுள்ளன.





அரவிந்தசாமியின் புதையல் படத்தை இயக்கிய செல்வா மீண்டும் அவரை வைத்து ஒரு படத்தை இயக்குகிறார். இதன் நாயகிகளாக ரித்திகா சிங் மற்றும் நந்திதா ஆகியோர் நடிக்கின்றார்கள். மூன்றாவது கதாநாயகிக்கான தேடுதல் நடந்து கொண்டுள்ளது.



கிம் கர்தாஷியனுக்குப் பிறகு தன் இமோஜி ஸ்டிக்கர்ஸ் அடங்கிய தொலைபேசி செயலியை வெளியிட்டுள்ளார் சோனம் கபூர். 'நீர்ஜா' மற்றும் தனது புகைப்படங்களை ஸ்டிக்கர்களாக மாற்றியுள்ளார் சோனம்.



# 02

# உன்னை நீயே அறிவாய்!

## பெரிதாக ஆசைப்படுங்கள்!

சொந்தமாக தொழில் தொடங்க முடிவு செய்தபின், என்ன தொழில் செய்யப் போகிறோம்? எப்படிச் செய்யப்போகிறோம்? என்பதைத் திட்டமிட வேண்டும். திட்ட மிட்டபடி அதனை நடைமுறைப்படுத்த என்னவெல்லாம் வேண்டும் என்பது தெரிந் திருக்க வேண்டும். வாணிபம் என்பது பெட்டிக்கடை தொடங்கி நடத்துகிற மாதிரிதான் என்று நினைத்தால், செய்யவே நினைக்காதீர்கள். தொழில் என்பது பெரிய விடயம். அதனை முறைப்படி செய்தாக வேண்டும்.

பெயர் வைப்பதிலிருந்து, அரசிடம் பதிவு செய்வது, முறையாக வரி கட்டி, படிப்படியான வளர்ச்சியை அடைந்து முன்னணி தொழிலதிபராக உயர்வது தான் வாணிபம். மற்றவையெல்லாம் வாணிபமல்ல என்பதை முதலில் உண ருங்கள். இப்படிப்பட்ட ஒரு வளர்ச்சியை விரும்பும் அணுகுமுறைதான் புதிதாக தொழில் தொடங்க நினைக்கும் ஒவ்வொ ருவரிடமும இருக்க வேண்டும்.

சொந்தமாகத் தொழில் செய்ய மனதள வில் தயாராகிவிட்டீர்கள் என்றால், வெற்றி கரமாக நீங்கள் முதல்படியைத் தாண்டி விட்டீர்கள் என்று அர்த்தம். அடுத்து...?

தொழிலதிபராக ஆவதற்கு மனதளவில் தயாராவது மிகவும் அவசியம். சொந்த தொழில் செய்யவேண்டும் என்ற ஆர்வம் தொடர்ந்து உங்கள் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு இருந்தால், நீங்கள் மனதளவில் தயாராகி விட்டீர்கள் என்றே அர்த்தம். சரி, அடுத்து என்ன?

## ஜாக் மாவைப் பாருங்கள்!

சொந்தமாக தொழில் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும் பெரும்பாலான வர்களுக்கு என்ன தொழில் செய்வது என்பதில் மிகப்பெரிய குழப்பம் ஏற்படும். தெரிந்த தொழிலை விட்டவனும் கெட்டான், தெரியாத தொழிலை தொட்டவனும் கெட்டான் என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால், அது முற்றி லும் உண்மை என்று சொல்ல முடியாது. ஏனெனில் அனுபவமில்லாத முற்றிலும் புதிய தொழில்களில் இறங்கி பெரும் சாதனை படைத்த பலரும் இந்த உலகத் தில் உதாரண புருஷர்களாக இருக்கவே செய்கிறார்கள்.

உதாரணமாக, ஜாக் மா-வைச் சொல்ல லாம். இவருக்கு ஆங்கிலம் தெரியாது. முன்பின் சொந்தமாக தொழில் செய்த அனுபவம் இல்லை. வேலை தேடிக் கடைகடையாக அலைந்தார். ஆனால், இன்று அவரது அலிபாபா நிறுவனம், உலகம் முழுவதும் ஒன்லைன் வியாபாரத் தில் கொடிகட்டிப் பறக்கிறது. அவர் செய்ததெல்லாம் ஒன்றுதான். திறந்த மனதுடன் சந்தையை அணுகினார். அவருக்குள் இருந்த தேடல் அவருக்கு தொழிலுக்கான வழியைக் காண்பித்தது.

அதேநேரம், தொழிலை வளர்ப்பதற் கான திறனையும் அறிவையும் வளர்த்துக் கொள்ள தன்னை ஒரு மாணவனாக மாற்றிக் கொண்டார். எல்லோருக்கும் எல்லாம் தெரிந்து விடுவதில்லை. எனக்கு ஒன்றும் தெரியவில்லையே என்று முயற் சிக்காமல் இருந்துவிடக் கூடாது. எந்த உயரத்துக்குப் போனாலும் கற்றுக்கொள்ள நீங்கள் தயாராக இருந்தால், கற்றுக்கொடுக்க இந்த உலகமே காத்திருக்கிறது.

## உங்களுக்காகக் காத்திருக்கும் சந்தை

உங்கள் முன்னே விரிந்து கிடக்கும் சந்தை, தொழிலதிபராக விரும்பும் உங்களுக்கு பல்வேறு வாய்ப்புகளுடன் காத்திருக்கிறது. உங்கள் மனதைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். சந்தையைக் கூர்ந்து கவனியுங்கள். வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றில் உங்களுக்குத் தேவையானதை நீங்கள் நிச்சயம் கண்டடைவீர்கள்.

இப்போது சந்தையில் என்னென்ன தொழில்கள் உள்ளன, அவற்றில் எதை நீங்கள் தேர்ந்தெடுப்பது என்பதைப் பற்றி பார்க்கலாம். ஏனெனில் சரியான தொழிலை நாம் தேர்வு செய்தாலே போதும், நம் வெற்றியின் 50 சதவிகிதம் நிச்சயமாகிவிடும்.

உற்பத்தி (Manufactruing), வர்த்தகம் (Trading) மற்றும் சேவை (Service) ஆகிய துறைகள் உள்ளன. பெரும்பாலும் அனைத்து தொழில்களும் இந்தத் துறைக ளுக்குள் அடங்கிவிடும். இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள், நுகர்வுப் பொருட்கள் போன்றவை உற்பத்தித் துறையிலும், ஹோட்டல், சுற்றுலா, மருத்துவம், கணக் காய்வு மற்றும் தொழில்நுட்ப சேவைகள் போன்றவை சேவைத் துறையிலும் அடங் குகின்றன. வர்த்தகத்தில் பொருட்களை ஒருவரிடம் இருந்து வாங்கி இன்னொரு வரிடம் விற்கும் அனைத்தும் அடங்கும். அது நேரடி வர்த்தகமாகவும் இருக்கலாம், ஒன்லைன் வர்த்தகமாகவும் இருக்கலாம்.

## உற்பத்தித் துறை

உற்பத்தித் துறையில் மிகப் பெரும் வாய்ப்புகள் நமக்குக் காத்திருக்கின்றன. ஏனெனில் பெரும்பாலான பொருட்களை நாம் இறக்குமதிதான் செய்துகொண்டு இருக்கிறோம். இது நம் நாட்டின் பொரு ளாதார வளர்ச்சியைப் பெருமளவு தடுக் கிறது. உற்பத்தித் துறையில் பெருமளவில் முதலீடு செய்ய அரசு தயாராக இருக்கிறது. எனவே, வாய்ப்புகளும் நிறையவே உள்ளன.

உற்பத்தித் துறையில் தொழில் செய்ய விரும்பினால், விவசாயமோ, இயந்திரமோ எந்தப் பொருளை உற்பத்தி செய்ய விரும்புகிறீர்களோ, அந்தப் பொருள், உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம், உபகரணங்களைக் கையாளும் அறிவு ஆகியவை அவசியம் தேவை. அல்லது இவை குறித்த அறிவும் அனுபவமும் கொண்ட நபர்களை வேலைக்கு வைக்கும் அளவுக்கு கையில் மூலதனம் இருக்க வேண்டும்.

சரி, பொருளை உற்பத்தி செய்து விட்டீர் கள். உற்பத்தி செய்த பொருளைத் தேடி வந்து வாங்குவார்கள் என்று காத்திருந்தால், காலம் முழுக்கக் காத்திருக்க வேண்டியதுதான். நீங்கள் யாருக்காக அந்தப் பொருளை உற்பத்தி செய்தீர்களோ, அவர்களைத் தேடி நீங்கள் தான் போக வேண்டும். வாடிக் கையாளர்களைக் கண்டு பிடிப்பதும், அவர்களிடம் உங்கள் தயாரிப் புகளை விற்பதும் ஒரு கலை. அதைப் பற்றி விரிவாகப் பின்பு பார்க்கலாம்.

விவசாயம் தனித்துறையாக எடுத்துக் கொள்ளப் பட்டாலும், அதனையும் உற்பத்தித் துறையாகவே எடுத்துக் கொள்ளலாம். விவசாயம் தற்போது பெரும் வாணிபமாக உருவெடுக்கத் தொடங்கியுள்ளது. கார்ப்பரேட் நிறுவ னங்கள் நேரடியாக விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கி யுள்ளன. இயற்கை விவசாயம் என்று சொல்லப் படும் ஓர்கானிக் விவசாயத்துக்கு மக்களி டையே மவுசு அதிகரித்து உள்ளது. இதனால் பெரும்பாலான படித்த இளைஞர்கள் விவசாயத்துக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

## வர்த்தகம்

தொழில் செய்ய விரும்பும் பெரும் பாலானோர் தேர்வு செய்வது வர்த்தகம் தான். ஏனெனில் இதில் உற்பத்தியாளரிட மிருந்து பொருட்களை வாங்கி வாடிக்கை யாளரிடம் விற்பதுதான் வேலை. இது பலருக்கு எளிதாகவும் அதிக லாபம் தருவதாகவும் இருப்பதால் வர்த்தகம் அதாவது, ஏற்றுமதி செய்வதில் அதிக அளவில் ஆர்வம் காட்டுகிறார்கள். இதற்குப் பணமும் வாடிக்கையாளர்க ளைப் பிடிக்க தேவையான முயற்சியும் இருந்தால் போதுமானது.

தற்போது ஒன்லைன் வர்த்தகம் பரவலாக வரவேற்பு பெற்று வருகிறது. அதிலும் வாய்ப்புகள் உள்ளன.


## சேவைத் துறை

தொழில்நுட்ப வளர்ச்சியும், நவீன யுகமும் சேவைத் துறையில் மிக விரைவாக பணம் சம்பாதிக்க தேவையான வழிக ளைத் தனக்குள் வைத்திருக்கின்றன. பொருளை உற்பத்தி செய்பவருக்கும், பொருளை வாங்குபவருக்கும் இடையில் பாலமாக இருப்பதுதான் சேவைத் துறை.

சேவைத் துறையில் பல வகை தொழில் கள் உள்ளன. தற்போது ஸ்மார்ட்போன் பயன்பாடும், இணையப் பயன்பாடும் அதிகரித்துவிட்டதால், சேவைத் துறையில் தொழில் செய்வோர் களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதில் நீங்களும் ஒருவராக ஆக விரும்பினால், ஸ்மார்ட்போன், இணையம் மற்றும் ஆப் ஆகியவற்றின் பயன்பாடு குறித்தும், மக்களின் மனநிலை குறித்தும் தெரிந்திருக்க வேண்டும்.

மக்களின் தேவையும், மன நிலையும் மாறுவதற் கேற்ப நாமும் மாறிக் கொண்டே இருக்க வேண்டும்.


(இன்னும்...)





# மயக்கமும்... மர்மமும்...

பகுதி - 10




நன்றி:
ஆனந்தவிகடன்





# யா / உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்



அதிபர் கா.ரவீந்திரராசா

தொகுப்பு : அ.றொக்ஷன்

## வரலாறு

அமெரிக்க மிஷனரியினரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் யாழ்.உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயமும் ஒன்று.

இது 1876ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தரம் 5 வரை மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக மேற்படி பாடசாலை விளங்கியது.

அதனைத்தொடர்ந்து படிப்படியாக இப்பாடசாலை தரம் 9 வரை உயர்வடைந்து தற்பொழுது தரம் 11 வரை வகை 2ஐச் சேர்ந்த இடைநிலைப்பாடசாலையாக வளர்ச்சியடைந்துள்ளது.

1995 இல் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இப்பாடசாலையயில் அக்காலத்தில் கல்வி கற்ற 496 மாணவர்கள் இடம்பெயர்ந்தனர். இதனால் மாணவர்கள் எண்ணிக்கையில் பெரிதும் வீழ்ச்சியடைந்தது.

குறித்த பாடசாலையின் வளர்ச்சிக்கு க.புஷ்பரட்ணம், கு.திலீபன் ஆகியோர் பங்காற்றியுள்ளனர்.

தற்பொழுது 2016 ஆம் ஆண்டிலிருந்து கா.ரவீந்திரராசா அதிபராக கடமையாற்றி வருகின்றார். அவரின் நிர்வாகத்தின் கீழ் 260 மாணவர்களுக்கு 23 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.



## சாதனைகள்

- யாழ்.வலயத்தில் உள்ள வகை - 2 இற்குட்பட்ட பாடசாலைகளுக்குள், உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயம் முன்மாதிரியான பாடசாலையாக விளங்குகின்றது.
- யாழ்.வலயத்திலுள்ள வகை -2 இற்குட்பட்ட பாடசாலைகளுள், சிறந்த நூலகத்தினைக் கொண்ட பாடசாலை என இப்பாடசாலைக்கு 3 ஆவது இடம் கிடைத்துள்ளது.
- இப்பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியர் திருமதி.த.கணேசமூர்த்தி 2015இல் "பிரதீபா பிரபா" ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டார். அதனைத்தொடர்ந்து தமிழ்ப்பாட ஆசிரியர் திருமதி.எம்.எப்.சாள்ஸ் 2016இல் "பிரதீபா பிரபா" ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டார்.
- மேற்படி பாடசாலையில் தற்பொழுது தரம் ஒன்றில் மாணவர்கள் சேரும் விகிதம் அதிகரித்துள்ளது. அத்தோடு மாணவர்கள் இடைவிலகலும் இல்லாமலுள்ளது.
- 2015இல் நடைபெற்ற வடமாகாண மட்ட விளையாட்டுப்போட்டியில் இப்பாடசாலையைச் சேர்ந்த அதிகூடிய மாணவர்கள் பங்குபற்றி யுள்ளனர்.
- மாணவர்களின் ஒழுக்கவியல் தற்பொழுது மெருகூட்டப்பட்டுள்ளது டன், அவர்களின் வரவும் 90வீதமாக உயர்வடைந்துள்ளது.









## சவால்கள்

மேற்படி பாடசாலையை அண்மித்துள்ள மாணவர்கள் நகர் புறத்திலுள்ள பெரிய பாடசாலைகளை நோக்கி நகரும் தன்மை அதிகமாகவுள்ளது.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்ற பெரும்பாலான மாணவர்களின் குடும்பம் பெரிதும் வறுமையிலுள்ளதினால் அக்குடும்பம் சார்ந்த மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது.

குறித்த பாடசாலையின் மாணவர்கள் தேசியமட்டப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்ற நிலையில் அவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கு மைதானம் இல்லாமை பெரும் குறைபாடாகவுள்ளது.




# தலைமுறைகள்

சாந்தன்

எதிரிலும், வலத்திலும் கண்ணுக்கெட்டிய தூரம் வயல்வெளி. வருடத்தில் பாதி நாட்கள் வறண்டு போய்ப் பாலை வனங்களையும், ஸ்தெப்பிக ளையும் கற்பனை பண்ணச் சௌகரி யமாகக் கோலங் காட்டுகிற வெளி.

தொலைவில் வயல் நடுவே, பத்திரகாளியம்மன் கோயிலும், பக்கத்தில் தேர்க்கொட்டகையும், இங்கே இவர்கள் வகுப்பில் செய்கிற மாதிரி உருவங்கள் போல, கோயில ருகே ஓடுகிற தெரு கண்ணில்படாது, ஆனால் இருந்திருந்துவிட்டு அதில் போகிற வாகனங்கள் மட்டும் சவர் காரச் செப்புகளாய்த் தெரிகின்றன. வயல்வெளியின் முடிவில், பெரு வரம்பாய் மீண்டும் பனைகள்.

> “முதலாம் ஆண்டுக்கு நிர்மாணத் தொழில்நுட்பம் இப்போது. பேச்சுக்களும் சிரிப்புக்களும் கரைந்து காலடி ஓசைகளே நெருங்கின. பரீட்சையே குறியாய் இதுவரை பழகியவர்களுக்கு, சுய சிந்தனையே ஆதாரமாகக் கொள்ள வேண்டிய பரப்புகளைப் பரிச்சயம் பண்ணி வைக்க வேண்டியிருக்கிறது.”

கல்லூரி மதிலோடு சணைத்துப் படர்ந்திருக்கின்ற வேம்பு, மாடி ஜன்னல் வரை வந்திருக்கின்றது. எட்டித் தொடலாம் போலக் கொப் புகள், காற்றிலசைந்தன. காற்று இங்கே வற்றாது வீசும், எல்லா நாளும், எல்லா வேளையும் ஓயாமல் சிலு சிலுக்கும். வெளிச்சத்திற்குக் கேட்க வேண்டியதேயில்லை. எந்த மழை மூடலிலும் மின்விளக்கே தேவைப் படாது - வரைதலுக்குக் கூட.

இதெல்லாவற்றிலும் முக்கியமா னதும் இருந்தது அமை. காற்றிலசை யும் கிளைகளுக்கும், இருந்திருந்து விட்டு, எங்கோ கரையும் காக்கைக ளுக்கும் துணையாய் அவன் குரல் தான் அதனைக் குலைக்கும்.

சூழலோடு இசைந்துபோய், அடுத்த வகுப்பிற்கான பாடத்தை இரைமீட்டபடி இருந்தவன், படிக ளில் மாணவர் ஏறிவரும் அரவங் கேட்டு தயாரானான். முதலாம் ஆண்டுக்கு நிர்மாணத் தொழில் நுட்பம் இப்போது. பேச்சுக்களும் சிரிப்புக்களும் கரைந்து காலடி ஓசை களே நெருங்கின. வழமைபோல் ஜெயக்குமாரின் தலை முதலில் தெரிந்தது.

“மோணிங், ஸேர்!”

“குட் மோணிங். உள்ள வாங்கோ...!” எல்லோரும் வந்து அமரும்வரை காத்தி ருந்தான்.

இந்த மட்டத்தில் கற்பிப்பதில் இரண்டு சவால்கள்.

பரீட்சையே குறியாய் இதுவரை பழகியவர்களுக்கு, சுய சிந்தனையே ஆதாரமாகக் கொள்ள வேண்டிய பரப்புகளைப் பரிச்சயம் பண்ணி வைக்கவேண்டியிருக்கிறது.

மற்றது, இவ்வளவு நாளும் உயர்தர வகுப்போ, சாதாரண தர வகுப்போ வரை - தாய்மொழி மூலம் படித்திருப்பார்கள், இங்கே, இப்போ ஆங்கில மொழி மூலம்.

எங்கள் நாட்களைப் போலில்லை. இருபது வருஷத்தில் எவ்வளவு மாற்றம்!

எவ்வளவுதான் முதலில் அறிமுகப்ப டுத்தி, பின்னர் குளிகைகளாகக் கொடுத் தாலும், மொழியையும் விளங்கி, அது சுமந்துவரும் பொருளையும் புரிந்து கொள்வதென்பது இவர்களுக்குக் கொஞ்சம் சிக்கலாய்த்தானிருக்கிறது.

ஆரம்பத்தில்.

“தொடங்கலாமா?...” எழுந்து முன்னால் வந்தான். இன்று, டாம்ப் புரூஃபிங். கட்டடங்களுக்கும், கட் டடங்களுக்குள்ளும் ஈரலிப்பு ஏன் பாதகமானது? அது எவ்வெவ்வாறு ஊடுருவும்? எப்படி அவற்றைத் தடுக்கலாம்? மூன்று அடிப்படை களிலும் விளக்கவேண்டும்.

அதற்குமுதல் ஆங்கிலம்,

“டாம்ப்” என்றால் என்ன?

“அணைக்கட்டு...”

“அது ‘டாம்’. இது ‘டாம்ப்..’ இரண்டு சொற்களையும் எழுதிக் காட்டினான்.

“இரண்டாவதுக்கு என்ன அர்த்தம்?” தானே சொல்ல வேண்டி வந்தது.

“ஈரம், ஈரலிப்பு.... சரி, புரூஃப் என்றால்?”

“நிறுவல்..” கடைசி வரிசையிலி ருந்து சுரேஷின் குரல், “நல்லது. அது ஒரு கருத்து. ஆனா இங்கே வேறு” - தொடர்ந்தான்.

- ‘தடை’ என்று சொல்லலாம்... “தடைகாப்பு... சரி, அதுக்கொரு உதாரணம்”

- கேள்வியுடன் கைக்கடிகாரத் தைப் பார்த்தான்.

பதில் கூட அங்கே இருந்தது. இருக்கிறது, இருக்கும்.

அநேகமாக எல்லோர் கைகளி லுமே கடிகாரம். நாலு விநாடிகள்.

“ஸேர்?....”

திரும்பினான். தண்ணீரா, அதிர்ச்சியா?

“புல்லட் புரூஃப்........”

**(நன்றி : உள்ளம் - 1989)**

# சொல்லத்தான் நினைக்கிறேன்



யாழ்பாடி

மகிந்த எதை நினைத்து யாழ் மண்ணில் கார்ப்பெட் வீதிகளை அமைத்தாரோ தெரியவில்லை. ஆனால் ஆட்சியில் இருந்தபோது தமிழர்களை அழித்த அவரின் கைங்கரியத்தை இப்போது அவரது கார்ப்பெட் வீதிகள் செய்து கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் ஒரு 23 வயது இளைஞனை இந்தக் கார்ப்பெட் வீதி காவு கொண்டிருக் கின்றது. இவருக்கு சாவதில் அத்தனை வேகம் இருந்துள்ளது போலும். “இதோ பத்து நிமிடத்தில் வந்து விடுகிறேன்” என்று வந்த அலைபேசி அழைப்பிற்கு பதில் சொல்லி விட்டு இயந்திரத்தின் காதை நன்றாகவே முறுக்க அதுவும் அரேபியக் குதிரை போல நாலுகால் பாய்ச்சலில் சென்று எதிரே வந்த வாகனத் தோடு மோதியுள்ளது. பின் பக்கமாக தூக்கி எறியப்பட்டு பிடரி அடிபட ஸ்தலத்திலேயே பலி.

இரும்புக் குதிரைகளின் அட்டகாசம் சமீப காலங்களில் வெகுவாக அதிகரித்தி ருக்கின்றது. விசனத்தை தருகின்றது. கார் பெட் தெருக்கள் தமிழ் இளைஞர்களின் தற்கொலைக் களங்களாகி வருகின்றன.

பல சாதனைகளை செய்யவேண்டிய வர்கள் அநியாயமாக தம்மைத் தாமே கொல்வதில் தீவிரமாக இருக்கிறார்கள். புள்ளி விபரங்களைப் பார்த்தால் 30 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களே இந்த விவேக மற்ற வேகத்தால் அழிகிறார்கள். தாம் செலுத்தும் இரும்புக் குதிரைகளில் காட்டும் வேகத்தை வேறு பல பயனுள்ள விடயங்களில் காட்டினால் அது சமுதாயத் திற்கு பயன்படலாம்.

சமீபத்தில் இறந்த இளைஞன் நல்ல ஒரு புகைப்பட கலைஞர். இவர் கைப்பட யாழ்ப்பாணம் பற்றிய புகைப்படத் தொகுப்பை தயாரித்து “ஒரு பறவையின் பார்வையில்” என்று தலைப்பிட்டு பிரபல அறிவிப்பாளர் அப்துல் ஹமீட்டுக்கு அனுப்பியிருந்தா ராம். “ஒரு திறமைசாலி அநியாயமாக இறந்துவிட்டார்” என்று ஹமீட் மனம் நொந்து இரங்கல் செய்தி அனுப்பி இருந்தார்.

அவர் மட்டுமா, மனம் நொந்து போகி றார்? ஒட்டுமொத்த தமிழ் சமுதாயமும் கண்ணீர் வடிக்கின்றது. துப்பாக்கி வேட் டுக்கும் குண்டுகளுக்கும் அநியாயமாக பல இளம் உயிர்களை காவு கொடுத்து விட்டு, மிச்ச சொச்சம் இருப்பவர்களை இப்படி இரும்புக் குதிரைகளில் ஏற்றி எமனிடம் அனுப்புவது ஆறாத் துயரைத் தருகின்றது.

**இளைஞர்களே**
**வேண்டாம்**
**இந்த விவேகம் இல்லாத**
**வேகம்**

(06 ஆம் பக்க தொடர்ச்சி...)

பின்னர் கணினி வந்தபோது ஒரு கையினால் அதைப் பழகினார். றஞ்சியின் நிலைமையைப் புரிந்து கொண்ட நிர்வாகமும் சக பணியாளர்களும் அவருக்கு ஆதரவாக இருந்தது றஞ்சிக்கு பெரும் உதவியாக இருந்தது.

இப்படி இருக்கும்போது நான்காம் கட்ட ஈழப்போர் இறுதிப் போராக ஆரம்பமாகியது. இந்தச் சூழலில் றஞ்சி ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். கணவர் அடிக்கடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நிலைமை மேலும் மேலும் இறுகிவந்தது. ஒரு கட்டத்தில் கிளிநொச்சி இடப்பெயர்வு என அது வந்தபோது றஞ்சி கைக்குழந்தையோடும் நோய்வாய்ப்பட்ட கணவனோடும் கடுமையாகக் கஸ்ரப்பட்டார். அந்த நேரத்தில் அவரால் வேலைக்குப் போக முடியவில்லை. அதனால் வருமானமும் பட்டது. தான் தனித்து இயங்குவதற்கு மனதில் தைரியம் இருந்தாலும் நடைமுறையில் சாத்தியமற்ற தன்மைகளே கூடிவந்தன.

அந்தக் குடியிருப்பில் இருந்த அவ்வளவு குடும்பங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்ததால் யாரும் யாருக்கும் உதவ முடியாது என்ற நிலை. என்றாலும் றஞ்சியின் குடும்பத்தோடு நட்பாக இருந்தவர்கள் அவர்களுக்கு முடிந்தவரையில் உதவினர். சனங்களோடு சனங்களாக ஒவ்வொரு இடமாக மாறி மாறி நகர்ந்து கொண்டிருந்த றஞ்சியின் குடும்பம் கடைசியாக முள்ளிவாய்க்காலிலிருந்து படையினரிடம் சென்றது.

அங்கே போராளிகளை வகைப்படுத்திய படையினர் றஞ்சியின் கணவரை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பினார்கள். றஞ்சி குழந்தையோடு செட்டிகுளம் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சனங்கள் றஞ்சியையும் பிள்ளையையும் முடிந்த வரையில் தங்களோடு இணைத்து ஆதரவாகப் பார்த்தனர். இடையிடையே கணவரைப் போய்ப் புனர்வாழ்வு முகாமில் பார்த்து வந்தார் றஞ்சி.

கொடுத்தேனே என்று புலம்பினார். ஆனால் என்னதான் பயன்?

கடைசியில் தனித்து விட்டார் றஞ்சி. அவருக்கு மிஞ்சியது தீராத்துயரமும் பெற்றெடுத்த குழந்தையுமே.

இரண்டோடும் ஒரு நாள் முகாமிலிருந்து விடுதலையாகி, அக்கரைப்பற்றுக்கு - தான் பிறந்த இடத்துக்குச் சென்றார் றஞ்சி. அங்கே ஊரோடும் உறவுகளோடும் சேர்ந்த வாழலாம் என்று எதிர்பார்த்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தமாதிரி அங்கே எல்லாம் அமையவில்லை. அங்கே அவரே மற்றவர்களைக் கவனிக்க வேண்டிய, மற்றவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய நிலை.

என்ன செய்ய முடியும். பேசாமல் கிளிநொச்சிக்குத் திரும்பி, செல்வா நகரிலுள்ள ஊனமுற்றோர் குடியிருப்புக்குச் சென்றார். அங்கே கட்டப்பட்டிருந்த வீடு பாதி தகர்ந்து விட்டது. கூரை இல்லை. கதவுகள் இல்லை. குடியிருப்பதற்கான எந்த அடிப்படையும் இல்லை. ஆனாலும் என்ன செய்வது? இதை விட்டு வேறு எங்கே செல்வது?

உதவி அமைப்புகளும் அரச நிர்வாகமும் ஒரு மீள் குடியேறிக்கான உதவிகளைச் செய்தன. ஒரு தற்காலிக வீடு மற்றவர்களுக்குக் கிடைத்ததைப்போல அவருக்கும் கிடைத்தது. புலம்பெயர்ந்தோரின் உதவிகளும் சிறிய அளவில் றஞ்சிக்குக் கிடைத்தன. நேசக்கரம் அமைப்பும் உதவியது. அவருடைய நிலைமையில் இது யானைப் பசிக்குச் சோழப்பொரிதான். சுயமாகத் தொழில் செய்யக்கூடிய மனவலிமை இருந்தாலும் பிற சாத்தியங்கள் குறைவு. அதற்கான ஆதரவும் உடல் வளமும் அவரிடமில்லை. ஆகவே பராமரிப்பு நிலை உதவியே அவருக்குத் தேவை.

ஆனால், றஞ்சி ஓய்ந்து விடாத அளவுக்கு உழைப்பும் திடமும் உள்ள சமூகச் செயற்பாட்டாளர். அதனால் ஊனமுற்றோர் அமைப்பை மீள் நிலைக்குக் கொண்டு வந்து தங்களுடைய பிரச்சினைகளையும் தேவையையும் வலியுறுத்த விரும்பினார் றஞ்சி. ஆனால், அந்த அமைப்பை கிளிநொச்சியில்

அந்தக் குடியிருப்பை அத்து மீறி அமைத்து விட்டார்கள் என்றும் அவர் தன்னுடைய முறைப்பாட்டிற் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாட்டையடுத்து எல்லாமே தடைப்பட்டன. ஆனாலும் றஞ்சி சோர்ந்து விடவில்லை. அவர் ஏனையவர்களையும் அழைத்துக் கொண்டு அரச நிர்வாகப் பகுதி, ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான அலுவலகம், பொலிஸ் என எங்கும் சென்றார். ஒரு தடவை அவர்கள் அனை வரையும் பொலிஸ் அடைத்தே விட்டது. அந்த முறைப்பாட்டின் காரணமாகவே தாம் அப்படி நடந்து கொண்டதாகப் பின்னர் அவர்களுக்குப் பொலிஸ் தரப்பி லிருந்து கூறப்பட்டது. என்றாலும் இறுதி வரை போராடி அந்தக் காணி பொதுக் காணி என்பதை உறுதி செய்துவிட்டார் றஞ்சி.

இதனை அடுத்து ஐ.நாடுகளின் அகதிகளுக்கான இல்லம், வீடமைப்பு அலுவலகம் என எல்லா இடத்துக்கும் சென்று குரலெழுப்பினார். சில இடங்களில் அவர் போரிட்டார் என்றே சொல்ல வேணும்.

இதன் பயனாக அந்தக் குடியிருப்பு வீடுகளைப் புனரமைப்புச் செய்து தருவதாக ஒத்துக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்காக அவர்கள் இன்னும் ஒரு ஆறு ஏழு மாதங்கள் காத்திருக்க வேணும்.

இவ்வளவுக்கும் றஞ்சியின் வீடு பல நாட்களாக பசியோடும் பட்டினியோடுமே கழிந்தது. அவரிடமிருந்த ஓர்மத்தைத் தவிர அவரிடம் வேறு எந்தப் பலமும் இல்லை. வேறு எந்த வளமும் இல்லை. பசியும் பற்றாக்குறையும் வழமையாகிவிட்டன.

இந்த நிலையில் அந்தச் சின்னஞ் சிறுகுழந்தை மெலிந்து கறுத்து விட்டது தன்னுடைய தாயைப்போல. ஒரு வாளி தண்ணீரை அள்ளுவதற்கே அவர்கள் யாரையாவது எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். வறுமையிலும் மகிழ்ச்சியாக, கலகலப்பாக இருந்த றஞ்சியின் முகத்தில் இப்போது

# நான் என்ன செய்வது




ஒரு நாள் றஞ்சியின் கணவருக்குக் கடுமையான வலிப்பு. இது வழமையான வலிப்பையும் விட கடினமானதாக இருந்தது. படையினர் என்ன செய்தார்களோ சரியாகத் தெரியாது. ஆனால், றஞ்சியின் கணவர் அங்கேயே இறந்து விட்டார்.

றஞ்சிக்குச் சேதி சொன்னார்கள். இடிந்தே போய்விட்டார் அவர். எவ்வளவோ கஸ்ரங்களின் மத்தியில், இறுதிப் போர்க்காலத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் கூட வலிப்புக்கு வைத்தியம் செய்து காப்பாற்றிய கணவரை இப்போது தொலைத்து விட்டார். அவரால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. போர்க்களத்திலும் போர்ச் சூழலிலும் தப்பிப் பிழைத்து வந்து இப்படி அநியாயமாகச் சாகக்

இயங்குவதற்கு அனுமதிக்கச் சில நாட்கள் ஆகும் என்று தவிர்த்தது அரச தரப்பு. ஆனாலும் றஞ்சி சோரவில்லை. அவர் பல வழிகளிலும் இயங்கிப் பல தரப்பினரையும் சந்தித்துத் தங்களின் பிரச்சினைகளைச் சொன்னார்.

இதற்கிடையில் பாதிக்கப்பட்ட வீடுகளைத் புனரமைப்புச் செய்வதற்கு வந்து பார்த்துச் சென்ற அதிகாரிகளை மறித்தார் ஒருவர். அந்த ஊனமுற்றோர் குடியிருப்புக் காணி தனக்கே சொந்தமானது என்றும் அந்தக் குடியிருப்பை விட்டு அங்கிருப்பவர்கள் அகல வேண்டும் என்றும் அவர்களுடைய வீடுகளைப்புனரமைக்கக் கூடாது என்றும் அவர் முறைப்பாடு செய்தார். தான் முன்னர் வந்து செல்ல முடியாத சூழல் இருந்ததைப் பயன்படுத்தி


சிரிப்பைக் காண்பது அபூர்வம். கலகலப்பைக் காணவே முடியாது. எதை யாவது கேட்டால் "நான் என்னண்ணா செய்வது" என்று பிள்ளையின் தலையை வருடிக் கொண்டு ஒடுங்கித் தணிந்த குரலில் சொல்கிறார்.

பிள்ளையோ எதுவ்மே புரியாமல் குழி விழுந்த கண்களால் தாயைப் பார்க்கிறது.



நான் தலையைத் தாழ்த்திக் கண்களைத் துடைத்தேன். ●

(22 ஆம் பக்க தொடர்ச்சி...)



# கொல்லப்படப் போகிறாரா ட்ரம்ப்?

விவகாரங்களுக்கான மூத்த விரிவுரையாளராக உள்ளார். இந்தப் புத்தகத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட தலைப்புக்களடங்கிய பிரைன் லொரெல்லின் பேட்டியொன்று கடந்த டிசம்பர் மாதம் 11ஆம் திகதி மியாமி - ஹெரால்ட் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

தேர்தல் காலங்களில் ஜனாதிபதி ட்ரம்ப் வாரியிறைத்த பேச்சுக்களில் மதிநுட்பம் இருக்கவில்லை. அவர் புத்திசாதுர்யமிக்கதாகச் செயற்படவுமில்லை. தொடரும் இவரது நடவடிக்கைகள் அமெரிக்காவினது எதிர்காலத்தைப் பாதிக்கலாம் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். இதுவரை அமெரிக்கா ஜனதிபதியாக பதவி வகித்த அனைவரும் மிகுந்த புத்திசாலித்தனத்துடனும், மதிநுட்பத்துடனும் பல சிக்கல் மிகுந்த விடயங்களை முகாமைப்படுத்தி தமது கால எல்லைகளைக் கடந்திருந்தனர்.

ஆனால் அதே சமயம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டொனால்ட் ட்ரம்ப் ஒரு பயங்கரவாதி என்றும் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டதைப்போல அவர் ஒரு பயங்கரவாதியாகத் தெரியுமிடத்து அமெரிக்காவின் சர்வதேச உறவுகள் பாதிக்கப்படலாம். அமெரிக்கா தனது காய்நகர்த்தல்களைச் இலகுவாகச் செய்யமுடியாத நிலைமை ஒன்றை எதிர்நோக்கலாம். ட்ரம்பிற்காக அமெரிக்கா தனது அடிப்படைக் கோட்பாடுகளில் மாற்றம் ஏற்படுத்தப் போவதில்லை.

அதாவது சி.ஐ.ஏ தனது நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை. தொடக்கத்திலிருந்தே ட்ரம்ப்பின் நடவடிக்கைகளில் திருப்திப்படாத சி.ஐ.ஏ இதனை எப்படிக் கையாளப் போகிறது. கென்னடி கொல்லப்பட்டதைப் போன்ற வரலாறு திரும்பவும் சி.ஐ.ஏ யினால் ட்ரம்புக்கும் எழுதப்படுமா?

# மாயாவின் டயரி



**தி**னம்தோறும் வாழ்க்கைக்கு வெளியே, வெகுதூரத்தில் கண் விழித்து வாழப்படாமலேயே புரட்டப்படுகின்றது இந்த வாழ்க்கை புத்தகம். எதை நினைந்தெழுவது என்றறியாமலேயே என் ஏட்டில் வந்து விழுகின்றன வார்த்தைகள். வார்த்தைகளோடு உருண்டோடுகின்ற கண்ணீரின் ஈரம் எழுதிய பக்கங்களைக் கரைத்துச் செல்ல அழிந்த ஒரு வரலாறாக வாழ்க்கை எஞ்சுகின்றது.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, நான் ஊமை முனகல்களில் உறங்கிப் போய் விடிகையில், கண்ணீரில்தான் கண்முழிக்கின்றேன். இருபது வருடங்களுக்கு மேல் நான் கேட்கும் அந்த ஓலம், என்றுமே ஓய்ந்ததில்லை. அது என்னை துரத்திக் கொண்டே இருந்தது. தண்ணீரால் ஆனது என் அப்பாவின் உலகம், கண்ணீரால் ஆனது என் அம்மாவின் உலகம்.

காதிற்குள் விழுகின்ற ஈயம் பாய்ச்சிய வார்த்தைகள் எங்கள் தெருத் தாண்டி இருள்களைக் கிழித்துக் கொண்டு எத்தனையோ வீடுகளைச் சென்றடையும். விடிந்ததும் ஓட்டிற்குள் முகம் மறைக்கும் ஆமை போல் வீட்டிற்குள் அடங்கிப் போயே அம்மாவின் வாழ்க்கை நகர்கின்றது. எத்தனை அம்மாக்களின் ஊமை முனகல்களை சுமந்து அந்தரிக்கின்றதோ இந்த இருள்கள்?!

அந்தப் பிரதான தெருவை நான் கடந்து செல்கின்றபோது இரவோ, பகலோ எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன மதுபானக் கடைகள். வாலிபம் தொடக்கம் வயோதிபம் வரை அங்கே முண்டியடித்துக் கொண்டு கையிலேந்துகின்ற போத்தல்களின் உள்ளே எனக்கு தெரிவதென்னவோ அவர்கள் தாயின், மனைவியின், பிள்ளைகளின் இருண்ட கண்ணீர் நிறைந்த வாழ்க்கையே.

குடி ஒரு மரபாகிக் கொண்டே வருகின்றது. அது ஆண்மையின் அடையாளமாக்கப் பட்டுக் கொண்டே இருக்கின்றது. என் நண்பர்கள் பலரினதும் இல்லங்கள் குடியாலானது.

> "போராடும், ஒடுக்கப்படும் வர்க்கம்தான் வரலாற்று அறிவின் உறைவிடம்"

நீராலானது வாழ்க்கை என்பதைத் தான் காலம் எங்களுக்கு போதித்துக் கொண்டிருக்கின்றது. வரலாறும், இலக்கியமும் சொத்துக்களையும், செல்வங்களையும் வீணே அழித்தொழித்து விட்டு, வெறுங்கையோடு வரும் கோவலன்களுக்காக நகரை எரிக்கும் கண்ணகிகளைத்தான் முதன்மைப்படுத்துகின்றனவே தவிர, கண்ணீரோடு காலம் முழுவதும் பிறரை முதன்மைப் படுத்தியே வாழ்கின்ற பெண்களை கவனிக்கத் தவறிவிட்டன.

உடல் ரீதியாக, ஒழுக்க வரையறைகள் ரீதியாக, அன்றாடம் எண்ணற்ற இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் பெண்ணினம் மனவியல் ரீதியாகவும் இன்னும் எத்தனை துன்பங்களைக் கடக்கின்றனர் என்பதற்கு இங்கு பல உதாரணங்கள் கொட்டிக் கிடக்கின்றன. ஆணைச் சார்ந்து இயங்குகின்ற, குடும்பம் பிரதானமான அடுக்கமைவாகக் கொள்ளப் படுகின்ற சமுதாய அமைப்பில் போதைப் பொருள்களின் அச்சுறுத்தல் என்பதையும் பெண்கள் தலையிலேயே இடியென விழுகின்றது.

ஆணினுடைய உழைப்பென்பது ஊதியத்தின் அடிப்படையிலானது. அது ஓய்வு காலத்தை நோக்கியதும் கூட. ஆனால் நம் சமுதாயத்தில் பெண்களின் உழைப்பென்பது பந்தங்களின் அடிப்படையிலானது. அது எந்த நிலையிலும் ஓய்வு அற்றது. அதன் ஓய்வென்பது மரணத்தில்தான் முடிகின்றது. வாழ்நாள் முழுவதும் ஓய்வின்றி இயங்குகின்ற பெண் தனக்கான சந்தோசத்தை போத்தல்களில் எதிர்பார்க்கவில்லை என்பதுவே, அவள் வலிமையின் சான்று.

எந்த அறமும் சித்திரவதைபட்டுக் கொண்டிருக்கும் பெண்ணினை அதிலிருந்து மீட்டெடுப்பதில்லை. எந்த ஒழுக்கக் கோட்பாடுகளும் வன்புணர்விற்கு உட்படும் பெண்களிற்கு வல்லமையை அளிப்பதில்லை. அறங்களும், சமூக நியதிகளை மேலும் மேலும் பெண்ணை ஒரு நலிந்த நிலைக்கே தள்ளுகின்றன. சிகரெட், மது பாவனை இவை நம் சமுதாயத்தில் ஆண்மை அடையாளமாகவே கருதப்பட்டு வருகின்றன. பெண்களுக்கு எண்ணற்ற நியதிகளை வகுத்த அதே சமூகம், இவற்றை எந்த அறம் கொண்டு ஆதரிக்கின்றது என்பதுதான் கேள்வி.

குடும்பம் என்கின்ற அலகு சிதைந்து போகாமல் இருப்பதற்காக, எண்ணற்ற பெண்கள் தங்கள் வாழ்க்கையை சிதைத்துக் கொள்கின்றார்கள். அதையும் மீறி வெளிவரும் பெண்களின் நிலையும் போராட்டம் நிறைந்த பாதுகாப்பற்ற ஒன்றாகவே உள்ளது. பாதுகாப்பு நிலையைப் பார்த்தால் அதுவும் பெரும் இடர்பாடாகவே உள்ளது. ஒரு ஆண் இன்னொரு ஆணால் பெண்ணின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்கின்ற பயத்தின் அடிப்படையிலேயே நாம் வளர்க்கப்படுகின்றோம். உள்ளும் புறமும் அச்சுறுத்தல்களோடு, ஆண் என்கின்ற அதிகாரப்போக்கின் பேரில், அன்றாடம் வாழ்க்கையை வாழமுடியாமல் அடைபட்டுக் கிடக்கின்ற வாழ்க்கையையே தொடர்ந்து விடுமோ? என்கின்ற அச்சம்தான் மேலெழுகின்றது.

பார்வை நயம் - 11



# கடைசி பஸ்...

கணபதி சர்வானந்தா

**இ**ன்றைக்கும் அருந்தவ நாதன் இரவு 8.40 க்கு யாழ். மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து புறப்படும் கடைசி பஸ்ஸில் பின் வரிசையின் மூலையில், ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து இருக்கிறான். ஏறத்தாழ 10 வருடங்கள் ஒருநாள் கூடத் தவறாத பழக்க வழக்கங்களில் இதுவும் ஒன்று. வெயிலும், மழையும் மாத்திரமல்ல உச்சக்கட்ட இராணுவ நடவடிக்கைகள் இருந்த காலங்களிலும் அவன் தன்னை மாற்றியதில்லை.

அவன் கேட்கத் தேவையில்லை. பஸ் கொண்டக்ரரே அவனுக்கு மல்லாகச் சந்திக்குரிய பயணச் சீட்டைக் கொடுத்துவிடுவார். பஸ் கட்டணத்திற்குரிய சரியான சில்லறை மாற்றப்பட்டு கைவிரல் இடுக்கில் இருக்கும்.

எப்பொழுதும் மடிப்புக் குலையாத வெள்ளை வேட்டி. அரைக்கைச்சட்டை. தோளில் தொங்கும் கலர் துவாய். நேர்த்தியாக இழுத்து பின்னோக்கி விடப் பட்ட எண்ணெய்த் தலைமுடி. அடர்த்தியான மீசை. சற்சதுரமான முகத்தை அலங்கரிக்கும் கறுத்த பிரேமைக் கொண்ட மூக்குக் கண்ணாடி. சட்டையின் மேற்பொக்கற்றிலிருக்கின்ற கெட்டியான லெதர் பேர்ஸ். கையில் ஒரு குடை. இவைதான் அருந்தவநாதனின் அடையாளங்கள். எஸ்.எஸ். சி சோதனை எடுத்தவுடன், முடிவுக்குக் கூடக் காத்திராமல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாளராகச் சேர்ந்து, பல வருடங்களுக்குப் பின்னர், போர்க்காலச் சூழலில் இடமாற்றம் ஏற்பட்ட போது பணியை இடைநிறுத்திக் கொண்டவன், அருந்தவநாதன். பின்னர் அதுவரை குத்தகைக்குக் கொடுத்திருந்த காணி ஒரு பரப்பையும் இடை நிறுத்தி கத்தரி, வெண்டி என்று சிறு பயிர் செய்கையுடன், பகுதி நேரம் சுன்னாகச் சந்தியிலுள்ள புடவைக் கடை ஒன்றில் கணக்கு எழுதுவது என்று மிகுதிக் காலத்தையும் ஓட்டியவன்.

தம்பி கமலநாதனை டொக்டராகப் பார்க்க வேணும், அருந்தவநாதனின் கனவு இது. அருந்தவநாதன் முயற்சியால் கமலநாதன் இந்துக் கல்லூரி மாணவனாகிப் படித்துக் கொழும்பு கம்பஸில் இடமும் கிடைத்துவிட்டது.

கமலநாதன் கொழும்புக்குப்போய் கழிந்த இரண்டு, வருடங்களில் போரைக் காரணம் காட்டி ஒருமுறையேனும் அவனை ஊருக்கு வர அருந்தவநாதன் அனுமதித்ததில்லை. சண்டையையும் பொருட்படுத்தாது தானே போய்க் கமலனைப் பார்த்து விட்டு வந்தான். ஒவ்வொரு முறையும் ஆமிக்காரரின் செக் பொயின்ட்டுகளையும், புலிகளின் சோதனைச் சாவடிகளையும் கடந்து சிரமப்பட்ட வேளைகளிலெல்லாம் கமலநாதனை வராமல் மறித்தது, சரியான முடிவுதானென்னு அருந்தவ நாதனுக்குத் தோன்றும்.

"கமலன் எப்பிடியெடா இருக்கிறான்?" ஒவ்வொரு தடவையும், கொழும்பால் வந்த வுடன் அக்கா ஆசையோடு கேட்பாள். "இப்பவே அவனிலை டொக்டருக்குரிய களை தெரியுதக்கா!" அருந்தவநாதன் சொல்லும் பதில்களில் அதுவும் ஒன்று. சிறிது காலத்தின் பின்னர் ஓகஸ்ட் மாதத்தில் தனக்கு விடுமுறை உண்டென்று கமலநாதனிடமிருந்து கடிதம் வந்தது. "கமலன் கொழும்புக்குப்போய் இந்தக் கிழமையோடை இரண்டு வருசமாகுது. அவனைப் பாக்காமல் இருக்கேலாமைக் கிடக்கு. விடுமுறைக்கு வந்திட்டுப் போகச்சொல்லு" அக்கா இம்முறை பிடிவாதமாக இருந்தாள். அருந்தவ நாதன் அரைகுறை மனதோடு ஒப்புக்கொண்டான். மறுநாள் காலை அக்கா குளிச்சு, முழுகி அர்ச்சனைத் தட்டோடை முன்னே செல்ல அருந்தவநாதன் பின்னே சென்றான். பிள்ளையார் கோயிலில் கும்பிட்டு கமலன்ரை பெயராலை அர்ச்சனையையும் முடித்துக் கொண்டு சுன்னாகச் சந்தியிலுள்ள கொமினிகேஷனுக்கு வந்தனர். கமல நாதன் இருக்கிற வீட்டுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டபோது வீட்டுச் சொந்தக்காரர் பேசினார். அவரிடம் விடயத்தைச் சொல்லிவிட்டு கமலநாதனுடனும் பேசினார்கள்.

"என்னத்தை மறந்தாலும் அடையாள அட்டையை மறக்கப்படாது. உடுப்பு அது இது எண்டு பாராதை. பாக் ஒண்டும் கொண்டுவராதை. இஞ்சை கிடக்கிறதோடை சமாளிக்கலாம்" அக்கா திரும்பத்திரும்ப அதேயே சொன்னாள். அருந்தவநாதன் தொலைபேசியை வாங்கினான். "வாற வழியிலை அதுக்கு இதுக்கெண்டு காசு தேவையாயிருக்கும். கொஞ்சம் கூடவா எடுத்து வைச்சுக் கொள். ஐ.சியை மறக்காதை. கம்பஸ் ஐ. சியையும் எடுத்து வைச்சிரு. ஆமிக்காரன் என்ன செய்யிறாய் எண்டு கேப்பாங்கள். காட்டவேணும். மற்றும்படி அங்கிளிட்டை எல்லாம் சொல்லியிருக்கு. ஏதாச்சும் தெரியாட்டில் அவரிட்டைக் கேள். இரவுப் பயணம் வேண்டாம். வாற வெள்ளிக்கிழமை காலமை வெளிக்கிட்டால் இரவு வீட்டை வந்திடலாம். என்ன?"

அடுத்த வெள்ளி வீட்டுக்கார அங்கிளைத் தொடர்புகொண்டபோது காலையிலேயே கமலநாதனை பஸ் ஏற்றிவிட்டதாகச் சொன்னார். "கமலன் வவுனியாக்கு வந்திட்டானாம்" கமலனின் நண்பன் வந்து சொல்லிவிட்டுப் போனான். அக்கா அடிக்கடி வயிரவரடிக்குப் போவதும் வருவதுமாக இருந்தாள். மாலை முகமாலை மூடப்பட்டு விட்டது என அரசு அறிவிப்பு வானொலியில் வந்தபோது அருந்தவநாதன், அக்கா உட்பட எல்லோரும் அதிர்ந்து போனார்கள். கமலன் அன்று வரவில்லை. நாட்கள் ஓடின. ஆனால் கமலன் வரவில்லை. அன்று தொட்டு இன்று வரை கமலனைத் தேடி அருந்தவநாதன் யாழ்ப்பாண பஸ் தரிப்பு நிலையம் வரை வந்து போய்க் கொண்டிருந்தார்.

இரவு 8.40 கடைசி பஸ்ஸிற்கு வழமையான கூட்டம். பஸ் புறப்படத் தயாரான போது, ஒருவர் பஸ் கொண்டக்டரைப் பார்த்துக் கேட்டார், "என்ன மூலை சீற்று இண்டைக்குக் காலியாக் கிடக்கு"

"அதையேன் கேக்கிறியள்? இண்டைக்கு பின்னேரம் போலை வந்தவர் ஆரோ ஒரு டொக்டருக்குப் படிக்கிற பெடியன் கொஸ்பிற்றல் றோட்டாலை போறதைக் கண்டிட்டு, கமலன்..! கமலன்..! எண்டு கத்திக் கொண்டு போனாப்போலை மினி பஸ் அடிச்சு அதிலையே. சரி" என்று சொன்னவாறு டிக்கட்டைக் கொடுத்துக் கொண்டிருந்தான் கொண்டக்டர்.

> "அன்பாய் வாழ்வதுவும், அன்புக்காய் வாழ்வதையும் அறம் என்று போற்றுகிறது ஆன்மிகம்"

புதினப் பூங்கா

ராஜேஸ்மணாளன்

# கொலைகாரத் தொலைபேசி




இப்படியும் ஒரு தொலைபேசி உண்டா? என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஈராக்கின் சதாம் ஹுசைன், லிபியாவின் கடாபி, உகண்டாவின் இடி அமீன் போன்றவர்களுக்கெல்லாம் முன்னோடியாக இருந்த சர்வதிகாரிதான் அடோல்ப் ஹிட்லர். ஆயிரம் ஆயிரம் யூதர்களைக் கொன்ற ஹிட்லரை உலகம் என்றும் மறக்காது. இந்த ஹிட்லரின் பாவனையில் இருந்த தொலைபேசிதான் நாஸிகளிடம் இருந்த போர் ஆயுதங்களை விட மோசமானது என்கிறார்கள். இந்தத் தொலைபேசி மூலந்தான் ஹிட்லர் ஒவ்வொரு மனித அழிவுக்குமான கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

ஜேர்மன் நாட்டு பிரபல்ய நிறுவனமான சீமன்ஸ் உற்பத்தி இது. 60 பாகைக்கு இலக்கத்தைச் சுழற்றினால் தான் ரிசீவரைக் கையில் எடுக்க முடியும், கொண்டுபோகும் இடங்களில் ரிசீவர் விழுந்து விடாமல் இருக்க நிறுவனம் செய்த விசேஷ ஏற்பாடு இது. இது வாகனங்களில் உபயோகிக்கப்பட்டது. "ரயில், பதுங்கு குழி" என்று ஹிட்லர் போகும் இடமெல்லாம் இழுபட்டுச் சென்ற பிரபல்யமான தொலைபேசி இது.

இப்பொழுது இது ஏலத்தில் விற்பனையாகி இருப்பது தான் புதினம்.

400,000 பவுண்ட்ஸ் வரை விலை எகிறுமென எதிர்பார்த்தார்கள். ஆனால் 161,000 பவுண்ட்ஸ்தான் ஏலத்தில் கிடைத்த உச்ச தொகை.

ஸ்வாஸ்டிக்காவும் கழுகுச் சின்னமும் பொறித்த இந்தத் தொலைபேசியை 1943 இல் நாசிப் படை அதிகாரிகள் தங்கள் தலைவருக்கு அன்புப் பரிசாகக் கொடுத்திருந்தார்களாம். 1945 இல் ஹிட்லர் சாம்ராஜ்யம் சரிந்தபோது தற்கொலை செய்து கொள்ள முன்னர் அவர் தன் காதலியுடன் தன் கடைசிப் பொழுதைக் கழித்த பதுங்கு குழியில் இதைக் கண்டெடுத்தார்களாம். இப்பொழுது அதற்குப் பேச முடிந்தால் எத்தனை எத்தனை அராஜகக் கதைகளைக் கேட்கலாம்?



# பதுங்கிப் பாய பறவைப் படை

விமானப்படை 'வேவு டிரோன்களை' அழிக்க தனக்கொரு புதுப்படையை தயார் செய்துள்ளது பிரான்ஸ். நான்கு கழுகள் கொண்ட சிறிய படைதான் அது. ரிமோட் கட்டுப்பாட்டில் இயங்கும் டிரோன்களைப் பிடிக்க பிரான்ஸ் விமானப் படை இந்தப் பறவைகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றது. அனுமதிக்கப் படாத ஆகாயப் பிராந்தியங்களில் அத்துமீறி நுழையும் 'டிரோன்களை' பிடிப்பதுதான் இந்தக் கழுகுகளின் பணி.

"பயங்கரவாதிகள் இந்த 'டிரோன்'கள் மூலம் வெடிகுண்டுகளைக் கொண்டுவந்து தாக்க முனையலாம்" என்று அஞ்சுகிறார்கள். "சுட்டு வீழ்த்துவதற்கு பதிலாக கழுகுகள் மூலம் மடக்குவது சிறந்தது" என்று இவர்கள் முடிவெடுத்துள்ளார்கள். "பல ஆயிரம் மீற்றர் தொலைவில் இவற்றை இனங் கண்டு இந்தப் பறவைகளால் செயலிழக்க வைக்க முடியும்" என்கிறார் ஓர் அதிகாரி. "தன் கால்களால் மனிதனை விட பத்து மடங்கு மேலாக கழுகினால் ஒன்றைப் பற்றிப் பிடிக்க முடியும்" என்பதால், "டிரோன்களைப்பற்றிப் பிடிக்கும் பணியை ஒரு கழுகு சுலபமாக செய்துவிடும்" என்று நம்பப்படுகிறது.

ஆபத்து எந்தெந்த ரூபத்தில் வருகின்றது என்பதைக் கண்டறிவது என்பது சவாலான சங்கதிதான்.

# சுழன்று கொண்டு சூரியோதயம் பார்க்கலாம்



இந்த 'எண்ணெய்' தரைக்குக் கீழேதான் கிடைக்கின்றது. இது தரும் பணத்தில் இருந்து தரைக்கு மேல் இந்த வளைகுடா அரேபியர்கள் செய்யும் விந்தைகளைப் பார்க்கும் போது பிரமிப்பின் எல்லைக்கல்லவா போய் விடுகிறோம்? 'டைனமிக் ஹோட்டல்'. என்ற பெயரில், துபாயில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் சுழலும் ஹோட்டலில் இருந்து கொண்டு 'சூரியோதயம், அஸ்தமனம்' ஆகியவற்றை அழகாகப் பார்த்து ரசிக்க முடியுமாம். "2008 இல் ஆரம்பித்த நிர்மாணப்பணிகள் 2020 இல் நிறைவு பெற்று விடும்" என்கிறார்கள். 360 பாகை அளவுக்கு இந்தக் கட்டடம் சுழலும் என்பதுதான் இங்கே புதினம். 1375 அடி உயரமான இந்த 80 மாடிக் கட்டடத்தில் இருப்பவர்களுக்கு வெளிக் காட்சிகள் மாறிக்கொண்டே இருக்கும். ஒவ்வொரு வதிவிடமும் சுழல்வதும், நிற்பதும், அதில் உள்ளவர் கொடுக்கும் கட்டளையில் தங்கி இருக்கின்றது.

'நில்' என்றால் நிற்கும். சுழலும்படி பணித்தால் சுற்றும், மந்திரக் காட்சி போல் இருக்கின்றது அல்லவா? ஆனால் இங்கே மந்திரமும் இல்லை தந்திரமும் இல்லை. எல்லாமே நவீன தொழில்நுட்பந்தான்.

"இது எத்தனை நட்சத்திர ஹோட்டல்" என்று கேட்டால் "இது பற்பல நட்சத்திர அந்தஸ்தைக் கொண்டது" என்று வருகின்றது பதில். அந்த அளவுக்கு அற்புதமான சேவையும் நவீனத்துவமும் கொண்ட ஹோட்டல் இது என்கிறார்கள்.

சில பகுதிகள் வசிப்பிடம் ஆக்கக் கூடியவை. 30 மில்லியன் டொலர் செலவிடத் தயாரா ? அப்படியானால் சுழலும் மனைக்கு நீங்கள் சொந்தக்காரராகி விடுவீர்கள்.

# கம்பி எண்ணும் கனவான்



தென்கொரியாவின் இராட்சத நிறுவனமான "சாம்சுங்கின்" உபதலைவர் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார். குடும்ப நிறுவனமான "சாம்சுங்" சொத்துகளுக்கு வாரிசுகளில் ஒருவரான இவர் இலஞ்ச ஊழலில் மாட்டுப்பட்டு இன்று ஒரு சிறிய அறையில் ஒரு விரிப்பில் உறங்குகிறார். இவர் வசிக்கின்ற ஆடம்பர மாளிகையின் பெறுமதி 4 மில்லியன் டொலர் என்கிறார்கள். அரசியல் மட்டத்தில் சில சலுகைகள் பெற தென் கொரிய ஜனாதிபதியின் அந்தரங்க ஊழியர் ஒருவருக்கு இலஞ்சப் பணமாக 40 மில்லியன் டொலர் கொடுத்த விவகாரமே, இன்று இவரை கம்பி எண்ண வைத்துள்ளது.

இவருடைய தந்தையார்தான் சாம்சுங் நிறுவன ஸ்தாபகர். அவர் இன்று நோயாளியாகி விட்டதால் நிர்வாகப் பொறுப்பு மகன் தலையில் விழுந்துள்ளது.


விவகரத்து செய்து 2 பிள்ளைகளுடன் உள்ள லீ என்ற இவரின் சொத்து மதிப்பு 6.2 பில்லியன் டொலர் என்கிறார்கள்

ஏற்கனவே தனது ஐ போன் கொடுத்த தொல்லையில் ஆட்டம் கண்டுள்ள இந்த நிறுவனத்திற்கு மேலும் ஓர் இடி..

அப்பிள் நிறுவனத்துக்கு பெரும் சவாலாக மின்னியல் சாதனங்களை சந்தைப்படுத்தும் இந்த இராட்சத நிறுவன உப அதிபர், தனி அறையில் சிறை வைக்கப்பட்டுள்ளார். இந்தக் கனவான் இங்கிருந்து வெளியே வருவாரா? தலை நிமிருமா?

"பணம் பத்தும் செய்யும் என்பார்கள்" ஆனால் "அதே பணம் மனிதனை படாத பாடுபடுத்தும்" என்றும் சொல்கிறார்கள். இங்கே கொழுத்த பணக்காரர் ஒருவர் மேலும் கொழுக்க ஆசைப்பட்டார். இப்பொழுது அதன் பயன் தேடி வந்துள்ளது. அனுபவி ராஜா அனுபவி!

# பசுவும் புலியும்



'பசுவும் புலியும்' என்பது கிராமத்து விளையாட்டு. இருவர் விளையாடுவர். முக்கோணமாகக் கோடு கீறி உச்சியிலிருந்து அடித்தளத்தை முட்ட இரு கோடுகள் வரைந்து குறுக்காக மூன்று கோடுகள் வரைந்து முக்கோணத்துக்கு வெளியே ஒவ்வொரு கோட்டினால் மூட வேண்டும்.

புலியாக விளையாடுபவர் 3 அளவான கல்லை அல்லது ஏதாவது ஒரு உருண்டோடாத பொருளை வைத்தல் வேண்டும். காய்களை ஒரு இடத்துக்கு மட்டுமே நகர்த்தலாம். புலிகள் பசுக்களைக் கலைத்தும் பிடிக்க வேண்டும்.

பசுக்கள் பிடிபடாமல் ஓடி ஓடித் தம்மைப் பாதுகாத்தும் புலியை அடைத்தும் விளையாட வேண்டும். இரு பகுதிகளும் புத்திநுட்பத்தோடு மூளையை உபயோகித்து விளையாடுவர். இது அவரவர் தம்மை ஆபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உறுதியை வளர்க்கும். திண்ணைகளில், விறாந்தைகளிலும் விளையாடலாம்.

இதுபோன்ற வேறு சில விளையாட்டுக்களும் உண்டு. சோகி போட்டுத் தாயம் விளையாடல், சொல்லுக் கட்டுதல், எண் விளையாட்டுகள், தக்கினி குலுக்கல் (இது கடற்கரையில் காணப்படும் ஒரு உருளைக் கல்லின் பாதிபோல் அடி தட்டையாக இருக்கும்), தாப்பாய், குருசு விளையாடுதல், ஓராங்கோடு கெந்தி விளையாடல் (மாங்கொட்டை அல்லது கடற்கரையில் அகப்படும் ஒரு பிறவுண் நிறக் கொட்டையில்) சிறு சோறு சமைத்தல், குண்டப்பம் சுடுதல், குழை போடுதல், கண்கட்டிப் பிடித்தல் எனப் பலப்பல.

# அங்குசம்



அங்குசம் என்பது யானையைக் கட்டுப்படுத்த பாகன்கள் உபயோகப்படுத்தும் ஆயுதமாகும்.

இந்த ஆயுதத்தினை இந்துத் தொன்மவியலில், எண்ணற்ற கடவுள்கள் வைத்துள்ளார்கள். விநாயகர், பைரவர், சதாசிவ மூர்த்தி, துர்க்கை ஆகியோர் இந்த ஆயுதத்தினை வைத்துள்ளார்கள். தொன்மவியல் சார்ந்து முக்கிய பயன்பாட்டுக்கருவிகளுள் ஒன்றாக அங்குசம் இருக்கின்றது.

யானை வளர்த்தல், பயிற்றுதல் , வேலைகளுக்கும் போருக்கும் அவற்றை பழக்குதல் முதலான தொழில் முறைகளைப் பற்றி பழைய இலக்கியங்களும் வரலாறும் நிறையவே தகவல்களைத்தருகின்றது. அந்தவகையில் தமிழர் தொன்மவியல் குறிப்பிடும் கருவிகளுள் அங்குசமும் ஒன்றாக இருக்கின்றது.

# கெண்டி

கெண்டி என்பது சிறு குழந்தைகள் பால் அல்லது தண்ணீர் அருந்தப் பயன்படுத்தப்பட்ட ஒரு பாத்திரம். பால் அல்லது தண்ணீரைக் குறைந்த அளவாக உட்கொள்ள இது உதவியது.

கடந்த நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்த இப்பாத்திரம் தற்போது பயன்பாட்டில் இல்லை. தமிழ்நாட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி கோவை மாவட்டங்களிலும் இலங்கையில் வடபுலத்தில் உள்ள பிராமணர்கள், போன்றோரிடமும் அதிகப் பயன்பாட்டிலிருந்த இவ் ஏனம் (பாத்திரம்) தற்போது சில வீடுகளில் மட்டும் பரணில் பழைய பொருட்களோடு சேர்க்கப்பட்டு கிடக்கிறது.



# வட்டிலும் சவரக்காலும்






பண்டைய கால மக்கள் உணவு உண்பதற்காகப் பயன்படுத்திய ஒருவகைப் பாத்திரம் வட்டில் எனப்படும். இது பெரும்பாலும் பித்தளை மற்றும் வெண்கலம் முதலான கலப்புலோகத்தில் செய்யப்படும். காலத்தின் கோலத்தில் தற்போது பாவனையில் இல்லாமற் போனாலும் தமிழர் திருமணச் சடங்கில் தற்போதும் "கலத்தில் போடுதல் " எனும் நிகழ்வில் தனது பங்கை நிகழ்த்தவென முதலிடம் வகிக்கிறது.


பண்டைய தமிழர்கள் உணவு உண்ணுவதற்குப் பயன்படுத்தப்படும் வட்டியை வைப்பதற்காக 'சவரக்கால்' எனும் இந்தப் பொருளைப் பயன்படுத்துவர். இது பொதுவாக வெண்கலத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும்.




மன்னார் கட்டுக்கரை குளத்தை அண்டிய பகுதியில் ஈழத் தமிழரின் பண்டைய வாழிடம் குறித்த தொல்லியல் சான்றுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியரான ப.புஸ்பரட்ணம் தலைமையிலான ஆய்வுக்குழு கண்டுபிடித்தது. இந்த நிலையில் அண்மையில் நாகபடுவான் பகுதியில் பண்டைய வழிபாட்டு மையம் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர் பேராசிரியர் தலைமையிலான குழுவினர். இதன்போது மீட்கப்பட்ட தொல்லியல் சின்னங்கள் சில.














# கொல்லப்பட போகிறாரா ட்ரம்ப்?

- நோக்கன் -

அமெரிக்காவில், கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி தேர்தல் நடைபெற்று, ஜனவரி 20இல் ஆட்சிப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டவர் டொனால்ட் ட்ரம்ப். முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அமெரிக்கத் தேர்தலில் ரஷ்யாவின் ஆதிக்கம் அதிகமாகத் தென்பட்டதாக ஊடகச் செய்திகள் விதந்துரைத்தன. இந்த தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெற ரஷ்யா அவருக்கு பின்னணியாக இருந்ததாக அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ குற்றஞ்சாட்டியுள்ளது. உலகையே தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க எண்ணும் உலக பொலிஸ்காரன் என்றழைக்கப்படும் அமெரிக்காவிற்கு இது பலத்த அவமானத்தைத் தந்திருக்கிறதென்றுதான் சொல்லவேண்டும். அமெரிக்க தேர்தலில் ரஷ்ய நாட்டு உளவு ஸ்தாபனத்தின் தலையீடு பற்றி அமெரிக்க நாட்டின் பிரபல செய்தி நிறுவனங்களான நியூயோர்க் ரைம்ஸ் மற்றும் 'வாஷிங்டன் போஸ்ற்' என்பன, அது குறித்த தகவல்களைத் தந்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

ரஷ்ய நாட்டின் அதிபர் விளாமிடிர் புடின், அமெரிக்க ஜனாதிபதியாக தமது ஆதரவாளரான ட்ரம்ப் வரவேண்டுமென்பதில் அதிக அக்கறை காட்டத் தீர்மானித்ததும், ரஷ்ய அதிகாரிகள் உணர்வுபூர்வமாகச் செயற்படத் தொடங்கிவிட்டனர் என்று அப்பத்திரிகைகள் மேலும் தெரிவித்திருந்தன.

ரஷ்ய நாட்டின் அதிகாரிகளோ அல்லது உளவு ஸ்தாபனமோ அமெரிக்க தேர்தல் நடவடிக்கைகளில் நேரடியாக தமது செயற்பாடுகளைச் செய்யாது எல்லாவற்றையும் மறைமுகமாகவே செய்தனர். ஹிலாரியின் ஜனநாயகக் கட்சியின் தேசிய குழுவினரினதும், அவரது பிசாரக் குழுத்தலைவரினதும் பிரசார நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பான ஆயிரக்கணக்கான மின்னஞ்சல்களை இணையத்தில் திருடி விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஊடாகக் கசிய விட்டனர்.

ஹிலாரிக்குப் பின்னடைவை செய்யவும், ட்ரம்பின் வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாவே இத்தகைய நடவடிக்கைகளை ரஷ்யா செய்தது என்று நம்பப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகளுக்குக் கண்டனத்தைத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, தேர்தலின்போது இணையத்தளங்களில் நடைபெற்ற சட்டவிரோத ஊடுருவல் பற்றியும், மின்னஞ்சல் திருட்டுப் பற்றியும் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிரடியான நடவடிக்கை ஒன்றினை செய்திருந்ததை, வெள்ளை மாளிகையிலிருந்து வெளியான அறிக்கைகள் உறுதிப்படுத்தியிருந்தன.

இருந்தும் இத்தகைய குற்றச் சாட்டுக்களை டொனால்ட் ட்ரம்பும் அவரது ஆதரவாளர்களும் மறுத்துள்ளனர். அதே சமயம் ரஷ்ய நாட்டு அதிகாரிகளும் இவை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் என்றும் ரஷ்யா எப்பொழுதும் பிற நாடுகளின் இறைமையில் தலையீடு செய்வதில்லை என்றும் கூறி அமெரிக்காவின் குற்றச்சாட்டுளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

கடந்த ஒக்ரோபர் மாதம் அமெரிக்க தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் பிரசாரங்கள் முழு வீச்சில் நடைபெற்ற சமயம் இத்தகைய நடவடிக்கைகளில் ரஷ்ய நாட்டு அதிகாரிகளின் தலையீடுகள் பற்றி அவதானமாக இருக்குமாறு அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்திருந்தனர்.

தேர்தல் பிரசாரத்தின்போது ஈரானுடன் அமரிக்கா செய்துகொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தைத் தான் கிழித்தெறியப் போவதாகச் சொன்னதை , டொனால்ட் ட்ரம்ப் நடைமுறைப்படுத்துவராகில் அது பேரழிவைத் தருகின்றதொன்றாக அமையும் என்றும் அது போன்ற முட்டாள்தனம் வேறொன்றுமில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார் அமெரிக்க புலனாய்வுத்துறை - சி.ஐ.ஏ இன் இயக்குநர் ஜோன் பிரன்னான்.

"அமெரிக்காவினது வெளியுறவுக் கொள்கைகளில் ஒபாமா கொண்டிருந்த கருத்துக்களை ட்ரம்ப் கைவிடாது தொடரவேண்டும். அத்தகைய விடயங்களில் ஒழுங்கு மற்றும் மதிநுட்பங்களை தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும். ரஷ்யா தொடர்பான வாக்குறுதிகளில் மிகுந்த அவதானத்துடன் புதிய அமெரிக்க நிர்வாகம் செயற்படுவதோடு மட்டுமல்லாமல் சிரியாவில் ரஷ்ய நாட்டுப் படைகள் மேற்கொண்ட படுகொலைகளுக்கும், அடாவடித்தனங்களுக்கும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்" என்றும் கூறியிருக்கிறார் , சி.ஐ.ஏ இன் இயக்குநர் ஜோன் பிரன்னான்.


எண்பதுகளின் முற்பகுதியில் பரந்து விரிந்து கிடந்த பெரிய சாம்ராஜ்யமாகக் கருதப்பட்டது சோவியத் யூனியன் என்ற வல்லரசு. அதன் தலைவராகப் பதவிவகித்த மிச்சல் கொப்சேர்வின் சீர்திருத்த நடவடிக்கைகளால் சீர்கெட்டுத் துண்டு துண்டாகத் தனித் தனி நாடுகளாகப் பிரிந்துபோயிற்று. அத்தகைய காலகட்டத்தில் எந்தவித எதிர்ப்புமின்றி உலக நாயகன் என்ற பட்டத்தை தன்னகப்படுத்திய ஐக்கிய அமெரிக்கா, உலகப் பொலிஸ் என்ற நாமத்தைச் சூடிக்கொண்டது. அன்று தொடக்கம் இன்றுவரை அந்த உலகத்தலைவன் என்ற வகையிலேயே அமெரிக்காவின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

எனவே தனது தலைமை என்ற பாத்திரத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்ற எந்த நடவடிக்கைகளையும் அமெரிக்கா அனுமதிக்காது. தான் காட்டுகின்ற பாதையிலேயே ஏனைய நாடுகளும் பயணிக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் எண்ணமும், எதிர்பார்ப்பும். இதை ஏற்க மறுப்பது ஒரு தனி நபராக இருக்கட்டும், தனி நிறுவனமாக இருக்கட்டும் அல்லது ஒரு நாடாக இருக்கட்டும் அவற்றைத் தன் வழிக்குக் கொண்டுவர அமெரிக்கா என்ன விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கும் என்பதுதான் சி.ஐ.ஏ இரகசியம். எனவே அமெரிக்க எண்ணமும் செயற்பாடும் சி.ஐ.ஏ யினது அடி பற்றி எழுவதுதான் உண்மை நிலை. எனவே சி.ஐ.ஏ இன் கோட்பாடுகளே அமெரிக்காவின் எண்ணங்களாகப் பரிணமிக்கின்றன.

இதற்குச் சான்றாக கியூபாவின் முன்னாள் ஜனாதிபதியின் கொலை முயற்சிகளும், அதற்கெதிரான இராஜதந்திர நகர்த்தல்களையும் குறிப்பிடலாம். அத்துடன் உலகப் பிரசித்தம் வாய்ந்த போராட்ட வீரர் சேகுவேராவின் மரணமும் இதன் அடிப்படையிலேயே நிகழ்ந்தது.

இந்த வரிசையில் *1963* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டலஸ் நகரில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட ஜோன் எஃப் கென்னெடியின் கொலையையும் வரிசைப்படுத்தலாம். கறுப்பின மக்களுக்காகக் குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாது அவர்களைக் கட்டி அரவணைத்த உண்மை மனிதன் அவர். இதனால் அமெரிக்கா அவர் மீது காழ்ப்புணர்வு கொண்டிருந்தது என்பதுதான் உண்மை.


அந்தக் கொலை நடைபெற்று இன்று ஐம்பது வருடங்கள் தாண்டிவிட்ட நிலையிலும், இன்னமும் அக் கொலை ஒரு மர்மமாகவே பார்க்கப்படுகிறது. அக்கொலை பற்றிய விடயங்கள் வதந்தியாகவே இருந்து வந்திருக்கின்றன. தற்பொழுது இந்த பழைய விவகாரத்தைப் பரபரப்பாக்கப்போகும் ஒரு புத்தகத்தை ஒருவர் எழுதிக் கொண்டிருக்கிறார்.




"காஸ்ரோவின் இரகசியங்கள்" என்பதே அந்தப் புத்தகத்தின் தலைப்பு. அவர் அதை எழுதிக் கொண்டிருக்கும்போதே அந்தப் புத்தக விற்பனைக்குரிய விளம்பர நடவடிக்கைகள் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ பத்து அமெரிக்க டொலர் பெறுமதியான புத்தகத்தை அந்த வெளியீட்டு நிறுவனம், உலகம் முழுக்க இலவசமாக விநியோகம் (FREE DELIVERY) செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருப்பவர் ஒரு முன்னாள் சி.ஐ.ஏ உளவாளி. அவர் பெயர் பிரைன் லொரெல்.

இவர் கென்னடி சுடப்பட்டவேளை கியூபாவின் நடவடிக்கைகளை அவதானிக்கும் சி.ஐ.ஏ இன் உளவாளியாகவும், ஆய்வாளராகவும் இருந்திருக்கிறார். பின்னர் சி.ஐ.ஏ யின் இலத்தீன் அமெரிக்காவிற்கான நடவடிக்கைகளுக்குரிய தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தவர். தற்பொழுது அமெரிக்க - மியாமிப் பல்கலைக்கழகத்தில் கியூபா

(18 ஆம் பக்கம் பார்க்க)



# ஈழத்து மடப்பண்பாடும் தெருமூடி மடமும் 02

யதார்த்தன்

சோழர் காலத்திலும் தமிழ் நாட்டில் சமயம் சார்பான மடப்பண்பாடே செறிவாக வளர்ந்து வந்தது. ஆயினும் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின்னர், விஜயநகர மன்னர்களின் பிரதிநிதிகள் தமிழ்நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட பின்னர் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையிலும் பஞ்சம் போன்றவை ஏற்பட்ட போதும் உணவு, ஓய்வு, ஆதரவு வழங்கும் சமூக நிலைப்பட்ட மடப்பண் பாட்டு செறிவாகத் தோற்றியது. சமயச் சார்பான மடங்கள் ஒரு பக்கத்தில் இந்து சமயத்தை ஆதரித்த நாயக்கர் பிரதிநிதிகளின் அரசக்கட்டின் ஆதரவுடன் ஆதீனங்களாக மாறிக் கொண்டன.

(மடம் மற்றும் மடப்பண்பாட்டின் வளர்ச்சி தொடர்பான மேலதிக வாசிப்புக் களை ஆழமாக தெரிந்துகொள்வதற்கும் மேலதிக நூல்களை அணுகுவதற்கும் குமுதா சோமசுந்தர குருக்களின் - யாழ்ப் பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக்கலையும் நூலை பரிந்துரைக்க நினைக்கிறேன்)

நாயக்கர் காலம் என்பதை நன்கு கவனிக்கும்போது நாயக்கர் காலம் தமிழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் ஈழத்தில் ஆரியச்சக்கரவர்த்தி களின் ஆட்சி நடைபெற்று வந்ததையும் ஞாபகப்படுத்திக்கொள்வோம்.

## இலங்கையின் மடப்பண்பாடு

இலங்கையின் மடப்பண்பாடு பற்றிய தகவல்கள் கி.மு 2 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கிடைக்கின்றன. கி.பி 10 நூற்றாண்டு வரை இலங்கையில் மடப் பண்பாடு இருந்தமை பற்றிச் சிங்கள, பாளி இலக்கியங்கள் தகவல்களைத் தருகின்றன. ஆயினும், சிங்கள சமூகக் குழுமத்தில், தமிழ்நாட்டைப் போல, பெரும்பான்மை மடங்கள், சமயம் சார்ந்து பௌத்த பள்ளிகளாகவே தொழிற்பட்டு இருக்கின்றன. பிரிவேனாக்களுடன் இணைந்து, அவை செயற்பட்டதாக வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் தமிழ்க் குழுமத்தினைப் பொறுத்த வரையில் தமிழ்ப் பிரதேசத்தில் அமைக் கப்பட்ட மடங்களில் பெரும்பான்மை யானவை துறவு சார்ந்தவையாகவோ, வழிபாடு சார்ந்தவையாகவோ இருக்க வில்லை. அவை பெரும்பாலும் சமூக மயப்பட்டே இருந்து வருகின்றன. ஈழத்தில், கோயில்களில் இருக்கும் மடங்கள் கூட, துறவிகள் தங்குவது, சமயம் வளர்ப்பது என்பதைத்தாண்டி, அன்னதானம் முதலான சமூக நிலைப் பட்ட ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

ஈழத்துச் தமிழ்ச்சமூகத்தின் மடப் பண்பாடு பற்றி ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் இருந்தே வரலாற்றுத் தகவல்கள் கணிசமாகக் கிடைக்கின்றன.

எனினும், மடப்பண்பாடு வடக்கு, கிழக்கில் உச்சம் பெற்றது. காலனிய மற்றும் காலனியத்திற்குப் பிந்திய காலங் களிலேயேயாகும். குறிப்பாக ஒல்லாந்தர் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் அதிகளவான மடங்கள் வடக்கிலும், கிழக்கிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒப்பீட்டளவில் வடக்கில் அதிகமான மடங்கள் காணப்பட்டன.

கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமயங்க ளின் தேவாலயங்களுக்கும் தேவ ஊழியச் சபைகளுக்கும் சொந்தமான என்று சொல் லப்படும் துறவிகளின் மடங்களும் அதிக மாக கட்டப்பட்டன. கத்தோலிக்க துறவி கள் தங்கும், பிரார்தனை செய்யும் இடங்க ளான அவை முற்றிலும் சமயம் சார்ந்து, பெரும்பாலும் தேவாலயங்களுக்கு அருகில் அமைக்கப்பட்டன. இன்று வரை, பல இடங்களில் அவை இயங்கி வருவதுடன், அவற்றின் மடக்கலை மடப்பண்பாடு என்பன தனியான ஆய்வுக்கான சாத்தியங்களுடன் மரபுரி மைச் சின்னங்களாக மாறியுள்ளன.

இவ்வகையில் ஈழத்தின் மடங்கள் உருவாகவும் இயங்கவும் பின்வரும் காரணிகளைப் பிரதானமாகக் குறிப்பிட இயலும்:

**மதப்பிரசாரம்**

1. சாதிய நடைமுறைகளைக் கையாளுதல்.
2. யாத்திரைகள்.
3. அன்னதானம் முதலான உணவு வழங்கல்கள்.
4. உபயம், நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள்.
5. காலநிலைப் பயணம், பொழுது போக்கு.

## மதப்பிரசாரம்

ஐரோப்பியர் வருகையின் பின்னர், ஐரோப்பியர் கிறிஸ்தவ, புரட்டஸ்தாந்து சமயப் பரப்புரைகளை மேற்கொண்டனர். இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தொடங்கி, இலங்கை முழுவதும் கிறிஸ்தவ ஆலயங்களையும், அவை சார்ந்த மடங்க ளையும் அமைத்தனர். கிறிஸ்தவ மடங்க ளின் வருகையும், அதன் செயற்பாடும் ஐரோப்பிய தளத்தில் சுதேச பண்பாட்டை கையாண்டவிதம், தனியான ஆய்வுக்குரிய ஒன்று. அக்கிறிஸ்தவ மதப் பிரசாரத்துக்கு எதிராக, சுதேச மதங்களைப் பாதுகாக்க ஆறுமுகநாவலர் போன்றோர் மடங்களை அதிகம் பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் மதம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு கோயில் மண்டபங்களை விடுத்து மடங் களை தெரிவு செய்ய வடக்கின் சாதி அமைப்பு பிரதான காரணமாக இருந்தது.

## சாதிய நடைமுறைகளைக் கையாளுதல்

யாழ்ப்பாணத்தை மையம் கொண்ட சாதிய நடைமுறைகள், யாழ்ப்பாண மேல் தட்டு வர்க்கத்தினால் மிக நுட்பமாகக் கையாளப்பட்டன. சுதேச சமயங்களைப் பிரசாரம் செய்யும் பொருட்டு, பொது மக்களை அணுகும்போது, சாதிய அடக்கு முறை மனநிலை கொண்ட நாவலர் போன்றோர் கோயில்களுக்குள் தாங்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதிய மக்கள் வந்துவிடக்கூடாது என்பதற்காக மடங்க ளிற்கு அவர்களை வரச்செய்து மதப் பிரசாரங்களையும், புராணபடனங்க ளையும் முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணத்தில் கீரிமலை சிறாப்பர் மடம் பிரபலமாகவிருந்த மடங்களில் ஒன்று. அம்மடத்தின் வாசலில் பின்வரும் குறிப்பு காணப்படுகின்றது

"இம்மடத்தில் சைவ சமயிகள் அல்லாத பிற மதத்தவர்கள் தாக சாந்தி செய்யலாகாது, வசிப்பதற்கு இடங்கொடலாகாது, கட்ட டத்தின் உள்ளாக மாமிசம் புசித்தல், அசூசைப்படுத்துதல், சுருட்டுப் புகைத்தல் ஆகாது, போசனம் செய்பவர்கள் எச்சி மாற்றி போகவேண்டியது, வசிப்பவர்கள் சமாதானமாகவிருந்து போகவேண்டியது" என்று இக்குறிப்பு தொடர்ந்து செல்லும்.

இங்கே வெளிப்படையாகப் பார்த்தால் சமயம் சார்பானவர்களை மட்டும் குறிப்ப தாக இவ்வறிவுறுத்தல் தெரியும். ஆனால் இது சாதிய கையாள்கையுடன் தொடர்பு பெற்ற ஒன்றாக இருக்கிறது. எப்படியெ னில் காலனிய காலத்தில் ஐரோப்பிய சமயப் பிரசாரகாரர்கள் ஈழத்தின் ஒடுக்கப் பட்ட சமூகத்திடம் சென்றே அவர்களை தமது சமயங்களைப் பின்பற்ற ஆற்றுப்ப டுத்தினர். அதனால் அக்காலத்தில் பெரும் பாலான ஒடுக்கப்பட்ட சமூகத்தினரே கத்தோலிக்கத்தைப் பின்பற்றினார்கள். எனவே "பிற சமயத்தவர் என்று குறிப்பிடு வதன் உள்ளார்ந்த நோக்கம், சில மடங்க ளுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை உள்ளெ டுக்கக் கூடாது" என்பதனாலேயே ஆகும். அவை பெரும்பாலும், கோவில் சார்ந்த மடங்களாக இருந்துள்ளன. ஆறுமுக நாவலர் போன்ற மேட்டுக்குடியினர் ஐரோப்பிய கத்தோலிக்கர்களுடன் அன்பு பாராட்டினாலும் சாதிய அடிப்படையில், மதம் மாறியவர்களைச் சாதிய நடைமுறை களின் பொருட்டு நுட்பமாகவும் திட்ட மிட்டும் கையாண்டிருக்கிறார்கள்.

இது போன்ற சாதிய நடைமுறைகள் மடங்களில் கையாளப்பட்ட விதங்கள் பற்றிய குறிப்புக்கள் நிறையவே கிடைக்கின்றன.


## மடங்களும் யாத்திரைகளும்

இந்துப் பண்பாட்டின் தொடர்ச்சியில் தல யாத்திரைகள் முக்கியமானவை. கதிர் காமம் முதலான கோயில் யாத்திரீகர்கள் ஓய்வெடுக்கவும், உண்ணவும் மடங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக போர்த்துக்கேயர் காலத்தில் அடக்கி வைத் திருந்த சமய அனுட்டானங்கள், ஒல்லாந்தர் காலத்தில் தளர்த்தி விடப்படும்போது யாத்திரைகள் அதிகரித்தன. அதன் பொருட்டு மடங்கள் நிறுவப்பட்டன. யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட மடங்களைப் பற்றி பேராசிரியர் கிருஷ்ண ராஜா சொல்லும்போது "ஒல்லாந்தர் அமைத்த டச்சு வீதிகளிலேயே அதிகமான மடங்களை இனங்காண முடிகின்றது" எனச் சுட்டிக்காட்டுகின்றார். குறிப்பாக அவை ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, தொட்டி, கிணறு என்பவை சூழ்ந்த தொகுதியாக காணப்படுகின்றன. அவ் வகையில் டச்சு வீதிகளில் காணப்பட்ட மடச்சூழமைவு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"அம்பலம் எனக்குறிக்கப்படுகின்ற வீதியோரத்து மடங்களும், ஆவுரஞ்சிக் கற்களும் கூபங்களும் (கிணறுகள்) யாழ்ப் பாணத்தில் எக்காலகட்டத்தில் இருந்து இணைவு பெற்ற நிறுவனமாகத் தோற்றம் பெற்றிருந்தன? என்ற கேள்விக்கு விடை யிறுப்பது கடினமான ஒன்றல்ல. யாழ்ப் பாணத்திற்குரிய ஓரங்குல இட விளக்கப் படமொன்றைப் பார்க்கும் ஒருவர், அம்பலம் எனக்குறிக்கப்பட்ட தங்கு மடங்கள்; டச்சு றோட்டுடன் இணைந்த பிரதான வீதிகளின் முக்கிய தரிப்பு மையங் களில் இருந்தமைக்கான குறியீடுகளைக் காண முடியும். பண்டாரமடம், பண்டத் தரிப்பு, பண்ணாகம், முத்தட்டுமடம், மருதனார் மடம், ஆறுகால்மடம், சங்கத் தானை, பனைமுனை (light house road), நெல்லியடி, சாரையடி, சுப்பர் மடம், ஓட்டுமடம், மடத்துவாசல், தில்லையம் பலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் இத்தகைய தங்குமடங்கள் காணப்பட்டி ருந்தன" என்று சுட்டிக்காட்டுகின்றார்.

(அடுத்தவாரமும்...)







கடந்த வாரம் நடைபெற்ற WWE Royal Rumble போட்டி ஒன்றில் கோல்ட்பேர்க்கை எட்டி உதைக்கும் பிறவுண் ஸ்ரோமன்.

# உன்னைச் சொல்லிக் குற்றமில்லை

தொகுப்பு : சி.விமலன்

**செ**ன்ற வாரம் நடைபெற்ற ஆர்சனல் - பேயோர்ண் முனிச் அணிகளுக்கிடையிலான சம்பியன் லீக் போட்டியில் 5 : 1 என்ற ரீதியில் ஆர்சனல் படுதோல்வி அடைந்திருக்கின்றது. ஒருகட்டத்தில் 1 : 1 என்று ஆட்டம் இரு அணிக்குமே சாதகமாக இருந்தாலும் இரண்டாவது பாதியில் 10 நிமிட இடைவெளிக்குள் பேயோர்ண் முனிச் அடித்த 3 கோல்கள் திருப்புமுனையாக அமைந்தன. இந்தத் தோல்விக்கு ஆர்சனலின் மத்திய கள வீரரான மெசூட் ஓசிலே காரணமென ரசிகர்கள் விமர்சித்துள்ளனர்.



ஜேர்மனி வீரரான ஓசில் 2014ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற அணியில் இடம்பெற்றவர். 2013ஆம் ஆண்டு றியல் மட்றிட் அணியிலிருந்து ஆர்சனல் அணிக்கு ஒப்பந்தமானவர். மேற்படி விமர்சனம் குறித்து ஓசிலின் முகவரான எர்கட் சில கருத்துக்களைக் கூறியுள்ளார்.

"அணி தோல்வி அடையும் பொழுது வீரர்கள் மீது விமர்சனம் எழுவது இயல்பானதே. ஆனால் 11 பேர் விளையாடுகின்ற பொழுது ஒரு வீரரை மட்டும் விமர்சிப்பது ஏற்புடையதல்ல. ஓசில் விடயத்தில் அவரது திறமையைக் கருத்தில் எடுக்காமல் அவரை மட்டும் பலிக்கடா ஆக்குகிறார்கள். ரசிகர்கள் ஓசில் குறித்து இரண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். முதலாவது முக்கியமான போட்டிகளில் அவர் பிரகாசிப்பதில்லை.

இரண்டாவது உடற்தகுதியில் அவர் அதிக சிரத்தை காட்டுவதில்லை. ஆனாலும் இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களையும் எர்கட் மறுத்துள்ளார். சென்ற வருட பிறீமியர் லீக் போட்டிகளில் செல்சியையும் மன்செஸ்ரர் யுனைற்றட்டையும் ஆர்சனல் வீழ்த்தியதில் அவரது பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியுமா? அணி வெற்றி அடையும் பொழுது உடற்தகுதி குறித்து கேள்வி கேளாதவர்கள் தோல்வி அடையும் பொழுது மட்டும் அது குறித்து குற்றஞ்சாட்டுவது விசித்திரமாக உள்ளது.

இந்தப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாகவே இதுகுறித்து ரசிகர்கள் விவாதித்துக் கொண்டார்கள். இது ஒரு கடுமையான போட்டி என்று தெரிந்ததும் இதில் தோல்வி அடையும் பட்சத்தில் அவர்களுக்கு ஒரு பலிக்கடா தேவைப்படுகின்றது. இந்த எண்ணம் தவறானது. வெல்லும் போது எவ்வாறு அணியைப் போற்றுகின்றீர்களோ தோல்வி அடையும் பொழுதும் அணி என்ற உணர்வு வருதல் வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் 100 சதவீத அர்ப்பணிப்போடு விளையாடும் ஓசில், ஆர்சனலுக்குத் தொடர்ந்து விளையாடத் தகுதியானவரே" எனவும் தெரிவித்துள்ளார்.

**கி**ரிக்கெட்டில் ஓர் அணியின் வெற்றியைத் தீர்மானிப்பதற்கு திறமைக்கும் அப்பால் காலநிலைக்கும் முக்கிய பங்குண்டு. மழையால் போட்டி பாதிப்படைவது ஒரு புறம் என்றால் குறித்த நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பொழுது அங்கு நிலவும் காலநிலையும் வீரர்களின் மனோநிலையில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. அதனாலேயே ஒரு நாட்டுக்கு தொடர் ஒன்றில் விளையாடச் செல்லும் பொழுது பயிற்சிப்போட்டிகளில் பங்குபற்றுதலும் அமைகின்றன. இதன் மூலம் ஆடுகளம் குறித்த அனுபவத்தைப் பெறுவதோடு சர்வதேச போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே அந்தக் காலநிலைக்கேற்ப ஓரளவாவது வீரர்கள் தங்களைத் தயார்ப்படுத்தி கொள்வதற்கும் அது ஏதுவாக அமைகின்றது.

# கை... கை... கை... கை வைக்கிறான்...!




ஆனாலும் சில தினங்களுக்கு முன்னதாக இலங்கை அணி, அவுஸ்ரேலியாவுக்கு மேற்கொண்ட 3 இருபதுக்கிருபது போட்டிகள் அடங்கிய குறுகிய தொடரில் காலநிலையோடு தங்களை வாலாயப்படுத்துவதற்கு வீரர்கள் சிரமப்பட்டிருக்கிறார்கள். இலங்கை தொடரை வென்றதால் அது குறித்து அதிகம் பேசப்படவில்லை ஆயினும் முதலாவது இருபதுக்கிருபது போட்டியில மலிங்கவிற்கு ஏற்பட்ட அனுபவத்தின் வாயிலாக அதனை உணரக் கூடியதாக இருந்தது.

இப்போட்டியில் மலிங்க காற்சட்டைப் பையில் அடிக்கடி கை வைத்திருப்பதை அவதானித்த மூன்றாவது நடுவர் அதனை ஆராயுமாறு மைதான நடுவருக்கு அறிவுறுத்தியுள்ளார். இதையடுத்து மலிங்கவை விசாரித்த பொழுது பையில் இருந்த கைசூடாக்கியை எடுத்துக் காட்டியுள்ளார். கைசூடாக்கியை குளிர்நேரத்தில் பயன்படுத்த முடியுமென ஏற்கனவே அறிவித்திருந்தாலும் மலிங்க அது குறித்து நடுவர்களுக்கு முறைப்படி தெரிவிக்காமல் பயன்படுத்தியதாலேயே மேற்படி நிலை ஏற்பட்டிருந்தது. அதேசமயம் நடுவர்களின் எண்ணம் வேறுவிதமாக இருந்தது. போட்டிகளில் பந்தைச் சேதப்படுத்துவதற்காக காற்சட்டைப்பையினுள் சோடா மூடி, இனிப்புப் பதார்த்தம் போன்ற சில பொருட்களை வீரர்கள் வைத்திருக்கக் கூடும் என்றதொரு ஐயத்திலேயே அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# தத்தித் தாவுது மனமே



**த**ற்போதைய தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் கறுப்பின வீரர்களை கோட்டா முறையில் தெரிவு செய்யும் நடைமுறை இருந்து வருகின்றது. இது அவர்களுக்கு நன்மையை ஏற்படுத்தினாலும் வெள்ளையின வீரர்களுக்கு அணியில் தமக்கான நிரந்தர இடம் குறித்த சந்தேகத்தை தோற்றுவித்திருந்தது. இதனாலேயே கைல் அபோர்ட், றீலி றொஸோ, சைமன் ஹார்மர் போன்றவர்கள் தென்னாபிரிக்கத் தேசிய அணியில் இருந்து விலகி இங்கிலாந்து பிராந்திய அணியில் கொல்பார்க் முறையில் விளையாடுவதற்கு முடிவு செய்தனர். கொல்பார்க் முறை என்பது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் ஐரோப்பிய சங்க ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் விளையாடுவதற்குச் சுதந்திரத்தை கொண்டுள்ளனர். அவ்வாறான ஒப்பந்தத்தைக் கொண்ட நாடுகளில் தென்னாபிரிக்காவும் ஒன்று என்பதால் தென்னாபிரிக்க வீரர்கள் அதில் இணைகின்றனர்.

எனவே இவ்வாறு வெள்ளையின வீரர்கள் தொடர்ந்து சென்றுவிடக்கூடாது என்பதை தற்போது கிரிக்கெட் தென்னா பிரிக்கா தாமதமாகவேனும் புரிந்து கொண்டுள்ளது. அதனால் ஐ.பி.எல். பிக்பாஸ் தொடர்களைப் போன்று மிகப்பெரிய இருபதுக்கிருபது போட்டித் தொடர் ஒன்றை வருடந்தோறும் தென்னாபிரிக்காவில் நடத்துவதன் மூலம் அதனைத் தடுத்து நிறுத்த முடியுமென அது நம்புகின்றது. இதன் முதற்கட்டமாக முதலீட்டாளர்களுக்கும் இந்திய வீரர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. குறிப்பாக ஐ.பி.எல். அணிகளை வாங்கிய உரிமையாளர்கள் இந்தத் தொடரில் கலந்து கொள்ள உள்ள எட்டு அணிகளில் சிலவற்றை வாங்கினால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறார்கள். உதாரணமாக கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் கொல்கத்தா நைற் ரைடேஸ் அணியின் உரிமையாளரான நடிகர் ஷாருக்கான் ரினிடாட் அண்ட் டுபாகோ அணியை வாங்கியதைப்போல.

அதேசமயம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்திய வீரர்கள் விடயத்தில் உள்ளூர் மற்றும் சர்வதேச தொடர்களைக் கருத்திற்கொண்டு எதேச்சதிகாரமாகச் செயற்படுகின்றது. வீரர்களுக்கு ஓய்வு தேவை என்ற போர்வையில் அவர்களைஏனைய நாட்டில் நடைபெறும் போட்டித் தொடர்களில் கலந்து கொள்ள அனுமதிப்பதில்லை. ஆனாலும் கிரிக்கெட் தென்னாபிரிக்கா தங்களது தொடரில் இந்திய வீரர்கள் கலந்து கொண்டாலே வணிக ரீதியான அனுகூலத்தைப் பெற முடியும் என்பதை உணர்ந்தே இருக்கின்றது. அதனால் குறைந்தபட்சம் இந்தியத் தேசிய அணியில் விளையாடுவதற்கு ஒப்பந்தமான வீரர்களைத் தவிர்த்து ஏனைய சில வீரர்களையாவது இந்தத் தொடரில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 25.02.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.